
KALKI 3-2-1974 50 காசு

கல்கி





கல்கி

மேலட்டை:

கடல் மல்லை கண்டு


சிரிப்பு சரி; சிணுக்கம் ஏன்?

வண்ணப் படம்: ''திருச்சி மாடர்ன்''



''கல்கி''யில் வெளி வரும் கதைகளில் உள்ள பெயர்கள் எல்லாம் கற்பனைப் பெயர்களே; சம்பவங்களும் கற்பனையே.

கல்கி சந்தா விவரம்	ஒரு வருடம்	ஆறு மாதம்
இந்தியா	ரூ. 26-00	ரூ. 13-00
பிற நாடுகள்	ரூ. 55-00	ரூ. 27-50
இலங்கை (இலங்கை நாணயம்)	ரூ. 30-00	ரூ. 15-00



டாக்டர்கள் கூறுகிறார்கள்:
3 மாதங்கள் ஆன பிறகு, முழுமையான வளர்ச்சி பெற உங்கள் குழந்தைக்குத் தேவை திட உணவு.
பாரெக்ஸ் உங்கள் குழந்தை சீராக வளர்ந்திட, அனைத்தையும் அளிப்பதைப் பாருங்கள். எளிதில் சீரணிக்கக் கூடிய புரதம், கூடவே வைட்டமின், கால்ஷியம், இரும்புச் சத்து மற்றும் கார்போஹைட்ரேட்.
உங்கள் குழந்தையின் வளர்ச்சிக்கு அவசியமான பாரெக்ஸ் அளவு
குழந்தையின் வயது
எவ்வளவு பாரெக்ஸ் தரவேண்டும்
3–6 மாதங்கள்
1–2 தேக்கரண்டியளவு — தினம் இரு முறை
6–9 மாதங்கள்
3–4 தேக்கரண்டியளவு — தினம் மூன்று முறை
9 மாதங்களுக்குப் பிறகு
4–6 தேக்கரண்டியளவு — தினம் நான்கு முறை
இலவசம்! உங்கள் பாரெக்ஸ் புத்தகம் பெற, 20 பைசா தபால் தலை இணைத்து எழுதுக: டிபார்ட்மெண்ட் K.J., த.பெ. 16558, பம்பாய் 18. டபிள்யூ. பி. (எந்த மொழியில் வேண்டுமெனத் தெரிவிக்க)
FAREX
பாரெக்ஸ்®
க்ளாக்ஸோ தயாரிப்பு!
சீரான உடல் வளர்ச்சிக்குக் குழந்தையின் முதலாவது திட உணவு
CMGF-38-104 TM

கல்கி

தமிழ்த்திரு நாடுதன்னைப் பெற்ற தாயென்று கும்பிடடி பாப்பா —பாரதியார்

மலர் 33 : : இதழ் 27

படித்த ஊழியர்களே, பண்பற்ற போக்கு ஏன்?

வேலை நிறுத்தங்கள், உள்ளிருந்து வேலை செய்யாமை, ஆர்ப்பாட்டங்கள் போன்றவை தொழிற்சாலைகளில் தொழிலாளர்கள் மட்டுமே தங்கள் கோரிக்கைகளை வலியுறுத்தக் கையாளும் ஆயுதங்கள் என்ற நிலைமை, வேகமாக மாறிக் கொண்டு வருகிறது. படித்த வெள்ளைச் சட்டை ஊழியர்களுக்கும் பரவி, காரியாலயங்களையே ஸ்தம்பிக்கச் செய்யும் நிலைமை ஏற்பட்டுக்கொண்டிருக்கிறது. ரயில்வே போக்குவரத்து, விமானப் போக்குவரத்து, மருத்துவமனைகள் ஆகியவை இத்தகைய படித்த மேதைகளின் தொழிற்சங்க நடவடிக்கைகளால் பாதிக்கப்பட்டுள்ளன.

பண்பாடு பற்றி அறிந்திருக்க வேண்டிய படித்தவர்கள் நேரடி நடவடிக்கை மேற்கொள்ள வேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளதென்றால், அடிப்படைத் தவறுகள், குறைபாடுகள் நிச்சயம் இருக்கத்தான் வேண்டும் என்றுதான் மேலெழுந்தவாரியாகப் பார்க்கும்போது எண்ணத் தோன்றும். ஆழ்ந்து கவனிக்கும் போது அப்படி ஒன்றும் இருப்பதாகத் தெரியவில்லை.

எங்கும் உள்ளது போன்ற சம்பளத் தகராறுகள்தாம் இங்கேயும். ஆனால் மற்றத் துறைகளுடன் ஒப்பிட்டுப் பார்க்கும்போது எல். ஐ. ஸி. ஊழியர்களின் சம்பள விகிதங்கள் குறைவு என்று சொல்லுவதற்கில்லை. உதாரணத்துக்கு இரண்டு: ஒரு பியூனின் சம்பளம் மாதம் 336 ரூபாயில் ஆரம்பித்து 575 வரையில் போகிறது. இதை இனி 404ல் ஆரம்பித்து 662க்கு உயர்த்த நிர்வாகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. ஒரு கிளார்க்கின் சம்பளம் இப்போது 419ல் ஆரம்பித்து 1174 வரையில் போகிறது. இதை இனி 514ல் ஆரம்பித்து 1328 வரையில் உயர்த்த நிர்வாகம் ஒப்புக் கொண்டிருக்கிறது. மற்ற அந்தஸ்தில் உள்ளவர்களுக்கும் இதே விகிதத்தில் தாராளமாக ஊதியங்கள் வழங்கப்படுகின்றன.

இவை போதவில்லை என்று வேலை நிறுத்தம் செய்யும் பண்பாளர்கள் இரண்டு விஷயங்களை முக்கியமாக உணர வேண்டும். ஒன்று, இந்தியாவில் உள்ள 55 கோடி மக்களில் நாற்பது சதவிகிதத்தினர் மாதம் முப்பது ரூபாய்க்கும் குறைவாகவே தங்கள் ஆதாரத் தேவைகளான உணவு, உடை இருக்கை ஆகியவற்றுக்குச் செலவு செய்ய முடிகிறது. அவர்களுடைய வருமானம் அவ்வளவுதான். தேவைக்கு ஏற்ற சம்பளம் என்ற கோட்பாடு, ஏற்கனவே ஓரளவுக்கு வசதி படைத்தவர்களால் மேலும் அதிக வசதிகளைக் கோருவதற்குத்தான் பயன்படுத்தப்படுகிறது. வசதி ஒன்றுமே இல்லாத பெருவாரியான மக்களின் தேவையை எந்த நிர்வாகம், எந்த அரசாங்கம் பூர்த்தி செய்ய முன்வருகிறது? அவர்கள் யாருக்கு எதிராக வேலைநிறுத்தம் செய்வது? யாரிடம் மகஜர் கொடுப்பது? மேலும் தேவையின் அளவையும், அவசியத்தையும் எந்த அளவுகோல் கொண்டு எந்த அடிப்படையில் நிர்ணயிப்பது? இதை எல்லாம் சிறிது சிந்தித்தால் எல்.ஐ.ஸி. ஊழியர்களின் நேரடி நடவடிக்கையில் பொருள் இல்லை என்பதைச் சுலபமாகவே உணரலாம். இப்போதுள்ள சம்பள விகிதங்களைப் பார்க்கும் போது பல பட்டதாரிகள்கூட எல். ஐ. ஸி. அலுவலகத்தில், பியூனாக வேலை பார்க்கத் தயாராகவே இருப்பார்கள்!

நான்கு தடவைகள் பேச்சு வார்த்தைகள் நடத்திக் கணிசமான சலுகைகளை நிர்வாகத்தினரிடமிருந்து கிடைக்கச் செய்து கொண்டுள்ள எல்.ஐ.ஸி. ஊழியர்கள், பேச்சுவார்த்தை முறைகளைக் கைவிட்டு, நேரடி நடவடிக்கைகளில் ஈடுபட அவசியம் இருப்பதாகத் தெரியவில்லை. பலன் கொடுக்கும் முறையைக் கைவிட்டு இதர நடவடிக்கைகளுக்கு ஏன் தாவ வேண்டும்? எனவே, கண்டிப்பு காட்டினால்தான் நிலைமை சீராகும் என்ற நிர்ப்பந்த நிலைமையை நிர்வாகத்துக்கு உண்டாக்கியுள்ளனர்.

மேலும், தங்கள் நடவடிக்கைகளினால், பல்லாயிரக்கணக்கான பாலிஸி

தாரர்களின் நலன் பாதிக்கப்படுகிறது என்பதை இந்தப் பண்பாளர்கள் உணரவில்லை என்றே தோன்றுகிறது. எந்த பாலிஸிதார் வர்க்கத்தின் பிரீமியம் தொகையிலிருந்து, தங்களுடைய சம்பளத்தைப் பெற்றுக் கொண்டிருக்கிறார்களோ, அந்த வர்க்கத்தினருடைய நன்மைகளைச் சிறிதும் கருத்தில் கொள்ளாது அவர்களைப் பாதிக்கும் முறையில் நடந்து கொள்வது நன்றிகெட்ட தன்மையே ஆகும். இந்தச் சாமானிய உண்மையை எல். ஐ. ஸி. ஊழியர்கள் உணரத் தவறிவிட்டது அதிசயம்!

இந்த இதழ் அச்சாகி வெளிவரும் போது இப்போதுள்ள நிலைமை மாறி, அமைதியும் எல்.ஐ.ஸி. ஊழியர்களின் வேலைத்திறனில் . சுறுசுறுப்பும் ஏற்படும் என்று நம்புவோம்.

தமிழ் நாட்டிலே...

தீரன்

அகில இந்திய வயிற்றுக் கட்சி!

வரப் போகிற கோவை நாடாளுமன்ற இடைத் தேர்தலில் போட்டியிடும் கட்சிகளில் மேலே கண்ட விநோதமான பெயரையுடைய கட்சியும் ஒன்று. காங்கிரஸ், கம்யூனிஸ்ட், இடது கம்யூனிஸ்ட் வேட்பாளர்களோடு சமமாக இந்த 'அகில இந்திய வயிற்றுக் கட்சி' யும் தனது வேட்பாளரை நிறுத்தி வைத்திருக்கிறது. அதோடு வாக்காளர்களுக்கு மிக மிகக் கவர்ச்சியான 'வாக்குறுதி' ஒன்றையும் தன்னுடைய பெயருக்குப் பொருத்தமானவிதத்தில் இக்கட்சி அளிக்க முன்வந்திருக்கிறது. இக்கட்சி, ''ஒரு படி அரிசி ஒரு ரூபாய்க்குத் தான் விற்கப்பட வேண்டும். அதுதான் எங்கள் கொள்கை'' என்பதைச் சொல்லிப் போட்டியிடுகிறது. இதைவிட வேடிக்கை வயிற்றுக் கட்சியின் அபேட்சகராகப் போட்டியிடும் வேட்பாளர் கோவை மாவட்டக் கலெக்டர் அலுவலகத்தின் முன்னிலையில் ஐந்து மூட்டை அரிசியை ரூபாய்க்கு ஒரு படி வீதம் விற்று அதன் மூலம் வருகிற தொகையை வைத்தே தம்முடைய டெபாஸிட்டைக் கட்டப் போகிறார் என்பதுதான். இவர் விற்கப் போகிற ஐந்து மூட்டை அரிசிக்கு ஏகப்பட்ட கிராக்கி இருக்கும் என்பதில் சந்தேகமில்லை. காரணம் அவ்வளவு மலிவாக அரிசி இன்று மார்க்கெட்டில் வேறு எங்குமே கிடைக்க வழி இல்லை.

பி.கு.: கடைசியாகக் கிடைத்த செய்திப்படி லைசென்ஸ் இன்றி அரிசி விற்கக் கூடாது எனப் போலீஸார் இவரைத் தடுத்துவிட்டார்களாம்!

அசுத்த மயம்

சென்னையில் உள்ள லாயிட்ஸ் ரோடில் சுகாதாரக் குறைவாகவும் அசுத்தமாகவும் இருக்கிற ஒரு பகுதியில் ஒரு மருந்துக் கடை வாசலில் கீழ் வருமாறு போர்டு எழுதி வைத்திருக்கிறார்கள்.

பாதசாரிகளே! சாலையைப் பார்த்து நடக்கவும்!
இப்பெருஞ் சாலையில் எங்கு வேண்டுமானாலும் யார் வேண்டுமானாலும் அசுத்தங்களைச் செய்யலாம்.
கேட்பாரில்லை ! கேட்பாரில்லை !
பாரீர் நகரின் முன்னேற்றத்தை.
வாழ்க, அசுத்தம் !
வாழ்க, அதிகாரிகள் !
வாழ்க, வாக்காளப் பெருமக்கள் !

இப்படி எழுதி வைத்திருப்பது பலருடைய கவனத்தைக் கவர்கிறது. இதை நின்று படிப்பதற்குப் பெருங்கூட்டம் கூடுகிறது. ஆனால் எழுதி வைத்தவரின் நோக்கம் நிறைவேறும் வகையில் சுகாதாரப் பணிகள் என்று நடக்கும் என்றுதான் தெரியவில்லை.

சுற்றுலாக் காட்சியில் சுய விளம்பரம்!

தமிழ் நாடு சுற்றுலா வாரியம் நடத்துகிற பொங்கல் பொருட்காட்சி என்கிற 'ஊதுவத்தி — வளை — ஜவுளிக் கடைத் தெருவில்' சில அரசாங்கத் துறைகளின் அரங்கில் மிகவும் சாதுரியமாகத் தி.மு.க.வின் சுய விளம்பர வேலைகள் செய்யப்பட்டுள்ளன.

தமிழ்நாடு செய்தித் துறை அமைத்துள்ள பூம்புகார் அரங்கில் சிலப்பதிகாரத்தைச் சித்திரிக்கும் காட்சிகளோடு கலைஞர் படங்கள் காட்சிகள் — கண்ணொளி வழங்கல் — இது வழங்கல் அது வழங்கல் — இவை யெல்லாம் நுழைக்கப்பட்டிருக்கின்றன. கோவலன்— கண்ணகி — மாதவி — என்று பார்த்து வருகிற பார்வையாளர் திடீரென்று கலைஞரின் அதிவீர சூரப் பிரதாபங்களையும் பார்க்காமல் தப்ப முடியாது. அவற்றைத் தனியாக டாக்டர் கலைஞர் அரங்கு என்ற பெயரிலேயே வேறோர் இடத்தில் வைத்திருக்கலாம். சிலப்பதிகாரக் காட்சி — பூம்புகார் அரங்கு — எனக் காண்பித்துப் பார்வையாளர்களை உள்ளே தந்திரமாக ஏமாற்றி வரவழைத்து இப்படிக் கலைஞர் புகழ் பாடும் படங்களையும் ஊடுருவ வைத்திருக்க வேண்டியதில்லை.

இதேபோலத் தமிழ் நாட்டின் மாதிரி கிராமமாக அமைக்கப்பட்டுள்ள 'புதுப்பட்டி கிராமத்தில்' ஒரு குடிசை தி.மு.க. நிறமாகிய கறுப்பு — சிவப்பு நிறத்தில் காட்சியளிக்கிறது. அதே கிராமத்துக்குள் 'அண்ணா தேநீர் விடுதி' என்ற பெயரில் கலைஞர் — அண்ணா படங்கள் தொங்குகிற தேநீர் விடுதி ஒன்றும்


24 ஆண்டுகள்
குடியரசு
இந்திய மக்கள்
'அவசர நிலைப் பிரகடனம்'
ரொம்பத் தாங்க்ஸ். ஆனால் இதில் எண்ணெய் இல்லையே
அரபு நாடுகள்
சமாதானம்
இஸ்ரேல்
அப்புறமா வாய்யா!
ஸ்ட்ரைக் ஜுரம்
டாக்டர்

இருக்கிறது. மாதிரி கிராமத்தைப் பார்க்கும் அந்நிய நாட்டார் ஒருவர் (நல்லவேளையாக இந்தப் பெட்டிக்கடை பொருட்காட்சியை அந்நிய நாட்டார் யாரும் அதிகம் பார்க்க வருவதாய்த் தெரியவில்லை.) தமிழ் நாட்டுக் கிராமத்தில் வீடுகளுக்குக் கறுப்பு — சிவப்பு பெயின்ட் அடித்திருப்பார்கள் என்றோ, அங்குள்ள டீக்கடை நிச்சயமாக அண்ணா தேநீர் விடுதியாகத்தான் இருக்கும் என்றோ எண்ணிக் கொண்டு திரும்பிப் போக வேண்டும் என்ற கருத்தா ? பொருட்காட்சியில் ஓரிடத்தில் பாரத ஜனாதிபதியோடு கலைஞர் ஜோராக சிரித்துக் கொண்டிருக்கிற படம் மிகப் பெரியதாக என்லார்ஜ் செய்து நிறுத்தப்பட்டிருக்கிறது. தம்மிடம் வகையாகச் சிக்கிக் கொண்ட தமிழ் நாட்டின் அப்பாவி மக்களைப் பார்த்துத்தான் கலைஞர் படத்தில் அப்படிச் சிரிக்கிறாரோ என்னவோ ?

வேதனை தரும் விளையாட்டு

அரசியலில் தனக்கு அடங்காமலும் பிடிபடாமலும் போய் விட்ட மக்கள் ஆதரவு என்கிற காளையைப் பிடிக்கத் தி.மு.க. ஜல்லிக் கட்டு நடத்தி வருவதாலோ என்னவோ கழக ஆட்சி அந்தக் கலையை ஊர் ஊராக நடத்த ஆசைப்படுகிறது. ஆனால் அரசு சொல்வது போல் எங்கும் வெளிநாட்டுப் பயணிகளை அது கவரவோ, கூட்டவோ முடியவில்லை.

மதுரையை அடுத்த அலங்காநல்லூர் என்னும் கிராமத்தில் பொங்கல் வாரத்தை முன்னிட்டு நடந்த ஜல்லிக் கட்டில் எழுபத்திரண்டு பேர் காயமடைந்து ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டதாகத் தெரிகிறது.

சென்னையில் நடந்த ஜல்லிக்கட்டில் அரங்கின் ஒரு பகுதியில் பார்ப்பவர்களுக்கு மிக அருகே காளைகளைக் கட்டியதால் இரசிகர்கள் காளைகளுக்குப் பயந்துகொண்டே காட்சியை இரசிக்க வேண்டியிருந்ததாம். இதனால் இரசிகப் பெருமக்களுக்கும் — காளை சொந்தக் காரர்களுக்கும் ஒரு பூசலும் தகராறும்கூட நடந்திருக்கிறது. ஒரு மாடு காலரியில் புகுந்ததால் ஒரு பெண் காயமுற்றிருக்கிறார். தக்க பாதுகாப்புக்களை மேற்கொள்ளாது பலருக்கு வேதனை தந்து ஆஸ்பத்திரிக்கு அனுப்பும் விளையாட்டாக அதை நடத்துவதைவிட நடத்தாமல் இருப்பதே மேல்.

போலீஸ் நிலையம்

கழக விழாக் கூடமாகிறது!

கன்னியாகுமரி மாவட்டத்தில் உள்ள ஒரு போலீஸ் நிலையத்தில் தி.மு.க. உள்ளூர் செயலாளர் தலைமை வகித்துக் கலைஞர் படத்தைத் திறந்து வைக்கும் விழாவை நடத்தியிருக்கிறார். மற்றொரு தி.மு.க. பிரமுகர் படத்தைத் திறந்து வைத்திருக்கிறார். போலீஸ்காரர்களும், ஊழியர்களும், 'கருணாநிதி வாழ்க!' என்று முழக்கமிட்டுக் கூறியிருக்கிறார்கள். சப்–இன்ஸ்பெக்டர் விழா முடிவில் நன்றி கூறியதாகத் தெரிகிறது.

அது போலீஸ் நிலையமா — கழகக் காரியாலயமாஎன்ற சந்தேகம் அந்த ஊர் மக்களுக்கு ஏற்பட்டிருப்பதாகச் சொல்லப்படுகிறது. சட்டம்ஒழுங்கைப் பாதுகாக்க வேண்டிய காவல் நிலையமே இப்படிக் கட்சி அலுவலகம்போல் ஆகிவிட்டால் அந்த ஊரிலுள்ள மற்றக் கட்சிக்காரர்களுக்கு எப்படி அங்கிருந்து நியாயம் கிடைக்கும்?

தேர்தல்கள் வந்து விட்டன

இதோ வருகிறது, அதோ வருகிறதுஎன்று எதிர்பார்த்த கோவை இடைத் தேர்தல்களும்

ராஜாஜி சிந்தனை


விதிவசத்தால் ஒரு காரியம் கைகூடவில்லையாயினும் நாம் அதற்காகப் பட்ட மெய்வருத்தம் வீணாகாது. முயற்சியின் நற்பயனை அடைவோம். முயற்சியே நாம் பெறும் கூலியாகிவிடும். முயற்சியின் பெருமை என்னவென்றால் அது ஒரு காரியத்தில் வெற்றி பெறும் வழி. அது முடியாது போயினும் நாம் செய்த முயற்சி நம்முடைய மனம், உடல் இரண்டின் பலத்தையும் உயர்த்தும். அது பெரிய லாபம். எந்த நல்ல முயற்சியும் நம்முடைய ஆன்ம சக்தியை வளர்க்கிறது. எண்ணிய கருத்து ஈடேறவில்லையாயினும் ஆன்ம சக்தியை வளர்த்த பயன் உண்டு. அது பெரும் பயன். விதியின் போக்கைக் கண்டு மயங்க வேண்டாம். இது பொருள் தேடும் முயற்சிக்கும் மனத்தை அடக்கும் முயற்சிக்கும் இரண்டுக்கும் பொருந்தும். '' நான் சொல்லும் முறையில் முயற்சியே பெரிய பயனைத் தரும். சிறிய முயற்சியும்கூடப் பயன் தரும்'' என்று கீதையில் கண்ணன் சொல்லியிருக்கிறான்.

பாண்டிச்சேரி தேர்தல்களும் வந்தேவிட்டன. முதன் முதலாக இத்தேர்தல்களில் காங்கிரஸின் இரு பிரிவுகளும் இங்கே சேர்ந்து போட்டியிடுகின்றன. கோவை — நாடாளுமன்றம் — சட்டசபைத் தேர்தலில் ஸ்தாபன காங்கிரஸ் மட்டுமே நிற்கிறது. புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதியில் இந்திரா காங்கிரஸ் மட்டுமே நிற்கிறது. புதுச்சேரி சட்டசபைத் தேர்தலுக்கான முப்பது தொகுதிகளில் 16ல் ஸ்தாபன காங்கிரஸும் 14ல் இந்திரா காங்கிரஸும் நிற்கின்றன. தேர்தல் பிரசார வேலைகளை இரு காங்கிரஸும் ஒரு பொது அடிப்படையில் ஒருங்கிணைந்து செய்யும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது. ஸ்தாபன காங்கிரஸ் தன்னுடைய ராட்டை சுற்றும் பெண் சின்னத்திலும், இந்திரா காங்கிரஸ் பசுவும் கன்றும் கொண்ட சின்னத்திலும் போட்டியிடும். கோவை நாடாளுமன்றத் தொகுதியில் வ. கம்யூனிஸ்டு, இடது கம்யூனிஸ்டு வேட்பாளர்களும் போட்டியிடுகின்றனர். தி.மு.க. அ.தி.மு.க. கட்சிகளும் பாண்டிச்சேரிக்கான தங்கள் வேட்பாளர் பட்டியல்களை அறிவித்து வருகின்றன. கோவை நாடாளுமன்றத் தொகுதியில் இரு காங்கிரஸ்களும் ஒருங்கே ஆதரிக்கும் ஸ்தாபன காங்கிரஸ் வேட்பாளராக எஸ். வி. லட்சுமணன் நிற்கிறார். புதுச்சேரி நாடாளுமன்றத் தொகுதியில் இரு காங்கிரஸ்களும் ஆதரிக்கும் இந்திரா காங்கிரஸ் வேட்பாளராக திரு சிவப்பிரகாசம் என்பவர் நிற்கிறார்.

வேட்பாளர்களின் பட்டியலை அறிவிக்கும் போது தமிழ்நாட்டில் இரு காங்கிரஸ் தலைவர்களும் ஒரே இடத்தில் சேர்ந்து சந்தித்து அறிவித்திருக்கிறார்கள். பிப்ரவரி மாதத் தொடக்கத்தில் தேர்தல் பிரசார வேலைகள் வேகமாக ஆரம்பமாகி நடைபெறும் என்று தெரிகிறது. பிப்ரவரி மாத இறுதிக்குள் தேர்தல் முடிவுகள் தெரிந்து விடும். இரு காங்கிரஸும் சேர்ந்து போட்டியிடும் முதல் தேர்தல் என்ற ஒரு காரணத்தால் இந்தத் தேர்தல் முடிவுகளின் விளைவை வரலாற்று முக்கியத்துவத்தோடு யாவரும் எதிர்பார்க்கிறார்கள். வருகிற பொதுத் தேர்தலுக்கு இந்த விளைவே முன்னோடியாகவும் இருக்கும்.

வாரியாரும் குறளாரும்

திரு கோ. பூவராகன் எம்.பி.யைத் தலைவராகக் கொண்ட தமிழ்நாடு மக்கள் பேரவை என்ற அமைப்பு ஜனவரி மாத இறுதி வாரம் சென்னையில் திருமுருக கிருபானந்தவாரியாரையும், திருக்குறளார் முனிசாமியையும் பாராட்டி ஒரு பெரிய விழா நடத்தியது. விழாவில் திரு காமராஜ் அவர்கள் கலந்து கொண்டு வாரியாரையும், திருக்குறளாரையும் பாராட்டி இருவரும் மக்களுக்குப் பக்தியையும் நல்லொழுக்கத்தையும் எடுத்துச் சொல்லி வரும் சிறப்பை வாழ்த்தினார். திருப்பனந்தாள், தருமபுர ஆதீனங்களின் சார்பில் வாரியாருக்கும் திருக்குறளாருக்கும் பொன்னாடைகள் போர்த்தப்பட்டன. பொன்னான சேவைக்குப் பொன்னாடை பொருத்தமே.



உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்கு வைடமின்களும், தாதுப் பொருள்களும் இன்றியமையாதவை.

அவை போதுமான அளவில் கிடைக்கின்றனவா?



வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்தைப் பாதிக்கக்கூடும். சோர்வு, ஜலதோஷம், பசியின்மை, உடல் இளைத்துப்போதல், சரும உபாதைகள், மற்றும் பல் உபாதைகள். இவற்றிற்கு மூலகாரணம் சாதாரணமாக, இன்றியமையாத வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறைதான். இருப்பினும், வைடமின்களும், தாதுப் பொருள்களும் பெரும்பாலும் அலட்சியம் செய்யப்படுகின்றன. மிகவும் கவனமாகத் திட்டமிடப்பட்ட உணவில் கூட இவற்றின் பற்றுக்குறை காணப்படுகிறது. வளமான உணவு எல்லாம் சரிவிகித உணவாக இருப்பதில்லை; விதவிதமான உணவுகளிலும், வைடமின்கள் மற்றும் தாதுப் பொருள்களின் பற்றுக்குறை இருக்கக் கூடும். அப்படியானால், அத்தியாவசியமான வைடமின்களும், தாதுப் பொருள்களும் – அதுவும் சரியான விகிதங்களில் – உங்கள் குடும்பத்திற்குக் கிடைக்கின்றன என்று நிச்சயமாக எப்படிச் சொல்ல முடியும்?

உங்கள் குடும்பத்தில் ஒவ்வொருவருக்கும், தேவையான அளவுகளில் இந்த இன்றியமையாத போஷாக்குச் சத்துக்கள் கிடைப்பதை உறுதிப் படுத்திக் கொள்ள, அவர்களுக்கு விம்க்ரான் – ஸ்க்விப் பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள் – கொடுங்கள், தினம் ஒரு மாத்திரை வீதம். இந்த ஆரோக்கியமான வழக்கத்தை இன்றே ஏன் ஆரம்பிக்கக்கூடாது?

விம்க்ரானில் 11 முக்கியமான வைடமின்களும், 8 தாதுப் பொருள்களும் சரியான அளவுகளில் அடங்கியிருக்கின்றன. இரத்தச் சிவப்பு உயிரணுக்களை வளர்க்கவும், சக்தியை மீண்டும் பெற உதவவும் இரும்புச் சத்து – எலும்புகளையும், பற்களையும் உறுதியாக வைத்திருக்க கால்ஷியம் – ஜலதோஷத்தை எதிர்க்கும் சக்தியை அதிகரிக்க வைடமின் ஸி – சிறந்த கண் பார்வைக்கும், ஆரோக்கியமான சருமத்திற்கும் வைடமின் ஏ – பசியைத் தூண்டி, தாங்கும் சக்தியை அதிகரிக்கும் வைடமின் பி–12 – இவற்றுடன், உங்கள் குடும்பத்தின் ஆரோக்கியத்திற்குத் தேவையான, இதர போஷாக்குச் சத்துக்களும் அடங்கியிருக்கின்றன.

விம்க்ரான்®

பல்வேறு வைட்டமின்-தாதுச் சத்து மாத்திரைகள்

11 வைட்டமின்களும் 8 தாதுப் பொருள்களும் அடங்கியது.

ஒரே ஒரு விம்க்ரான் மாத்திரை உங்களை நாள் முழுதும் சக்தியுடன் வைத்திருக்கப் போதுமானது.

SQUIBB® SARABHAI CHEMICALS

Shilpi HPMA-25A/71 Tam

காமாக்ஷியின் சரிதை

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி சங்கராசாரிய சுவாமிகள்

சகலத்துக்கும் ஆதாரமாக, சாசுவதமாக உள்ள சத்தியத்தை 'சத்' என்பார்கள். அதுதான் பரமேசுவரன். அது தன்னைத் தானே அறிந்துகொள்கிற அறிவை 'சித்' என்பார்கள். எல்லா அறிவுக்கும் மூல அறிவு அதுவே. இந்தச் 'சித்'தைத்தான் அம்பாள் என்கிறோம். தன்னையே அறிந்துகொள்வதில் ஏற்படுகிற நிறைவான அநுபவத்தையே, 'ஆனந்தம்' என்கிறோம். நம்முடைய இன்பங்களுக்கெல்லாம் ஆதாரமான நிலையான பேரின்பம் அதுவே. சத்தான பரமேசுவரன் சித்தான அம்பிகையோடு சேர்ந்ததும் ஆனந்தமான குமாரன், முருகன், அவதரித்தான்.

யாருமே இன்னொருவரிடம் தோற்றுப் போனால் அவமானம்தான் கொள்வான். ஆனால் இதற்கு ஒரு விதிவிலக்கு உண்டு. சொந்தப் பிள்ளையிடம் தோற்றுப் போனால் மட்டும் அவமானத்துக்குப் பதில் சந்தோஷமாகவே இருக்கும். 'புத்ராத் இச்சேத் பராஜயம்' என்று இதையே சொல்வார்கள். இதற்கு அநுசரணையாக, பரமேசுவரனும் கூடத் தன்னாலேயே வதைக்க முடியாத தாரகாதி அசுரர்களை, தன் குமாரனை சுப்பிரமணியர் சம்ஹாரம் செய்ததில் பெருமையே கொண்டார். இதற்கு முன்னால் தக்ஷிணாமூர்த்தியாக, மூலகுருமூர்த்தியாக இருந்த அவரே சுப்பிரமணிய ஸ்வாமியிடம் பிரணவ உபதேசம் வாங்கிக் கொண்டு, தன்னைவிட ஒருபடி பிள்ளையை உயர்த்திக் காட்டிப் பெருமை அடைந்தார். இப்படியாக ஈசுவரன் ஞானம், வீரம் இரண்டிலும் தன்னைவிடத் தானே அதிகப் பிரகாச ரூபமெடுத்துக் கொண்டு சுப்பிரமணியராக வந்ததற்குக் காரணம் அம்பாளின் சேர்க்கைதான். காமன் எரிந்த பின் அவன் கரும்பு வில்லும், மலர் அம்பும் தரித்துக் காமேசுவரியாகி, இவரைத் தன்னிடம் அன்பு கொள்ள வைத்ததுதான் இத்தனைக்கும் காரணம்.

இந்தப் புராண வரலாற்றுக்குத் திருஷ்டாந்தமாகவே இன்றைக்கும் காஞ்சீபுரத்தில் ஏகாம்பரநாதர் ஆலயத்துக்கும், காமாக்ஷியம்மன் ஆலயத்துக்கும் நடு மத்தியில் குமரிக்கோட்டம் என்கிற சுப்பிரமணியர் ஆலயம் இருக்கிறது. ஸோமாஸ்கந்த மூர்த்தத்தில் எப்படி ஈசுவரனுக்கும் உமாதேவிக்கும் நடுவில் ஸ்கந்தர் இருக்கிறாரோ, அப்படியே காஞ்சியில் காமாக்ஷியின் காமகோட்டம் அல்லது காமகோடிக்கும், ஏகாம்பரேசுவரரின் ஆலயமான ருத்ரகோடிக்கும் மத்தியில் குமரக்கோட்டம் இருக்கிறது.

தக்ஷிணாமூர்த்தியைக் கல்யாணசுந்தரராகக் காமாக்ஷி மாற்றினாளே, அது எதற்காக? தாரகாதிகளின் வதத்துக்காக மட்டுமல்ல. ஜனன மரணங்களிலிருந்து விடுபடுவதற்காகவே பல ஜீவர்கள் ஜனனம் எடுக்க வேண்டும். அவர்களின் கஷ்டங்களையும், அஞ்ஞானத்தையும் போக்குவதற்காகக் கருணாமூர்த்தியான ஒரு கடவுள் வேண்டும். தக்ஷிணாமூர்த்திக்கு மாயா பிரபஞ்சத்தையோ, அதிலுள்ள பிரஜைகளையோ, அவர்களுடைய கஷ்டங்களையோ பற்றிச் சிந்தையே இல்லை. ஞானசாகரமாக இருந்த அவரைக் கிருபா சமுத்திரமாக்கி, ஜீவராசிகளின் துயர் தீர்க்க வைக்கவே, அம்பிகை, காமேசுவரியாகி அவரைக் கல்யாணசுந்தரராக்கினாள்.

பரமேசுவரனிடம் தன்மீது மோகத்தை உண்டாக்கினாள் காமாக்ஷி. எதற்காக? மனுஷ்யர்களின் மோகத்தை அவர் அடக்கி, அவர்களுக்கு ஜனன நிவிருத்தி தரவேண்டும் என்பதற்காகவே. கலப்பில்லாத ஞானமயமாக இருக்கிற ஈசுவரனை லோக க்ஷேமத்துக்காக மோகிக்க வைத்த சிவகாமசுந்தரி அவள். 'இப்படிப்பட்ட நீயே மோகத்தில் மூழ்கிக் கிடக்கிறவர்களைக் கைதூக்கி மோக்ஷம் தருகிறாயே, என்ன ஆச்சரியம்!' என்று பாடுகிறார் மூகர்.

பரமேசுவரனுக்குக் காமத்தை உண்டாக்கியவாறே நம்முடைய காமத்தைக் கண்டிக்கிறாள். காமன் பஞ்ச புஷ்ப பாணங்களையும் கரும்பு வில்லையும் பிரயோகித்து நம்முடைய பஞ்ச இந்திரியங்களையும் மனசையும் தடுமாறிப் போகச் செய்கிறான். பரதேவதை இந்தப் பஞ்சபாணங்களைத் தன் திருக்கரங்களில் பிடித்துக் கொண்டிருப்பதாலே நம்முடைய இந்திரியங்கள் வெறித்து ஓடாமல் தன் பிடிப்பில் வைத்துக் கொண்டு ரக்ஷிக்கிறாள். அவளுடைய கையில் மனோரூபமான இக்ஷு (கரும்பு) இருப்பதால் நம் சித்த விகாரங்கள் எல்லாம் நசிக்கின்றன. சப்தம், ஸ்பரிசம், ரூபம், ரஸம், கந்தம் என்று நம் ஐம்புலன்கள் அநுபவிக்கிற அழகுகள் எல்லாம் அவளுடைய அழகுதான், இவற்றை அநுபவிக்கிற நம் மனசும் அவள் கையில் வசப்பட்ட வஸ்துதான் என்று உணர்த்துவதற்காகக் காமாக்ஷியாக திவ்ய ரூபம் கொண்டிருக்கிறாள். கரும்பின் மாதுரியமும், புஷ்பங்களின் மிருதுத் தன்மையும் கொண்டவளாக இருக்கிறாள்.

எந்த அட்சங்களால் (கண்களால்) ஈசுவரனுக்குக் காமத்தை உண்டாக்கிக் காமாக்ஷியானாளோ, அதே கண்களின் கடாக்ஷம் நம் மேல் விழுந்தால் நமக்கு எந்த விதமான காமமும் பறந்து விடும். நாம் பார்ப்பதை எல்லாம் அவளுடைய பல வேஷங்களாகவே பார்ப்போம். எல்லாம் ஒன்றாகிவிடும். அத்வைதமாகிவிடும். ஒன்று உசத்தி, ஒன்று தாழ்த்தி என்று இராது. ''காடும் வீடும், சத்துருவும் மித்திரரும், ஓடும் யுவதியின் உதடும் சமமாகவே தெரியும் — ஸ்ரீ காமாக்ஷியின் கடாக்ஷம் பெற்றவர்களுக்கு'' என்று மூகர் இதையே சொல்கிறார். எல்லாம் சமமாகும் அந்த நிலைதான் பிரம்ம ஞானம்.


OBM-1898-TM
பால் குடிக்க மறுக்கும் பிள்ளைக்கு
பல்சுவையுள்ள கஸ்டர்டு தாருங்கள்.
அது அள்ளிப் பருகுவதைப் பாருங்கள்!
சு..சு..சு..சுவையோ சுவை
Brown & Polson Custard
உங்கள் பிள்ளை பால் குடிக்க மறுக்கிறதா? கவலைப்படாதீர்கள். அதற்கு இன்சுவையுள்ள ஊட்டமிக்க கஸ்டர்டு தாருங்கள். அது மகிழ்வுடன் சாப்பிடும். அதைத் தயாரிக்கும் முறை மிகவும் எளிது. 4 தேக்கரண்டியளவு பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுதுபோல ஆக்குங்கள். பிறகு ஒரு கோப்பை பாலை சூடாக்கி, அதில் இந்த விழுதைக் கரையுங்கள். கொதிக்கும் வரை கிளறுங்கள். பின்னர் நெய்தடவிய தட்டில் ஊற்றுங்கள். அது குளிர்ந்து படியட்டும். நாள்தோறும் உங்கள் பிள்ளைக்குப் பால் கொடுக்கும் சுவையான வழி இது!
பழ சாலடைக் கிண்ணத்தில் எடுத்து, கஸ்டர்டால் அலங்கரியுங்கள். இப்போது கேக்கின் மீது கஸ்டர்டு தடவி, சுவையைக் கூட்டுங்கள். ஜெல்லியின் மீது கஸ்டர்டு தடவிப் பாருங்கள். எல்லாம் சுவைமயம்! இத்தகைய கஸ்டர்டு தயாரிக்க, 1½ தேக்கரண்டி பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர், 3 தேக்கரண்டியளவு சர்க்கரை, சிறிதளவு குளிர்ந்த பால். மூன்றையும் கலந்து விழுது போல் ஆக்குங்கள். ஒரு கோப்பை பாலை சூடாக்குங்கள். அதில் கஸ்டர்டு பவுடர் விழுதைக் கரைத்து, கொதிக்கும் வரை கிளறுங்கள். அந்த சூடாகவோ, குளிர்ந்ததாகவோ உங்கள் பிள்ளைக்குத் தாருங்கள். சுவையோ சுவை!
ஒரு விசேஷ முறை: நீங்கள் வீட்டிலேயே ஐஸ்க்ரீம், ஃபலூதா, பாயசம், ரபடி தயாரித்தால், பாலைக் கெட்டியாக்க பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடரையும் சேர்க்கவும். ஒவ்வொரு தித்திப்பும் இரட்டிப்பு சுவை தரும்! இதற்கு வெரய்டி கஸ்டர்டு பவுடரை உபயோகியுங்கள். வனில்லா, ஆரஞ்சு, பனானா, ஸ்ட்ராபெர்ரி, லெமன், ராஸ்பெர்ரி, ஆகிய 6 கனிச்சுவையுள்ள கஸ்டர்டு பவுடர்கள் உள்ளன.
6 இனிமையான சுவைகள் கொண்ட வெரய்டி கஸ்டர்டு பவுடர் பாக்கெட்டும் கிடைக்கிறது.
முட்டை கலவாதது.
Brown & Polson Custard
அருமையான பொருள்களிலிருந்து மிகுந்த கவனத்தோடு பக்குவப் படுத்தப்பட்டதால், கஸ்டர்டு பவுடர்களிலேயே மிகச் சிறந்தது பிரவுன் & போல்ஸன். ஒரு டின் கைவசம் இருக்கட்டும்... எப்போதுமே!
கார்ன் ப்ராடக்ட்ஸ் கோ. (இந்தியா) பிரை. லிட்.
பம்பாய்-400 001.
பிரவுன் & போல்ஸன் கஸ்டர்டு பவுடர்

சிவகாமியின் சபதம்

ஏழாம் அத்தியாயம்

சின்னக் கண்ணன்

ஆயனரும் பரஞ்சோதியும் பேசிக் கொண்டிருக்கையில், வாசற்படியருகில் நின்ற கண்ணபிரான் சமிக்ஞை செய்ததைச் சிவகாமி கவனித்தாள் என்று சொன்னோமல்லவா? சற்று நேரத்துக்கெல்லாம், பேசிக் கொண்டிருந்தவர்களின் கவனம் தன்மீது செல்லாதபடி மெல்ல நடந்து வீட்டுக்கு வெளியே வந்தாள்.

''அண்ணா! என்னை அழைத்தீர்களா? ஏதாவது விசேஷம் உண்டா?'' என்று கேட்டாள்.

'' ஆமாம் ; உண்டு !'' என்றான் கண்ணன்.

''கமலி அக்கா ஏதாவது சொல்லியனுப்பினாளா?''

கண்ணபிரான் குரலைத் தாழ்த்திக் கொண்டு, ''அதோ உள்ளே வந்திருக்கிறாரே, அந்த வாலிபருக்கு உடனே விஷம் கொடுத்துக் கொல்லும்படி சொல்லச் சொன்னாள்'' என்றான்.

சிவகாமி, ''இதென்ன வேடிக்கை, அண்ணா? எதற்காக விஷம் கொடுக்க வேண்டும்?'' என்று புன்னகையுடன் கேட்டாள்.

''அம்மணி ! விஷம் கொடுப்பது வேடிக்கையான விஷயமா?''

''இல்லை; அதனால்தான் 'எதற்காக' என்று கேட்கிறேன்.''

''மாமல்லருக்கு இவர் போட்டியாக வந்திருக்கிறார், தாயே!''

''என்னத்தில் போட்டி?''





''இராஜ்யத்துக்குத்தான்! ஊரிலே எல்லாம் சொல்லிக் கொள்ளுகிறார்கள்—'சக்கரவர்த்தி, பரஞ்சோதியைத் தத்து எடுத்துக் கொண்டு விட்டார்; பரஞ்சோதிக்குத்தான் இராஜ்யத்தைக் கொடுக்கப் போகிறார்; மாமல்லருக்கு இராஜ்யம் இல்லை' என்று.''

''ஆஹா! இது மட்டும் உண்மையாயிருந்தால்...?''

''தங்கச்சி! அப்படி நேர்ந்தால் அதில் உனக்கு மிக்க சந்தோஷம் போலிருக்கிறதே?'' என்றான் கண்ணபிரான்.

''அப்படித்தான், அண்ணா! இந்த இராஜ்யந்தானே எனக்கும் அவருக்கும் குறுக்கே நிற்கிறது? எனக்கு அவரும் அவருக்கு நானும் இருந்தால் போதுமே! இராஜ்யம் என்னத்திற்கு?''

''எல்லாப் பெண்களும் ஒரே மாதிரிதான் போலிருக்கிறது! கமலிகூட இப்படியேதான் சொல்கிறாள்.''

''என்ன சொல்கிறாள்?''

''நீ இப்போது சொன்னது போலத்தான் சொல்கிறாள். 'கண்ணா! உனக்கு நானும் எனக்கு நீயும் போதாதா? அரண்மனைச் சேவகம் என்னத்துக்கு? அரை நாழிகை வீட்டிலே தங்காமல் அலைவது என்னத்துக்கு? வா! எங்கேயாவது கிராமத்துக்குப் போய் நிம்மதியாயிருக்கலாம்' என்கிறாள்.''

''அப்படிச் செய்யப் போகிறீர்களா, அண்ணா?''

''அப்படிச் செய்வதில் எனக்கு இஷ்டம்தான். ஆனால், சின்னக் கண்ணன் குறுக்கே நிற்கிறான்.''

''அது யார் அண்ணா, சின்னக் கண்ணன்?''

கண்ணன் கண்களைச் சிமிட்டிக் கொண்டு, ''கொஞ்சம் மூளையைச் செலுத்தி யோசித்துப் பார், தங்கச்சி!'' என்றான்.

சிவகாமி, ''என்னத்தை யோசிக்கிறது?'' என்றாள்.

''இவ்வளவுதானா? தங்கச்சி இவ்வளவு புத்திசாலியாயிருந்தும் சின்னக் கண்ணன் யார் என்று கண்டுபிடிக்க முடியவில்லையே?'' என்று கண்ணன் கேட்டுவிட்டு, இன்னும் தாழ்ந்த குர





வில், ''சின்னக் கண்ணன் கமலியின் வயிற்றில் இருக்கிறான்'' என்று கூறிப் புன்னகை புரிந்த போது, அவன் முகத்தில் அசடு வழிந்தது.

கமலி கர்ப்பமா யிருக்கிறாள் என்பதைச் சிவகாமி தெரிந்து கொண்டு, ''அப்படியா அண்ணா! சந்தோஷம் !'' என்றாள். அவள் உடம்பை அப்போது என்னவோ செய்தது. கமலியை உடனே பார்க்க வேண்டும், அவளைக் கட்டிக்கொள்ள வேண்டும் என்ற ஆசை உள்ளத்தில் உண்டாயிற்று.

கண்ணபிரான், ''தங்கச்சி! அந்த சந்தோஷத்தை நீ நேரிலேயே வந்து சொல்லிவிட்டால் தேவலை. கமலிக்கு இன்னும் கொஞ்ச காலம் காஞ்சியை விட்டுப் புறப்பட முடியாதாம். தங்கச்சியிடம் சொல்வதற்கு என்னவெல்லாமோ சமாசாரம் மூட்டை கட்டி வைத்திருக்கிறாளாம்'' என்றான்.

'' எனக்கும் அக்காவைப் பார்க்க ஆசைதான், அண்ணா! ஆனால், அது எப்படி முடியும்?'' என்றாள் சிவகாமி.

''ஆமாம், தங்கச்சி! முடியாதுதான்! அதனால்தான் நான்கூடக் கமலியிடம் சொன்னேன், அவர்களெல்லாம் நம்முடைய ஏழைக் குடிசையில் வந்து தங்கியிருப்பார்களா என்று....''

''அண்ணா! அப்படிச் சொல்ல வேண்டாம். நீங்களும் கமலியும் இருக்கும் இடத்தில் ஏழைமை ஏது?... உங்களுடைய குடிசை எனக்கு அரண்மனையை விட ஆயிரம் மடங்கு மேல்!...'' என்று சொல்லி வந்தவள் சட்டென்று நிறுத்தினாள். ஏதோ ஓர் எண்ணம் குறுக்கிட்டு அவளைத் தடை செய்ததாகத் தோன்றியது.

''அதற்கென்ன பார்த்துக் கொள்ளலாம், அண்ணா! அப்பாவிடம் சொல்கிறேன்... வேறு ஒன்றும் விசேஷம் இல்லையா?'' என்றாள்.

''அப்படி யொன்றும் பெரிய விசேஷமில்லை. ஒரே ஒரு சின்ன விசேஷம் மட்டும் உண்டு; அன்று காலை நான் ரதத்தை ஓட்டிக் கொண்டு போய் அரண்மனை வாசலில் நிறுத்தியதும், மாமல்லர் என்னைத் தனியாகக் கூப்பிட்டார். 'பிரபு! என்ன விசேஷம்?' என்று கேட்டேன். 'ஒன்றுமில்லை, கண்ணா! இராத்திரி தூங்கவில்லை' என்றார். 'அதுதான் முகத்தைப் பார்த்தால் தெரிகிறதே; ஏன் தூங்கவில்லை?' என்றேன். 'புது தளபதியுடன் பேசிக் கொண்டிருந்தேன்' என்றார். 'அவ்வளவுதானா?' என்று கேட்டேன். 'அப்புறம் ஓலை எழுதினேன்' என்றார். 'யாருக்கு?' என்றேன். 'அப்பாவுக்கு' என்று சொன்னார். 'சரி!' என்றேன். பிறகு மெல்ல, மெல்ல, 'இன்னோர் ஓலையும் எழுதினேன்' என்றார்.''

''அண்ணா! ஓலையைக் கொடுங்கள்'' என்று சிவகாமி கேட்டபோது அவள், தொண்டையை அடைத்துக் கொண்டது.

''கொடுக்கிறேன், தங்கச்சி! கொடுக்கிறேன். ஆனால், ஓலையை வாங்கிக் கொண்டதும் நீ ஓடிப்போய் என்னைத் திண்டாட்டத்தில் விட்டு விடக் கூடாது...''

''என்ன திண்டாட்டம், அண்ணா?''

''போன தடவை மாமல்லரின் ஓலையை வாங்கிக் கொண்டதும் ஒரே ஓட்டமாய் ஓடிப் போய் விட்டாயல்லவா? அதனால் எனக்கு எவ்வளவு சங்கடமாய்ப் போய்விட்டது தெரியுமா? 'ஓலையை வாங்கிக் கொண்டதும் சிவகாமி என்ன செய்தாள்? அவள் முகம் எப்படி இருந்தது? கண் எப்படி இருந்தது?' என்றெல்லாம் மாமல்லர் கேட்டபோது நான் விழித்தேன்...''

''போதும், அண்ணா, வேடிக்கை! ஓலையைக் கொடுங்கள்!''

இன்னும் கொஞ்சம் வேணுமென்றே தவக்கம் செய்து விட்டுக் கடைசியாகக் கண்ணபிரான் ஓலையை எடுத்துக் கொடுத்தான்.

அப்புறம் ஒரு கணநேரம் கூட, அங்கே சிவகாமி நிற்கவில்லை. வீட்டின் வலப்பக்கத்தில் சென்ற பாதை வழியாகப் பழைய தாமரைக் குளத்தை நோக்கி விரைந்து சென்றாள்.

எட்டாம் அத்தியாயம்

நாகம் சீறுகிறது

அரண்யத்தினால் சூழப்பட்ட தாமரைக் குளக் கரையில், மகிழ மரத்தினடியில் போட்டிருந்த மரப் பலகைச் சிங்காதனத்தில் சிவகாமி அமர்ந்து, தன் மார்புக் கச்சில் சேர்த்துச் செருகியிருந்த ஓலையை எடுத்தாள்.


''பொல்லாத ஓலையே! பல்லவ குமாரரின் காதல் என் உள்ளத்தைக் குத்திப் புண் செய்வது போதாதென்று நீயும் என் நெஞ்சைக் குத்துகிறாயா?'' என்று சொல்லிக் கொண்டே அந்த ஓலையைக் கண்ணிலே ஒத்திக் கொண்டாள். பிறகு சற்றுத் தயங்கி, சட்டென்று தன் செவ்விதழ்களில் அதை ஒரு தடவை வைத்து எடுத்துவிட்டு, வெறுமையாயிருந்த மேல் ஓலையை அப்புறப்படுத்தினாள். உள் ஏட்டில் முத்துப் போல் பொறித்த அழகிய சின்னஞ் சிறு எழுத்துக்கள் காணப்பட்டன. கண்களில் ஆர்வம் ததும்பச் சிவகாமி படிக்கத் தொடங்கியபோது, ''அக்கா! அக்கா!'' என்று பின்னாலிருந்து வந்த சத்தத்தைக் கேட்டுத் திடுக்கிட்டாள். திரும்பிப் பார்த்தால், அந்த மரச் சிங்காதனத்தின் கைப்பிடிமீது ஒரு பச்சைக் கிளி உட்கார்ந்து அவளைக் கூர்ந்து கவனித்துக்கொண்டிருந்தது!

கிண்கிணி ஒலிப்பதுபோல் சிவகாமி கலகலவென்று சிரித்துவிட்டு, அந்தக் கிளியைப் பார்த்து, ''சுகப் பிரம்ம முனிவரே! உமக்கு என்ன இங்கே வேலை? இளம் பெண்கள் தனிமையாக இருக்கும் அந்தப்புரத்துக்குள் ரிஷிகள் வரலாமா? அதிலும், பூஜை வேளையில் கரடி புகுந்தது போல், ஒரு கன்னிப் பெண் தன் காதலரின் ஓலையைப் படிக்

வயிற்றுக் கோளாறு?

வாயுவா?
அமில உபாதையா?
நெஞ்செரிச்சலா?
அஜீரணமா?





2 ரென்னி மாத்திரைகளை மெல்லுங்கள்... விரைவிலேயே நிவாரணம் பெற

பெப்பர்மின்ட்
கலையுள்ள ரென்னியை கைவசம்
வைத்திருங்கள்.

நிக்கோலஸ் ⓝ தயாரிப்பு

mcm/ni/4 tam

கப்போகும் தருணத்திலா நீர் வந்து சேருவது? போம்! போம்!'' என்று கையை ஓங்கி வீசியபோது, அந்தக் கை வீச்சானது, கன்னத்தை நெருங்கி வரும் காதலனுடைய கரத்தைத் தள்ளும் அபிநயமாகவே தோன்றியது.

அதற்கேற்றாற்போல் அந்தச் சுக மகா முனிவரும், ''மாட்டேன், மாட்டேன்!'' என்றார்.

சிவகாமி மறுபடியும் சிரித்துவிட்டுக் கூறினாள்: ''வேஷதாரி ரிஷியே! கதைகளிலே வரும் அரசிளங் குமரிகள் எல்லாரும் அந்தப்புரத்தில் உம்மை வைத்துக்கொண்டு எப்படித்தான் இரகசியம் பேசினார்களோ, தெரியவில்லை. இருக்கட்டும், இருக்கட்டும்; நான் பல்லவ இராஜ்யத்தின் மகாராணியாகும்போது உங்களுக்கெல்லாம் அரண்மனையில் இடமில்லாமல் செய்து விடுகிறேன்...''

அப்போது அந்த விஷமம் நிறைந்த சுகப்பிரம்மம், 'மாமல்லா! மாமல்லா!' என்று உச்ச ஸ்தாயியில் கீச்சுக் குரலில் கத்திற்று.

''ஓஹோ! அப்படியா சேதி? நான் அந்தப்புரத்திலிருந்து உங்களைத் துரத்தியடித்தால், மாமல்லரிடம் சலுகைக்குப் போவோம் என்று சொல்கிறீரா? நடக்காது, முனிவரே, நடக்காது! பல்லவ சிங்காதனத்திலே சிவகாமி தேவி அமர்ந்தவுடன் முதல் காரியமாக, அந்த ராஜ்யத்திலே சோம்பித் திரியும் ஆண்டிகள், பிக்ஷுகள், காவித் துணி தரித்த சந்நியாசிகள், மண்டை ஓட்டு மாலை அணிந்த காபாலிகர்கள் இவர்களையெல்லாம் நாட்டை விட்டு ஓட்டி விடப் போகிறாள். யோக்கியமாகக் கல்யாணம் செய்து கொண்டு இல்லறம் நடத்துகிறவர்களுக்குத்தான் பல்லவ இராஜ்யத்தில் அப்புறம் இடம் இருக்கும், தெரியுமா? நான் இந்த ஓலையைப் படிக்கும்வரையில் உம்முடைய திருவாயை மூடிக்கொண்டு சும்மா இரும்!''

சும்மா இருக்க முடியாது என்பது போல், சுகர், ''ரதி! ரதி!'' என்றார். சிவகாமி திரும்பிப் பார்த்தாள். அங்கே ரதி துள்ளி ஓடி வந்து கொண்டிருந்தது.

''ரதி! அந்தப்புரத்துக்குத் தகுந்த சகி நீதான். எல்லாவற்றையும் கேட்டுக் கொண்டு வாயைத் திறக்காமல் மௌனமாயிருப்பாய். இந்த ரிஷியோ எதையும் அரையும்குறையுமாய்க் கேட்டுக் கொண்டு நாலு பேர் இருக்கும்போது மானத்தை வாங்கி விடுவார்! இந்த வேஷதாரி முனிவர் இங்கிருந்து தொலைந்து போனபிறகு உனக்கு மாமல்லரின் ஓலையைப் படித்துக் காட்டுகிறேன், ரதி!''

இவ்விதம் கூறி ரதியின் மோவாக் கட்டையைத் தடவிக் கொடுத்துவிட்டுச் சிவகாமி மீண்டும் ஓலையைப் பார்த்தாள். கையிலே பணியாரத்தை வைத்துக்கொண்டிருக்கும் குழந்தை, அதைச் சாப்பிட்டால் ஆகிப் போய்விடுமே என்ற பயத்தினால் தயங்குவது போல், சிவகாமியும், ஓலையைப் படிக்கும் இன்பத்தைத் தள்ளிப்போட்டுக்கொண்டேயிருந்து கடைசியில் படிக்கலானாள். ஓலையில் பிராகிருத பாஷையில் எழுதியிருந்தது வருமாறு:

''பாரத நாட்டில் புகழ்பெற்ற சிற்ப சக்கரவர்த்தியின் செல்வக் குமாரியும், சௌந்தரிய தேவதை அடிபணிந்து போற்றும் சுகுமாரியும், பரதநாட்டிய சாஸ்திரம் வலம் வந்து தொழுது வணங்



கும் கலைவாணியும், மாமல்ல பல்லவனின் இருதய சிம்மாசனத்தில் கொலுவீற்றிருந்து தனியரசு புரியும் மகாராணியும் ஆகிய சிவகாமி தேவிக்கு:

இனிமேல் ஓலை எழுத மாட்டேன்; நானே நேரில் வந்து விடுவேன் என்று முன் ஓலையில் எழுதியிருந்தேன். அதற்கு மாறாக இதை நான் எழுதுவதற்கு இரண்டு காரணங்கள் உண்டு.

என் ஆருயிரே! முந்தாநாள் இரவு நான் ஒரு கனவு கண்டேன். அதை நினைத்தாலே என் தேகமெல்லாம் சிலிர்க்கிறது. கற்பனைக்கும் எட்டாத இன்பம் நிறைந்த அந்த அதிசயக் கனவைக் கேள்.

கனவிலே நான் தூங்கிக் கொண்டிருந்தேன். ஆகாய வெளியில் அந்தரத்தில் காற்றுப் படுக்கையில் மிதந்து கொண்டே தூங்கியதாகத் தோன்றியது. அந்த அதிசயமான சொப்பனத் தூக்கம் எதனாலோ திடீரென்று கலைந்தது. கண்களை விழித்துப் பார்க்க

முயன்றேன். ஆனால், ஏற்கனவே கண்கள் விழித்துத்தான் இருந்தன! மேலும் கீழும் நாற்புறமும் ஒரே காடாந்தகாரமா யிருந்தபடியால், என் கண்கள் திறந்திருந்தும், மூடியிருந் தனவோ என்று நான் ஐயப்பட நேர்ந்தது.

உன் கண் இமையில் தீட்டிய மையைக் காட்டிலும் கரியதாய் என்னைச் சுற்றிலும் படர்ந்திருந்த அந்த அதிசயமான இருட்டைப் பற்றி நான் சிந்தித்துக் கொண்டிருக்கையில், எனக்குச் சற்று மேலே வட்ட வடிவமான ஓர் ஒளி தோன்றக் கண்டேன். வர வர அந்த ஒளி வட்டம் அகன்று கொண்டு வந்ததோடு, அதன் ஜோதியும் அதிக மாகி வந்தது. கண்களைக் கூசச் செய்யாமல் குளிர்ந்து விளங்கிய அந்தப் பொன்னிற ஒளி வர வர என்னை நெருங்கி நெருங்கி வந்ததைக் கண்டேன்.

அருகே வந்ததும், அந்த ஒளி வட்டம் உன்னுடைய திவ்விய வதனந் தான் என்று தெரிய வந்தபோது, எனக்குண்டான வியப்பையும் களிப்பையும் எவ்வாறு சொல்வேன்?

சிவகாமி! விரைவிலே உன்னுடைய உருவம் முழுவதுமே தெரிந்தது. எல்லையில்லா அந்தகாரத்தின் நடுவே உன் பொன் உருவத்தைப் பார்க்கப் பார்க்க எனக்கு ஒரு விசித்திரமான எண்ணம் உதயமாயிற்று.

உன்னுடைய உருவமானது சாதாரண மனித தேகத்தைப் போல் இரத்தம், சதை, எலும்பு, தோல் இவைகளினால் ஆனதாக எனக்குத் தோன்ற வில்லை. நிலா மதியின் இளங்கதிரையும் மல்லிகைப் பூவின் இன்ப மணத்தையும், அன்னப் பட்சியின் இறகிலுள்ள மென்மையையும், செவ்வழி ராகத்தின் இன்னிசையையும் கலந்து உன் தூய திருமேனியைப் பிரமன் படைத்திருக்க வேண்டுமென்று கருதினேன்.

இவ்வாறு நான் உன் மேனி அழகாகிய மதுவை அருந்தி மயங்கி நிற்கையில், நீ என் அருகே நெருங்கி வந்தாய். என் முகத்துக்கு வெகு சமீபத்தில் உன் பொன் முகத்தைக் கண்டேன். காலையில் மலர்ந்த குவளை மலர்களில் பனித் துளி நிற்பது போல் உன் நீண்ட கண்களின் முனையில் இரு கண்ணீர்த் துளிகள் நின்றன. உன்னுடைய மூச்சுக் காற்று என் முகத்திலே பட்டது.

அவ்வளவு அருகில் வந்திருந்த உன்னைத் தழுவி அணைத்துக் கொள்ள வேண்டும் என்று என்னுடைய தேகத்தின் ஒவ்வோர் அணுவும் துடிதுடித்தது. ஆனாலும் நான் அவ்விதம் செய்யவில்லை.

என் உள்ளத்தில் ஒரு சந்தேகம் தோன்றியிருந்தது. உன்னைத் தொட்டேனானால், உன் திருமேனியானது நிலா மதியின் கதிராகவும், மல்லிகையின் மணமாகவும், அன்னப் பட்சியின் மென்மையாகவும், செவ்வழியின் இன்னிசையாகவும் தனித்தனியே பிரிந்து மறைந்து விடுமோ என்ற பயம் ஏற்பட்டிருந்தது.

இந்தப் பயத்தை அறிந்து கொண்டவளைப் போல நீ உன் செவ்விதழ்கள் சிறிது அகல, முத்துப் போன்ற பற்களின் நுனி தெரிய, குறுநகை புரிந்தாய். உன் பொன் வதனம் என்னை அமுத போதையில் ஆழ்த்திக் கொண்டு இன்னும் அருகே நெருங்கிற்று.

ஆ! என்ன சொல்வேன் என் துரதிர்ஷ்டத்தை! அந்தச் சமயத்தில் எங்கேயோ ஒரு நாகப் பாம்பின் சீறல் கேட்டது. சட்டென்று திரும்பிப் பார்த்தேன். ஒரு மரக் கிளையில் இரண்டு பட்சிகள் உட்கார்ந்து, ஒன்றின் மூக்கை ஒன்று தொட்டும், 'கலகல' வென்று சப்தித்தும் விளையாடிக்கொண்டிருந்தன. அந்த மரத்தின் அடிக் கிளையிலிருந்து ஒரு நாகப் பாம்பு — கரு நிறமும் மஞ்சள் நிறமும் கலந்த உடலுடைய நீண்ட பாம்பு — அந்தப் பட்சிகள் இருந்த கிளையை நோக்கிச் 'சரசர' வென்று ஏறிக் கொண்டிருந்தது. அந்த நாகத்தின் சீறலைத்தான் நான் கேட்டதாகத் தெரிந்து கொண்டேன். அந்தக் கணத்தில் உன்னைக்கூட மறந்து, என் உடைவாளை அவசரமாக எடுத்தேன்.

* * *

அவ்வளவுதான்; விழித்துக்கொண்டேன்.

என் கண்ணில் வளரும் பெண்ணரசியே! சொப்பனங்களிலும் அவற்றின் பலன்களிலும் நம்பிக்கை யில்லாதவன் நான். ஆனாலும் இந்தக் கனவுக்கு ஏதாவது அர்த்தம் உண்டா என்று அடிக்கடி என்னை அறியாமல் எண்ணம் உண்டாகிறது. உனக்கு ஏதேனும் அபாயம் வரும் என்பதைக் குறிப்பிடுகிறதோ என்று ஐயுறுகிறேன்.

யுத்தம் நெருங்கி வருகிறபடியால் நீ ஜாக்கிரதையாக இருக்க வேண்டும். ஆனால் எவ்விதக் கவலையோ, பயமோ வேண்டாம்! என் கையிலே வாள் இருக்கும் வரையில் உனக்கும் உன் தந்தைக்கும் அபாயம் எதுவும் நேராது.

பொழுது விடியப் போகிறது. கீழ் வானம் வெளுக்கிறது. நான் சொல்ல விரும்பிய இன்னொரு செய்தியைச்



மணமும், சுவையும் சொல்கிறதே!



இது **நரசுஸ் காபி** என்று!

நினைவிருக்கட்டும்!

"தெர்மலோ" முறையில் தயாரிக்கப்படும்

ஒரே காபி - **நரசுஸ் காபி!**

நரசுஸ் காபி கம்பெனி
சேலம்-7
கிளைகள்: பாண்டிச்சேரி, தமிழகமெங்கும்.

கவர்ந்திடுமே கோகுல்!



கோகுல் மங்கை. மணம் கவர் நங்கை. அவள் தனிக் கவர்ச்சியை நீங்களும் பெற உபயோகிப்பீர் கோகுல் ஸாண்டல்வுட் டாய்லெட் பவுடர்.

நூறு சதம் தூய மைசூர் சந்தனம், வெளிநாட்டு வாசனை திரவியங்கள், பலவித இயற்கை மூலிகைகள் இவை யனைத்தையும் ஒருங்கே கொண்டு பிரத்தியேகமான 'மைக்ரோஃபைன்' முறையில் தயாரிக்கப்படுவது கோகுல் ஸாண்டல்வுட் டாய்லெட் பவுடர்.

கோகுல்

ஸாண்டல்வுட் டாய்லெட் பவுடர்

டி.எஸ்.ஆர் & கம்பெனி, மதராஸ்

பிரத்தியேக தயாரிப்பு

கோகுல் நறுமணம் சூழட்டும்
உங்கள் வாழ்வு கமழட்டும்!



டி.எஸ்.ஆர் & கம்பெனி, மதராஸ்
ராமாபுரம். மதராஸ் 600089

ADWAVE-TSR 18 TAM

சுருக்கமாகச் சொல்லி முடித்து விடுகிறேன்.

எனக்கு ஒரு புதிய தோழன் கிடைத்திருக்கிறான். அவன் யார் தெரியுமா? மதயானை மேல் வேல் எறிந்து உன்னையும் உன் தந்தையையும் காப்பாற்றிய வீர வாலிபன்தான். அவனைக் கோட்டைக் காவலுக்காகச் சக்கரவர்த்தி அனுப்பி யிருக்கிறார். நேற்றிரவெல்லாம் நானும் அவனும் பேசிக் கொண்டிருந்தோம்; பெரும்பாலும் உன்னைப் பற்றியே பேசிக் கொண்டிருந்தோம்.

சக்கரவர்த்தியிடமிருந்து உங்களுக்கு அவன் சேதி கொண்டு வருகிறான். நீங்கள் காஞ்சிக் கோட்டைக்காவது வந்துவிட வேண்டும்; அல்லது சோழ நாட்டுக்குப் போய்விட வேண்டும் என்று சக்கரவர்த்தி சொல்லி யனுப்பி யிருக்கிறார். ஆனால், நான் அங்கு வந்து உங்களைப் பார்த்துப் பேசும்வரையில் அதைப் பற்றி ஒரு முடிவும் செய்ய வேண்டாம்.

யுத்தம் நெருங்கி வருகிறதானது ஒரு காரியத்துக்கு ரொம்பவும் நல்லதாயிருக்கிறது. கூடிய சீக்கிரம் எனக்கு விடுதலை கிடைத்து விடும். கோட்டைக்கு வெளியே போகக் கூடிய நாள் விரைவிலே வரும். அந்த நாள் வந்தவுடன் நான் நேரே அங்கு வந்து உன்னைப் பார்த்துவிட்டு வேறு காரியங்களைக் கவனிப்பேன்.

என் செல்வமே! ஒவ்வொரு சமயம் நினைத்தால் இந்த ராஜ்யம் என்னத்துக்கு, யுத்தம் என்னத்துக்கு என்றெல்லாம் தோன்றுகிறது. இதெல்லாம் சொப்பனமா யிருக்கக் கூடாதா? திடீரென்று கண் விழித்து எழுந்ததும், நான் சக்கரவர்த்தி குமாரன் இல்லை,—உன் தகப்பனாரிடம் சிற்பக் கலை கற்றுக்கொள்ளும் சீடன் — என்று ஏற்பட்டால், எவ்வளவு ஆனந்தமா யிருக்கும்? அப்போது உனக்கும் எனக்கும் இடையே ஒரு தடையும் இராதல்லவா? இவ்வாறு எட்டு மாத காலமாக உன்னை வந்து பார்க்காமல் இருந்திருப்பேனா?''

ஓலையை ஒரு தடவை முழுதும் படித்த பின்னர், இன்னொரு தடவையும் சிவகாமி படித்தாள். பிறகு ரதியைப் பார்த்து, ''ரதி! பல்லவ குமாரரிடமிருந்து வந்த ஒவ்வோர் ஓலையையும் உனக்குப் படித்துக் காட்டினேன் அல்லவா? இந்தத் தடவை முடியாது! படித்துக் காட்டினாலும் உனக்கு விளங்காது!'' என்றாள்.

பிறகு ஓலையை எடுத்துக் கொண்டு தான் அமர்ந்திருந்த மரப் பலகைச் சிங்காதனத்தின்மேல் ஏறினாள். பின்னால் இருந்த மகிழ மரத்தில் மேலே கிளைகள் மூளைத்திருந்த இடத்தில் காணப்பட்ட பொந்தில் கையை விட்டுத் திரும்ப எடுத்தபோது அவளுடைய கையில் ஏழெட்டு ஓலைகள் இருந்தன. அந்த ஓலைகளை ஒவ்வொன்றாய் எண்ணிப் பார்த்து விட்டுத் தன்னுடனிருந்ததையும் சேர்த்து மறுபடியும் பொந்துக்குள் வைத்துவிட்டுக் கீழே இறங்கினாள்.

''ரதி! வா! போகலாம்; சுகப்பிரம்மரிஷியே! வாரும்; வீட்டுக்குப் போகலாம். அப்பா சாப்பிடக் காத்துக் கொண்டிருப்பார். மாமல்லரின் ஓலையைப் படித்துக் காட்டவில்லையென்று என் பேரில் கோபமா? நாளைக்கு வந்து உங்கள் இருவருக்கும் படித்துக் காட்டுகிறேன். நாளைக்கு மட்டும்தானா? என் வாழ்நாள் உள்ளவரையில் ஒவ்வொரு நாளும் படித்துக் காட்டுவேன். ரதி! குமார சக்கரவர்த்தியைப் பற்றி நீ என்ன நினைத்துக் கொண்டிருக்கிறாய்? சுகமகா முனிவரே! மாமல்லர் மகாகவி



என்பதைத் தெரிந்து கொள்வீராக. காளிதாஸனையும் பாரவியையும் போன்ற பெரிய கவி மாமல்லர். அவருடைய கவிதைக்குப் பாத்திரமான பெண் யார் தெரியுமா? இந்த ஏழைச் சிற்பியின் மகள் சிவகாமிதான்!''—இவ்விதம் ரதியுடனும், சுக முனிவருடனும் மாறி மாறிப் பேசிக்கொண்டே சிவகாமி வீட்டை நோக்கிச் சென்றாள்.

காட்டு மரங்களுக்குள்ளே சிவகாமி மறைந்ததும், தாமரைக் குளத்தின் அருகில் இருந்த மற்றொரு பெரிய மரத்தின் மறைவிலிருந்து நாகநந்தி அடிகள் வெளிப்பட்டார். அவர் மெல்ல நடந்து வந்து, சிவகாமி ஒளித்துவைத்த மரப் பொந்திலிருந்து ஓலைகளை எடுத்தார். ஒவ்வொன்றாக அவற்றை விரைவாகப் பிரித்துப் படிக்கத் தொடங்கினார். அவ்விதம் வாசித்து வந்தபோது அவர் விட்ட பெருமூச்சானது நாகப் பாம்பின் சீறலைப் போலத் தொனித்தது.

(தொடரும்)

யூனிட்டுகள் – சாதாரண மனிதனுக்கு அசாதாரணமான நல்ல முதலீடு

பொதுமக்கள் எளிதில் முதலீடு செய்வதற்கு ஒரு வசதியாக யூனிட் ட்ரஸ்ட் ஆஃப் இந்தியாவை அரசாங்கம் தொடங்கியது. ரிசர்வ் பாங்கும் இதர நிதி ஸ்தாபனங்களும் நியமித்த திறம் மிக்க ட்ரஸ்டிகள் போர்டு ஒன்று ட்ரஸ்டின்பணிகளை நிர்வகித்து வருகிறது. இந்த ட்ரஸ்ட், யூனிட்டுகளை விற்று அவற்றின்மூலம் கிடைக்கிற தொகையை பங்கு மார்க்கெட்டில் தெரிந்தெடுத்த பங்குகளிலும் செக்யூரிட்டிகளிலும் முதலீடு செய்கிறது. இத்தகைய முதலீடுகளிலிருந்து ஒவ்வொரு ஆண்டும் கிடைக்கின்ற வருவாய்த் தொகையில், ட்ரஸ்டின் சொந்த செலவுகளுக்குப் பயன்படுத்தியதுபோக மீதியுள்ள தொகை, யூனிட் வைத்திருப்பவர்களுக்கு சமமாகப் பங்கீடு செய்யப்படுகிறது. ஜூன் 30-ம் தேதி யன்று பதிவேட்டில் பெயர் பதிவாகியுள்ளவர்களுக்கு இது கிடைக்கும். ட்ரஸ்டின் கணக்கு ஆண்டு ஜூலை முதல் ஜூன் வரை. யூனிட்டுகளை என்றைக்கு வாங்கி யிருந்தாலும், யூனிட்டுகள் வைத்திருக்கும் எல்லோருக்கும் முழு ஆண்டின் டிவிடெண்டு தொகை அளிக்கப்படும். 1972-73ம் ஆண்டிற்கு 8½ சத விகித டிவிடெண்டு தொகையை ட்ரஸ்ட் வழங்குகிறது.

ஒரு யூனிட்டின் அசல் விலை 10 ரூபாய். யூனிட்டுகள் பத்துப் பத்தாகத்தான் விற்கப்படுகின்றன. குறைந்த பட்சம் 10 யூனிட்டுகளை வாங்க வேண்டும். அதற்கு மேற்பட்டு எவ்வளவு யூனிட்டுகள் வேண்டுமானாலும் வாங்கலாம். பம்பாய், கல்கத்தா, புது தில்லி அல்லது சென்னையிலுள்ள ட்ரஸ்ட் அலுவலகத்திலோ அல்லது பெரும்பாலான பாங்குகள் அல்லது தபால் நிலையங்களிலோ நடப்பு விற்பனை விலையில் யூனிட்டுகள் கிடைக்கும். பாங்குகளும் தபால் நிலையங்களும் ட்ரஸ்டின் ஏஜெண்டுகள் என்னும் முறையில் விண்ணப்ப பாரங்களை சப்ளை செய்வதுடன் ட்ரஸ்டின் சார்பாக அதிகார பூர்வமான ரசீதுகளையும் வழங்குகின்றன. யூனிட் பத்திரங்களை, ட்ரஸ்ட் பதிவுத் தபால் மூலம் நேரடியாக அனுப்பி வைக்கிறது. யூனிட்டுகளை தனிநபர் ஒருவரோ அல்லது கூட்டாக இருவரோ, மூவரோ அல்லது நான்கு பேரோ வாங்கலாம். இவர்களில் எவரும் மைனராக இருக்கக்கூடாது. மைனராக உள்ள குழந்தை எதுவும் யூனிட்டுகளுக்காக மனுச் செய்ய முடியாது. ஆனால் தந்தையோ, அல்லது தாயார் சட்ட ரீதியாகக் கார்டியனாக இருந்தால் அவரோ, அல்லது கோர்ட் நியமித்த கார்டியனோ மைனரின் சார்பாக யூனிட்டுக்காக விண்ணப்பிக்கலாம். அந்தக் குழந்தை மைனராக இருக்கும் வரையில் யூனிட் பத்திரத்தைக் கையாளுவதற்கு அவருக்கு உரிமையுண்டு.

யூனிட்டுகள் வைத்திருப்பவர் (ஜூலை மாதம் தவிர) எந்தச் சமயத்திலும் தன்னுடைய யூனிட்டுகளைத் திரும்பவும் ட்ரஸ்ட்டுக்கு நடப்பு மறு விற்பனை விலையில் விற்று விடலாம். இதற்காக யூனிட்தாரர் செய்ய வேண்டியதெல்லாம் இதுதான்: யூனிட் பத்திரத்தின் மறு புறத்தில் உள்ள பாரத்தைப் பூர்த்தி செய்து கையொப்பம்/கையொப்பங்கள் இட்டு, சாட்சிக் கையொப்பங்களுடன் அதை ட்ரஸ்ட்டின் உரிய அலுவலகத்திற்கு அனுப்ப வேண்டும். கையொப்பம் முதலியவற்றைச் சரிபார்த்த பிறகு, யூனிட்தாரர் கேட்டுக் கொண்டபடி ட்ராப்ட், செக், மணியார்டர் மூலமோ அல்லது ரொக்கமாகவோ, உரிய தொகையை ட்ரஸ்ட் வழங்கும்.

நாடு கடந்து வந்த நாடகங்கள்

மலேசியாவில் திரு ஆழி. அருள்தாசனின் தலைமையில் 'மலேசியா தமிழர் கலை மன்றம்' கோலாலம்பூரில் பல ஆண்டுகளாக நல்ல நாடகங்களைத் தயாரித்து நடத்தி வருகிறது. அக்குழுவினர் தமிழ் நாட்டுக்கு வந்து, ''கடாரம்'' என்ற தமிழ் வரலாற்று நாடகத்தையும், ''உயிரோவியம்'' என்னும் சமூக நாடகத்தையும் சென்னையில் அரங்கேற்றினர். சிவாஜி கணேசன் தலைமை வகித்து அவர்களை வரவேற்றுப் பேசினார்.

கடல் கடந்து சென்று வாழ்ந்தபோதிலும் தாயகத்துக்குப் பெருமை சேர்க்கும் வகையில் கலை நிகழ்ச்சிகளை நடத்தி வரும் மலேசியத் தமிழர்களை வாழ்த்துகிறோம்.

v




^



பம்பாயில் படத் திறப்பு

பம்பாய் தமிழ்ச் சங்க அரங்கில் சமீபத்தில் 'முத்தமிழ்க் கலா வித்துவ ரத்தினம்' ஔவை சண்முகம் அவர்களின் திருவுருவப் படத்தைத் தமிழ்நாடு மேலவைத் துணைத் தலைவர் திரு ம. பொ. சிவஞானம் திறந்து வைத்துப் பேசினார். விழாவில் திரு தி. க. பகவதி அவர்களும் கலந்துகொண்டு உரையாற்றினர்.





கடல் கடந்து வந்த கானம் ^

மயிலாப்பூர், தியாகராஜ வித்வத் சமாஜத்தின் ஆதரவில் வழக்கம்போல், தியாகப் பிரம்மத்தின் திருவாராதனை மகோத்சவம் நடைபெற்றது. இவ்வாண்டு இசைக் கலைஞர் விசுவநாதன் அவர்களின் அமெரிக்க மாணவ, மாணவிகளும் மேடையில் சாஸ்திரீய முறைப்படி தியாகராஜ கீர்த்தனைகளைப் பாடி ரசிகர்களைப் பரவசப்படுத்தினர். டாம்ராஸ் வாம்பாட்டு, கார்டன் ஸ்விஃப்ட் வயலின்; டக்ளஸ் நைட் மிருதங்கம்.


புகைப்படக் கலை ^

ஒவ்வொரு புகைப்படமும் ஒரு கதை கூறியது புகைப்படக் கண்காட்சியிலே! மாக்ஸ்முல்லர் பவன் ஆதரவுடன் இந்திய புகைப்படச் சங்கம் சென்னையில் ஏற்பாடு செய்திருந்த இந்தக் காட்சியில் உலகத்தின் தலைசிறந்த புகைப்பட நிபுணர்களின் பரவபூர்வமான புகைப்படங்கள் இடம் பெற்று நம்முடன் பேசின! ''பெண்'' என்ற தலைப்புடைய இக் காட்சியில் 'ஃபாஷன் மாடல்'.

குழப்பம் மிகுந்த நிலை!

டான் வாகனர் தலைமையில் அமெரிக்காவிலிருந்து வந்திருந்த நாட்டியக் குழு சென்னை மியூசிக் அகாடெமியில் வழங்கிய நிகழ்ச்சிகள் மாடர்ன் ஆர்ட் வகையைச் சேர்ந்தவை. ஒன்றும் புரிந்துகொள்ள முடியாமல் இதைப் பார்த்தவர்கள் குழம்பிய போதிலும் நாட்டியக் குழுவினரின் உடல்கள், ரப்பராகச் சொன்னபடியெல்லாம் வளைந்து கொடுத்ததையும், கைகால்களின் எழிலார்ந்த அசைவுகளையும் கண்டு அதன் பின்னுள்ள உழைப்பைப் புரிந்து கொண்டனர்.

>



Fleet

ரீஃபில்

* மழமழப்பாக எழுதுவது
* சுத்தமாக எழுதுவது
* நீடித்து உழைப்பது



Creative Unit-837-Tam.

வாட்டுமல் இண்டஸ்ட்ரீஸ் பிரைவேட் லிமிடெட்
9-9ஏ, எஸ். பாட்கர் மார்க்,
பம்பாய்-400 036

ஈடிலா இன்பம் காண ஆடவருக்கு உறுதுணை



எல்லையில்லா இன்பம், எங்கெங்கும் வெற்றிகாணும் ஆடவருக்கே. அந்தப் பாக்கியசாலிகளில் நீங்களும் ஒருவராக விளங்கலாமே. உங்களுக்காகவே காத்திருக்கிறது ஆரோக்கியம்-வலிமை. வீரியம். வழிகாட்டுவது ஒகாஸா. வற்றாத இன்ப ஊற்று—அதுவல்லவா வாழ்வு! ஆடவருக்கு உண்டு ஒகாஸா. பெண்மணிக்கும் இருக்கிறது ஒகாஸா. வயது நழுவினாலும் வாழ்வு நழுவாது. தெம்பை மீட்டு இன்பமூட்ட என்றுமே உண்டு நவீன டானிக் மாத்திரைகளான ஒகாஸா.

ஒகாஸா-ஹார்மோ-பார்மா லிமிடெட். லண்டன் பெர்லின் தயாரிப்பு.

எல்லா முக்கிய மருந்துக் கடைகளிலும் கிடைக்கிறது.

OKASA CO. PVT. LTD.
P.O. BOX 396, BOMBAY-1.

விமோசனத்துக்கு விமோசனம் உண்டா?

சென்னைக் கிறித்துவ இலக்கியச் சங்கத்தின் ஆதரவில் இயங்கி வரும் நண்பர் வட்டத்தின் சார்பில் ஜனவரி 13, 14 இரு நாட்களில் நடந்த ஐந்தாவது தமிழ் எழுத்தாளர் - வாசகர் கருத்தரங்கில் கிடைத்த சில சுவையான தகவல்கள் :

'விமோசனம்' என்றால் என்ன ?

சென்னை மெமோரியல் ஹாலில் நடந்த இக்கருத்தரங்கைத் தொழிலதிபர் திரு ந. மகாலிங்கம் அவர்கள் தொடங்கி வைத்து, முதல் நாள் காலை முதல் அமர்வுக்குத் தலைமை வகித்தார். கருத்தரங்கில் பேச வேண்டிய பொருள்: 'தமிழ் நாவல்களில் மனித விமோசனம்'.

இந்தப் புதுமையான தலைப்பு பெரும் சர்ச்சைக்குள்ளானது. ஒருவர் 'இந்த விமோசனம் (Salvation) என்ற வடமொழிக்கு ஏற்ற சொல் கழுவாய். ஆகவே இதையே குறிப்பிட வேண்டும்' என்றார். உடனே திரு நா. பார்த்தசாரதி எழுந்து வந்து, 'விமோசனம் என்பதற்குக் கழுவாய் என்பது பொருத்தமாயில்லை. திருக்குறளில் 'தீர்திறன்' என்னும் ஒரு சொல் வருகிறது. அது பொருத்தமாயிருக்குமெனக் கருதுகிறேன்' என்றார். பேராசிரியர் ந. சஞ்சீவி அதை மறுத்து, 'விடுதலை என்ற சொல்லே இதற்குப் பொருந்தும்' என்பதை விளக்கினார்.





அதோடு இந்த விமோசனத்துக்கு விமோசனம் கிடைத்ததா? அதுதான் இல்லையே!

திரு தனபாண்டியன், 'விடுதலை' என்று சொன்னதை ஆமோதித்து, இதற்கு ஈடேற்றம், மீட்பு என்றும் சொல்லலாம் என்று கருத்துத் தெரிவித்தார். கருத்தரங்கமல்லவா? கருத்துக்குப் பஞ்சமா என்ன?

திரு சோ. சிவபாத சுந்தரம் பேசும்போது 'நாவல்களில் இந்த விமோசனத்தை எங்கே தேடுவது என்று எனக்குப் பிரச்னையாக இருந்தது' என்று குறிப்பிட்டுவிட்டு, விமோசனம் என்பதற்கு 'ஆன்ம ஈடேற்றம்' என்பதே பொருத்தமாயிருக்கும் என்றார் ஆணித்தரமாக. உடனே ஓர் அன்பர், 'இது சொல் வாராய்ச்சிக் கருத்தரங்காக ஆகிவிடுமோ என்று அஞ்சுகிறேன்!' என்றார். இன்னொருவர் இதற்குச் சிறிதும் அஞ்சாமல், 'விடுதலை என்பதைக் கிறித்தவம் 'மீட்பு' என்று சொல்கிறது' என்று சொல்லிவிட்டு ஒரு நூலிலிருந்து 'விடுதலை' என்பதற்கான விளக்கங்களைப் படிக்க ஆரம்பித்து விட்டார்.

நேரம் அதிகமாவதைக் கண்ட தலைவர் திரு மகாலிங்கம், 'முதலில் இதிலிருந்து நாம் விடுதலை பெறுவோம்...' என்றார் நகைச்சுவையாக.

இறுதியில் நன்றி கூறிப் பேசிய அமைப்பாளர் திரு இ. பாக்கியமுத்துவோ 'உணவருந்தச் சற்று விடுதலை பெறுவோம்!' என்று அனைவரையும் சிரிக்க வைத்து விட்டார்.



ஸ்ரீமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி.

மேலே: 1. திரு மகாலிங்கம் தொடங்கி வைக்கிறார்.
2. திரு நாரண துரைக்கண்ணன்.

லைட்டுக்கு விமோசனம் !

முதல் நாள் காலை முதல் அமர்வில், 'கிறிஸ்தவத்தில் மனித விமோசனம்' என்பதைப் பற்றித் தாம் எழுதிய கட்டுரையை ஆங்கிலத்தில் படித்துக் கொண்டிருந்தார் திரு டி. கே. தாமஸ். ஓர் இடத்தில் 'விமோசனம்' என்பதற்குப் பைபிளில் கூறப்பட்டிருந்த ஒரு வாசகத்தை—அதாவது 'Salvation is from darkness to light) என்று—படித்துக் கொண்டிருந்த போது மின்சாரக் கோளாறினாலோ என்னவோ விளக்குகள் எல்லாம் அணைந்து

விட்டன. அவையில் அப்போது கேட்க வேண்டுமே சிரிப்புக்கு !

கருத்தரங்கில் ஜல்லிக்கட்டு !

பொங்கல் நாளில் நடந்த இரண்டாம் நாள் கருத்தரங்கு முதல் அமர்வின் தலைவர் திரு நாரண துரைக்கண்ணன். அவர் தம் பேச்சை, 'தமிழ் இலக்கியத்தின் விமோசனம் காண வந்திருக்கும் சகோதரர்களே...' என்று தொடங்கியது அனைவரையும் கவர்ந்தது.

இந்த இரு நாள் கருத்தரங்கில் பதினேழு நாவல்கள் ஆய்வுக்கு எடுத்துக் கொள்ளப் பட்டன. நாவல்கள் பற்றிய திறனாய்வுக்குப் பின் காரசாரமான விவாதங்கள் நடந்தன. விவாதத்தில் மாணவர் பிரச்னை வந்தபோது பேராசிரியர் ந. சஞ்சீவி அவர்களுக்கும், திரு நா. பார்த்தசாரதி அவர்களுக்கும் கடுமையான வாக்குவாதம் நடந்தது.

இரண்டாவது அமர்வுக்குத் தலைமை தாங்க வந்திருந்த திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி அவர்கள் (திரு சத்தியமூர்த்தி அவர்களின் திருமகள்) இந்தக் கடுமையான வாக்குவாதத்தைக் கவனித்துக் கொண்டிருந்தார்.

பிறகு அவர் தம் தலைமையுரையில், ''பொங்கல் நாளில் நாட்டுப்புறங்களில் 'ஜல்லிக்கட்டு' நடப்பதைப் பார்த்திருக்கிறோம். இன்று நண்பர் வட்டத்தினர் ஓர் இலக்கிய 'ஜல்லிக்கட்டை' நடத்தி விட்டனர்...'' என்று சொன்னதும் அவையில் 'கொல்'லென்ற சிரிப்பொலி எழுந்தது.

இந்த அமர்வில் நெஞ்சில் ஒரு முள், மோக முள், மணமலர், எங்கே போகிறோம்? ஆகிய நான்கு நாவல்கள் ஆய்வுக்கு வந்தன. இது குறித்துத் திருமதி லட்சுமி கிருஷ்ணமூர்த்தி ஒரு சொல் அலங்காரமே நடத்தினார்.

''இந்த விமோசனப் பாதை ஒரே முள்ளாக (நெஞ்சில் ஒரு முள், மோக முள்) இருக்கிறது! ஆகவே, நாம் 'எங்கே போகிறோம்?' என்பதை நினைவில் கொள்வோம். இந்த அமர்வு 'மணமலராக' இருக்குமென நம்புகிறேன்...'' என்று சொல்லிவிட்டு, ''இதைப் பற்றிய 'ஜல்லிக்கட்டை'ப் பின்னர் வைத்துக் கொள்ளலாம்'' என்றார்!

'ஆண்டுதோறும் இதுபோன்று பொங்கல் விருந்து படைக்க வேண்டும்' என்று தம் ஆவலைத் தெரிவித்துக் கொண்ட அவர், இதற்கு முன் நடந்த நான்கு கருத்தரங்குகளில் ஆற்றிய உரைகளை நூல் வடிவில் கொணர்ந்திருப்பதை வெகுவாகப் பாராட்டினார். இதற்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில் திரு ந. சஞ்சீவி அவர்கள் பேசுகையில், கருத்தரங்கில் நடக்கும் உரையாடல்களும் நூலில் இடம் பெற்றால் மிக்க பயனுள்ளதாகவும் சுவையாகவும் இருக்கும் என்றார்.


கருத்தரங்கு நிறைவு பெறும் சமயத்திலாவது இந்த விமோசனத்தை விட்டாரா ஒருவர்? 'விமோசனத்துக்குப் பலர் பல கருத்துக்களைச் சொன்னார்கள். இதற்கு 'நிறைவு' என்ற சொல்லையும் பயன்படுத்தலாம்' என்று சொல்லி மன நிறைவு பெற்றார் அவர்!

பொ. மறைமலை

அலை வேகமறியக் கடிகாரம்!

அலைகடலிலே நீச்சலடித்துப் போகிற வீரர்களுக்கு அலைகளின் வேகம் தெரிந்தால் பாதுகாப்பு. சில இடங்களில் சுழல் வேகம் நீச்சல் வீரர்களையும் அமுக்கி விடலாமில்லையா? நியூயார்க் நிறுவனமொன்று ஓர் அலை வேகம் அறியும் கருவியைக் கண்டுபிடித்து நீச்சல் வீரர்களுக்கு உதவியுள்ளது. கடிகாரம் போல் இதைப் பயன்படுத்தி அலை வீச்சுக்களின் மாறுதல்களை அறியலாம்!





சுட்டுத்தள்ளும் சுத்தி!


சுத்தியலைத் தூக்கி மூலையில் எறிந்து விடலாம்! மேற்கு ஜெர்மனியில் உள்ள ஒரு ஸ்தாபனம் ஆணிகளையும், திருகாணிகளையும் சுவருக்குள் செலுத்தத் துப்பாக்கி ஒன்றைக் கண்டுபிடித்திருக்கிறது. இந்த நவீன கருவி நாலரை அங்குலம் துளையிட்டுத் திருகாணிகளைப் பொருத்தி விடுகிறது. இது சுத்தியல்போல் சத்தத்தை எழுப்பாதாம்! ஆஸ்பத்திரிகளில் சத்தமில்லாமல் இந்த நவீனக் கருவியைப் பயன்படுத்தலாம். ஆணிகளைச் சுட்டுத் தள்ளும் சுத்தியல் வேலைகளைத் துரிதப்படுத்துகிறது.

பி. எஸ். எம்.

காமிராவைக் காக்க...

காமிராக்களை நெடு நாட்களுக்கு உபயோகிக்காமல் வைத்திருக்கக் கூடாது. ஒரு மாதத்துக்கு ஒரு தடவையாவது வெளியே எடுத்து எல்லா ஸ்பீட்களிலும் 'க்ளிக்' செய்து பாருங்கள். பெட்டியில் வைக்கும்போது தோல் பெட்டியிலிருந்து பிரித்து வையுங்கள். இல்லாவிட்டால் லென்ஸ் பூஞ்சக் காளான் பூத்துவிடும். பிலிமை நெடு நாட்களுக்குக் காமிரா உள் வைக்கக் கூடாது.

யோசனை கூறுவது இல்லஸ்டிரேட்டட் வீக்லி தகவல்: பாலி



7. திருப்திப் புன்னகை

மறுநாள் ஞாயிற்றுக்கிழமையன்று தனஞ்செயனைச் சில இடங்களுக்கு அழைத்துப் போய்க் காட்ட அனுபமாவுடன் மைக்கேலும் வந்தான். ஃபோன் செய்து அவனை அழைத்திருந்தாள் அவள். ஐ. நா. சபை கூடும் கட்டிடத்தை, அதன் நிர்வாக அலுவலகங்கள் உள்ள வானளாவும் அமைப்பை முற்பகலில் போய்ப் பார்த்தார்கள். பிற்பகலில் உலகிலேயே மிகப் பெரிய அரங்கமான ரேடியோ ஸிடி ஹாலுக்குச் சென்றார்கள். ஐயாயிரத்து

சூதாடித் தொலைப்பதற்கென்று ஒரு நகரையே நிர்மாணித்திருக்கிறார்கள்! லாஸ் வெகாஸ் சென்றால் திரும்பிய பக்கமெல்லால் சூதாட்டக் கருவிகள் கண்ணுக்குப் புலனாகாத கொக்கிகளால் மனத்தைக் கவ்வி இழுக்கும்!''

தனஞ்செயன் கூறினான்: ''முதன் முதலில் மனிதனைச் சந்திர மண்டலத்துக்கு அனுப்பியதும் அமெரிக்காதான்; அணுகுண்டைப் போட்டு நகரங்களையே தரைமட்டமாக்கியதும் அமெரிக்காதான்!''

விண்ணும் மண்ணும்





நானூறு ஜன்னல்களைக் கொண்ட ஐ. நா. சபைக் கட்டிடமும் சரி, நூற்றி நாற்பத்திநாலு அடி அகலமுள்ள ரேடியோ ஸிடி ஹால் அரங்கமும் சரி, பிரமிக்க வைப்பதாகத்தான் இருந்தது, தனஞ்செயனுக்கு.

''சிந்தனை செயல் இரண்டுமே பெரிதாகத்தான் இருக்கிறது இந்நாட்டில்'' என்றான். ''சிறிய அளவில் எதையுமே காணோம்!''

''ஆமாம், ஆக்கபூர்வமான காரியங்களில் மட்டுமல்ல; அழிவுக்குரிய, மனிதனை இழிவுபடுத்துகிற விஷயங்களானாலும் சிந்தனை செயல் இரண்டுமே பிரும்மாண்டமான அளவில்தான் இருக்கும், இங்கு!'' என்றான் மைக்கேல்.

''செல்வத்தை ஈட்டுவதில் அபாரமான சாமர்த்தியம் உள்ளவர்கள் அமெரிக்கர்கள். அவர்களேதான் அதைச்

கி. ராஜேந்திரன்

''மிக உன்னதமான கலைகளுக்கும் கலைஞர்களுக்கும் ஆக்கமும் ஊக்கமும் அளிக்கிற அமெரிக்காவில் உலகின் மிகப் புராதனமானதும் இழிவானதுமான விபசாரக் கலையும் கட்டுப்படுத்த முடியாத அளவு பரவி ஒரு போலி நாகரிகமாகக் கூட வளர்ந்து விட்டது'' என்றாள் அனுபமா.

''ரிப்பன் விரித்தாற்போல் நாடெங்கும் மிக உன்னதமான சாலைகள்; மிக அதிகமான விபத்துக்களும் இங்கே தான். மிக உயர்தரமான இலக்கியங்கள் உருவாகிற அமெரிக்காவில் ஆபாசக் களஞ்சியங்களுக்கும் கணக்கு வழக்கு இல்லை!''

''கொள்ளையடிப்பது, கொலை செய்வது, கள்ளக் கடத்தலில் ஈடுபடுவது, லஞ்சம் வாங்குவது, மோசடிகள் பண்ணுவது என்றெல்லாம் ஆரம்பித்தால் கூடச் சின்ன அளவில் எங்களுக்கு எதுவும் செய்யத் தெரியாது!'' என்று கூறிச் சிரித்தான் மைக்கேல்.

''குறைகள் என்று எந்த நாட்டில் இல்லை? எந்த மனிதன் இதற்கு விதி விலக்கு? உலகமே போற்றுகிற ஓர் ஓவியனை, 'அந்தக் குடிகாரப் பயலா!' என்பது போல் நாம் வர்ணித்தால் அது நம்முடைய சிறுமையைத்தான் காட்டும்'' என்றான் தனஞ்செயன்.

''உண்மைதான். நீ இந்த மனப்பான்மை கொண்டிருப்பது எனக்குத் திருப்தியாக இருக்கிறது. ஆனால் எந்த ஒரு நாட்டின் பிரஜையும் அந்நாட்டின் குறைபாடுகளையும் உணர்ந்திருக்க வேண்டும். தன் குற்றங்களை உணராதவன் திருந்துவது எப்படிச் சாத்தியம்?''

''உன் வாதம் நியாயமானது. ஆனால் என் மனம் கடந்த சில நாட்களில் நான் இங்கு கண்டும் கேட்டும் உள்ள சாதனைகளால் நிரம்பியிருக்கிறது'' என்றான் தனஞ்செயன். மாலை மயங்கும் வேளையில் அவர்கள் கிரீன்விச் கிராமம் என்று அழைக்கப்பட்ட பகுதியில் உலாவிக்கொண்டிருந்தார்கள். இந்த இடம் எழுத்தாளர்கள், ஓவியர்கள் போன்ற கலைஞர்கள் வாழுமிடமாகப் புகழ் பெற்று இருந்தது. விநோதமான பொருள்கள் நிரம்பிய சின்னஞ் சிறிய கடைகள் ஏராளமாய் இருந்தன. நியூயார்க் பல்கலைக் கழகம் பக்கத்திலேயே இருந்ததால் மாணவர்களை ஈர்க்கக் கூடிய பல விசித்திரப் பொருள்களைக் கடைகள் கொண்டிருந்தன. உண்மை



யான ஹிப்பிகளும் தோற்றத்தால் மட்டும் ஹிப்பியானவர்களும் ஜோடி ஜோடியாகவும் தனியாகவும் கூட்டமாகவும் நடைபாதைகளில் சென்று கொண்டிருந்தார்கள்.

வேடிக்கை பார்த்துக் கொண்டே நடந்தான் தனஞ்செயன். அமெரிக்காவின் இதர பகுதிகளுடன் ஒட்டாமல் ஏதோ ஒரு நூதன உலகுக்குள் வந்து விட்டது போன்ற பிரமையை அந்தப் பகுதி ஏற்படுத்தியது.

''அமெரிக்காவின் வேகமான வளர்ச்சி உன்னை அதிசயத்தில் ஆழ்த்துவதாய் இருக்கிறது என்றாய். அதன் காரணம் என்னவென்று நினைக்கிறாய்?'' என்றான் மைக்கேல்.

''சுதந்திரப் பொருளாதாரம். அளவுக்கு மீறிய சுதந்திரம் காரணமாகச் சில பல தீமைகள் விளைந்தாலும் பாதகமில்லை, எந்தத் துறையிலும் சிந்தனை, செயல் சுதந்திரங்களைச் சிறிதளவுகூடக் கட்டுப்படுத்தக் கூடாது எனக் கருதுகிறார்கள். இது போட்டியிட்டுக் கொண்டு வளர உதவியிருக்கிறது. அதோடு நாட்டின் இயற்கை வளமும் சேர்ந்து கொண்டது.''

''இது பொருளாதார ரீதியான வாதம். சரித்திர நோக்கிலும் ஒரு காரணம் உண்டு. நேற்று சுதந்திர தேவி சிலையை நீங்கள் பார்த்தபோது அதில் எழுதியுள்ள ஒரு பாட்டைப் பற்றி இவன் சொல்லவில்லையா?''

'' நீயே சொல்லு '' என்றாள் அனுபமா.

''அந்தச் சிலையை 'நாடற்றவர்களின் அன்னை' என்று வர்ணிக்கிறது அதில் பொறிக்கப்பட்டுள்ள பாட்டு. 'உலகமெல்லாம் உள்ள ஏழை எளியவர்களை, ஒடுக்கப்பட்டவர்களை, வீடு வாசலற்றவர்களை, களைப்புற்றவர்களை, சுதந்திரமாக மூச்சு விட ஏங்குபவர்களை இங்கு அனுப்பு! அவர்களுக்காக இந்த நாட்டின் தங்கக் கதவைத் திறந்து வைத்திருக்கிறேன்! அவர்களுக்கு வழி காட்ட என் கரத்தில் தீபம் சதா எரிகிறது!' என்று கூறுகிறது.''

''என்ன அற்புதமான கருத்து!'' என்றான் தனஞ்செயன்.

''கருத்தளவில் நின்றுவிட்ட அற்புதமல்ல. அந்த அற்புதம் நிகழவும் செய்தது. உலகமெங்குமிருந்து ஒன்றுமில்லாமல் இங்கு வந்து சேர்ந்தவர்கள் ஒரு புதிய நாட்டைத் தங்களுடையது என்று கண்டார்கள். ஒரு புதிய வாழ்வைத் தொடங்கினார்கள். உதவாக்கரைகள் என்று தங்களை ஒதுக்கியவர்கள் முன்னிலையில் தாங்கள் உயர்ந்து விசுவரூபமெடுத்துக் காட்ட வேண்டும் என்ற உத்வேகத்தோடு உழைத்தார்கள். அந்த உழைப்பு பலன் அளித்தது.''

''ஆமாம். எந்த நாட்டவராயினும் கைநீட்டி வரவேற்று அவரவரிடம் உள்ள அறிவாற்றலையும் திறமையையும்



முழுமையாகப் பயன்படுத்திக்கொள்கிற மனப்பான்மை இங்கு நிறைய இருக்கிறது'' என்றான் தனஞ்செயன், குறிப்பாக அனுபமாவின் முகவாயை ஒரு தட்டுத் தட்டி. இயல்பான செயலானாலும் அந்த ஒரு வாய்ப்புக்காக அவன் ஏங்கிக் கொண்டிருந்ததை மற்ற இருவரும் உணர நியாயமில்லையே! 'பஞ்சின் மென்மையையும் ரோஜா மொட்டின் எழிலையும் நிறத்தையும் கொண்டதாயிருக்கிறது எனலாம்; ஆனால் உயிரோட்டமுள்ள இந்த இதமான கதகதப்பை எதற்கு ஒப்பிடுவது?' என்று எண்ணினான் அவன்.

''தீர்க்கதரிசனமுள்ள தலைவர்களும் இருந்தார்கள் என்பதை நாம் மறந்துவிடலாமா?'' என்றாள் அனுபமா. ''வாஷிங்டன், ஜெபர்ஸன், லிங்கன், ரூஸ்வெல்ட், கென்னடி என்று மக்களை லட்சிய நோக்கில் திருப்பிவிடும் சக்தி வாய்ந்த மாபெரும் தலைவர்கள் அமைந்ததும் இந்நாட்டின் அதிர்ஷ்டம்தான்.''

''பணத்தால் ஏற்றத் தாழ்வுகள் மிருந்திருந்தாலும் மனத்தளவில் அதிக வேறுபாடு இல்லை இங்கே. முதலாளியிடம் சேரும் பணம் தொழில் விஸ்தரிப்பின் மூலம் தன்னைப் போன்ற இன்னும் பலருக்கு வாழ்வு அளிக்கப் பயன்படும் என்று தொழிலாளி உணர்ந்திருக்கிறான். தொழிலாளியின் உழைப்பு இல்லாது போனால் தான் இல்லை என்பதை முதலாளி அறிந்திருக்கிறான். இருவரும் ஒருவரையொருவர் மதிப்பதுடன் தங்களுக்குப் பேருதவியாக இருக்கும் விஞ்ஞானியைப் போற்றவும் கற்றுக்கொண்டிருக்கிறார்கள்'' என்றான் தனஞ்செயன்.

''நமது நண்பன் அமெரிக்கா என்று உச்சரிக்க வாய் திறந்தவன்தான். இன்னும் மூடவேயில்லை! அமெரிக்கா....ஆ! என்று அதிசயத்தில் ஆழ்ந்தபடியே இருக்கிறான். இவனை ஹார்லெம் பகுதிக்கு அழைத்துப் போய்க் காட்டு! அங்கு நிலவுகிற ஏழைமையையும் பார்க்கட்டும்'' . என்றான் மைக்கேல் டேவிஸ்.

'' ஏன்? நீ வரவில்லையா?'' என்றாள் அனுபமா.

'' இல்லை. எனக்கு முக்கிய வேலை இருக்கிறது. எனது ஆராய்ச்சியினிடையில் தோன்றியுள்ள ஒரு பிரச்னை குறித்து அமைதியாக யோசிக்க வேண்டும்.''

'' நானே வரை அதை ஒத்திப் போடக் கூடாதா, மைக்? தனஞ்செயன் என் வீட்டுக்குச் சாப்பிட வருகிறான் என்று தெரியுமில்லையா உனக்கு? இந்திய பாணி உணவு உனக்கும் ரொம்பப் பிடித்தமானதுதானே?''

''ஸாரி அனு! நானே உன்னை வழக்கம் போல் சந்திக்கிறேன்.'' மைக்கேல் சாலையோடு சென்று கொண்டிருந்த ஒரு டாக்ஸியை நிறுத்தி ஏறிக் கொண்டு விட்டான்.

அனுபமாவின் காரை நோக்கி இருவரும் நடந்தபோது, ''உங்கள் இருவரிடையிலும் வேண்டாத குறுக்கீடாக விளங்குகிறேனா நான்?'' என்று மனம் வருந்தியவன் போல் நடித்துக் கேட்டான் தனஞ்செயன்.

'' மைக்கேல் இரண்டு நாட்களாக வேண்டும் என்றே என்னிடமிருந்து ஒதுங்கிச் செல்கிறான் என்று எனக்குப் புரிகிறது. ஆனால் அதற்கு அவசியம் இல்லை. எங்கள் இருவரிடையேயும் இருந்துவந்த சிநேக பாவம் உங்கள் வருகையால் எந்த விதத்திலும் மாறுதல் அடையவில்லை. அதை மைக் சீக்கிரமே அறிந்து கொள்வான்.''

''சிநேக பாவம் மட்டும்தானா உங்கள் இருவரிடையிலும்?''

'' அதற்கும் கொஞ்சம் அதிகம் தான். அவன் என்னைக் காதலிக்கிறான் என்று சொல்வதில் எனக்குத் தயக்கமில்லை. வெளிப்படையாகவே அதை என்னிடம் தெரியப்படுத்தி யிருக்கிறான். ஆனால் என் உள்ளத்தில் அதன் எதிரொலி இன்னும் ஏற்படவில்லை.''

''மைக்கேல் பொறுமைப்படாமல் பொறுமையுடன் இருந்தால் நாளாவட்டத்தில் உன் மனம் அவனுக்காகப் பாகாய் உருகுவதைக் காண்பான்.''

'' காணலாம், காணாமலுமிருக்கலாம். நானே நடக்கப் போவது பற்றி நான் ஜோஸியமா சொல்ல முடியும்?'' என்றாள் அனுபமா சற்றுக் கடுமை தொனிக்க.

கார் ஓட்டுவதில் கவனமாய் இருந்த அவள், தனஞ்செயனிடம் திருப்திப் புன்னகை மலர்ந்ததைக் காணவில்லை.

8. காதல் சல்லாபம்

அனுபமாவின் அம்மா தயாரித்திருந்த உணவுமிகவும் ருசியாக இருந்தது. ஒரு பிடிபிடித்தான் தனஞ்செயன். சுடச் சுடத் தக்காளி சூப்பும் மணக்க மணக்க வெங்காய சாம்பாரும் காரசாரமான உருளைக்கிழங்குக் கறியும், பால் பாயசமும் மல்லிகைப் பூப்போன்ற சாதமும், கட்டித் தயிரும் பீன்ஸ், கோஸ், காரட் எல்லாம் சேர்ந்த கூட்டும்.... அடாடா! நாகுக்கின்றி ஏப்பம் விட்டு விடக் கூடாதே என்ற பயம் மட்டும் இல்லாதிருந்திருந்தால் தனஞ்செயன் இன்னும் கூடச் சாப்பிட்டிருப்பான்!


போற்றத்தக்க
பெருமை உடையது
உங்கள் அழகு...
அணியத்தக்க
பெருமை உடையது
சாரதாஸின்
பட்டுப் புடவைகள்.
சாரதாஸின்
பட்டுப் புடவைகளை
அணிந்து
லட்சுமிகரமாக
விளங்குங்கள்.
சாரதா'ஸ்
பட்டுப் புடவைகளுக்கு
நம்பிக்கையான பெயர்
தின் பில்டிங், 175/1, மவுண்ட்ரோடு,
சென்னை-2. போன்: 87177
32, N.S.B. ரோடு, திருச்சி-2.
போன்: 7077

அனுபமா உற்சாகமாக நிறையப் பேசினாள்; அவள் தாயார் நன்றாக உபசரித்தாள், தம்பியும் தங்கையும் இந்தியாவைப் பற்றி ஏராளமாய்க் கேள்விகள் கேட்டார்கள். தனஞ்செயனின் வாய்க்கு இரண்டுவிதமாகவும் ஏகப்பட்ட வேலை இருந்தது. திணறித்தான் போனான்.

அனுபமாவின் அப்பா மட்டும் அதிகம் பேசவில்லை. சாப்பாட்டுக்குப் பிறகு அவருடன் உரையாடக் கிடைத்த சந்தர்ப்பத்திலும் அவர் அதிகம் பேசவில்லை. ''வர்த்தக நோக்கில் வந்திருக்கிறாயா? ஓகோ! ஸ்டேட் டிரேடிங் கார்ப்பொரேஷன் சார்பிலா? சரிதான்!'' என்பதற்கு மேல் அவர் வார்த்தைகளை வளர விடவில்லை. இன்றைய இந்தியாவின் பிரச்னைகள் பற்றித் தனஞ்செயன் தானாகவே பேச்சைத் தொடங்கினாலும் அவர் பாரதத்தின் தொன்மையான சரித்திரப் பெருமைகளைக் குறித்து உரையாடலைத் திசை திருப்பினார்!

'எதற்காக இந்த மனிதர் தமக்குள் இப்படி சுருண்டு கொள்கிறார்?' என்று எண்ணிய தனஞ்செயன் கேள்வியைத் தனக்குள் அடக்கிக் கொள்ள முடியாது வெடிக்கச் செய்தான்.

''ஆமாம், என்னுடன் பேசுகிற எந்த இந்தியனுக்கும் நான் மனம் விட்டு அளவளாவ வில்லை என்பதைப் புரிந்து கொள்வது சுலபமாகவே இருக்கும்'' என்றார் பானர்ஜி.

அனுபமா கூறினாள்: ''ஒரு சமயம் அப்பா நியூயார்க் வந்திருந்த சில இந்தியர்களை யதேச்சையாகச் சந்தித்து அறிமுகம் செய்துகொள்ள நேர்ந்தது. தாமும் இந்தியாவிலிருந்து வந்து இங்கு குடியேறியவர் என்பதால் அவர்களை மரியாதைக்கு வீட்டுக்கு வாருங்களேன் என்று அழைத்து விட்டார்.''

'' 'கஞ்சி வரதப்பா' என்று அவர்களும் என்னைப் போல் நாக்கைச் சப்புக் கொட்டிக் கொண்டு வந்துவிட்டார்களாக்கும்!'' என்று கூறி அனுபமாவின் தாயார் கமலாவைப் பார்த்தான் தனஞ்செயன்.

அவள் சிரித்துவிட்டுச் சொன்னாள்: ''இந்தியாவின் பொருளாதார நிலை பற்றிப் பேச்சு திரும்பியது. இந்திய அரசு கடைப்பிடித்து வரும் பொருளாதாரக் கொள்கைகள் தவறு என்றும் துரித முன்னேற்றத்துக்கு உதவாது என்றும் இவர் சொன்னார்.

''உடனே அவர்களில் ஒருவன், இந்தியனாகப் பிறந்தும் அமெரிக்கப் பிரஜையாக மாறி நியூயார்க்கில் உட்கார்ந்து கொண்டு புது தில்லியில் உள்ளவர்களின் தலையை உருட்டுவது ரொம்பச் சுலபம். ஆனால் அதற்கு ஓர் அருகதை வேண்டாமா? குஸ்தி போடுவதில் உள்ள சிரமம் கோதாவில் இறங்கிப் பார்த்தால்தானே தெரியும்?' என்று கேட்டு விட்டான்.....''

''அன்று முதல் அப்பா இந்தியர்கள் யாரைப் பார்த்தாலும் மௌனச் சாமியாராக மாறி விடுகிறார்'' என்று தாயார் ஆரம்பித்ததை முடித்து வைத்தாள் அனுபமா.

''அவன் போக்கு முட்டாள்தனமானது என்பது குழந்தைகளுக்குக்கூடத் தெரியும்'' என்றான் தனஞ்செயன். ''கச்சேரி நன்றாயிருக்கிறது, இல்லை என்று சொல்கிறவனுக்கு மேடை ஏறிப் பாடத் தெரிந்திருக்க வேண்டியதில்லை. அவன் மனசுக்கு உண்மை என்று பட்டதை அவன் பேசுகிறான். அது தான் அபிப்பிராய சுதந்திரம். புது தில்லி தவறு செய்கிறது என்று கூறப் பொருளாதாரப் பேராசிரியரான உங்களைவிட அதிகமாய் வேறு யாருக்கு அருகதை உண்டு? என்னிடம் தாராளமாக மனம் விட்டுப் பேசுங்கள். நான் எதையும் தவறாக எடுத்துக் கொள்ள மாட்டேன்.''

''மனம் என்று ஒன்று இருந்தாலல்லவா மனம் விட்டுப் பேச? தேசத் துரோகி என்று அவர்கள் அன்று சொல்லாமல் சொல்லி விட்டபோது என் மனம் உடைந்து போயிற்று'' என்றார் பானர்ஜி. நீர் தளும்பி நின்றது அவர் கண்களில்.

''அந்த அற்பர்களையே ஏன் நினைத்துக் குமைந்து கொண்டிருக்கிறீர்கள்? இப்போது நான் ஒப்புக் கொள்கிறேன். இந்திய அரசு தவறுகளுக்கு அப்பாற்பட்டது அல்ல. ஏன் என்னுடைய இந்த விஜயத்தையே எடுத்துக் கொள்ளுங்கள். எஸ். டி. ஸி. சார்பில் ஆர்டர்கள் பிடிக்க வந்திருக்கிறேன். கட்டுப்படியாகிற விலையிலா விற்கப் போகிறோம்? கிடையாது. வேறு பல நாட்டவர்கள் எங்கள் தயாரிப்புக்களை விடத் தரத்தில் சிறந்தனவற்றை இன்னும் குறைந்த விலைக்கு உற்பத்தி செய்து தருகிறார்கள். ஆனால் இந்தியாவுக்கு அந்நியச் செலாவணி அவசியத் தேவையாய் இருக்கிறது. டாலர்களைப் பெற நஷ்டத்தில் விற்கிறோம். இந்த நஷ்டத்தை எப்படி ஈடு கட்டுவது? இதே பொருள் உள்நாட்டில் விற்பனையாகும் போது விலையைப் பன்மடங்கு உயர்த்தி விடுகிறோம். சர்க்கரை, எஃகு போன்ற பல பொருள்களின் நிலை இதுதான். சராசரி இந்தியனுக்கு விலைவாசி விஷம் போல் ஏறுகிறது என்பதற்கு அதிகமாய் வேறு எதுவும் புரியாது... இன்னும்

எவ்வளவோ சொல்லலாம், உங்களுக்குத் தெரியாதது அல்ல.''

''என் பதிலை எதிர்பார்க்காதே!'' என்றார் பானர்ஜி, முகத்தைப் பாறையாக்கிக் கொண்டு.

''அப்படியானால் அமெரிக்கா பற்றிப் பேசுவோம். குருஷேவ் சொன்னாரே, 'பனிப்போர் இல்லை என்றால் அமெரிக்கப் பொருளாதாரமே சரிந்துவிடு'மென்று. அது பற்றி என்ன நினைக்கிறீர்கள்? உலகெங்கிலுமுள்ள பல நாடுகளுக்கு அமெரிக்கா ஆயுத உதவி அளிப்பதற்கு என்ன நியாயம் இருக்கிறது? லாப நோக்குடைய அமெரிக்க முதலாளிகள் இதற்கு எந்த அளவுக்குக் காரணம்? தேர்தலுக்கு ஆகும் இமாலய அளவுச் செலவுகளுக்கு முதலாளிகள் பணம் தருவதும் பின்னர் அதை ஈடுகட்ட ஆட்சிப் பொறுப்பில் உள்ளவரிடம் சலுகைகள் எதிர்பார்ப்பதும் இங்கு சர்வ சகஜமல்லவா? இது அதர்மம்தானே? வாட்டர்கேட் விவகாரத்தினால் அமெரிக்காவுக்கு உலகமெங்கணும் ஏற்பட்டுள்ள அபக்கியாதி எப்போது நீங்கும்? இதற்கெல்லாம் பதில் சொல்லுங்கள்!''


பானர்ஜி சிரித்தார். அவர் கண்கள் பிரகாசித்தன. தயக்கமின்றிப் பேசினார். தங்குதடையின்றிச் சொற்கள் பிரவகித்தன. வாட்டர்கேட் ஊழல் முழுமையாக வெளியாக விழிப்புடன் இருந்த பத்திரிகைகளும் டெலிவிஷனும் தாம் முழுப் பொறுப்பு என்றே பெரும்பான்மையானவர்கள் கருதுகிறார்கள்; ஆனால் அதற்கு அமெரிக்க ஜனநாயக அமைப்பிலேயே உள்ள பாதுகாப்புக்கள் தாம் பெருமளவு காரணம் என்பதைத் தர்க்கரீதியாக ஆதாரங்களுடன் விளக்கினார். இப்படி ஆரம்பித்து அமெரிக்காவின் வலிமைகளையும், பலவீனங்களையும், நிறைகளையும், குறைகளையும் பற்றிச் சாங்கோபாங்கமாக விவரித்தார். கடைசியில் அவர் விண்வெளித் துறைக்கு வந்து சேர்ந்தபோது தந்தைக்கும் மகளுக்கும் இடையில் பெரிய வாக்குவாதம் ஆரம்பமாகிவிட்டது!

பொருளாதாரப் பேராசிரியர் பானர்ஜி, விண்வெளித்துறை வளர்ச்சியினால் விஞ்ஞான ரீதியில் அதிசயிக்கத்தக்க முன்னேற்றங்கள் ஏற்பட்டுள்ளனவெனினும், கற்பனைக்குக்கூட எட்டாத அந்த மாபெரும் தொகை அமெரிக்காவிலேயே ஏழைமை ஒழிப்புக்குச் செலவிடப்பட்டிருந்தால் பிரமிக்கத்தக்க பலன்கள் கிடைத்திருக்கும் என்று அபிப்பிராயப் பட்டார். பின்தங்கிய நாடுகளுக்கும் உதவியிருக்கலாம் என்றார். ''எங்கோ லட்சக்கணக்கான மைல்களுக்கு அப்பாலுள்ள, நமக்கு நேரடித் தொடர்பில்லாத எதையோ தேடிச் செல்ல, கோடானுகோடி டாலர்களைச் செலவிடுவதில் என்ன பயன்?'' என்று கேட்டார்.

விண்வெளி விஞ்ஞானி அனுபமாவோ அந்தக் கோடிக்கணக்கான டாலர்கள் சந்திர மண்டலத்திலோ அல்லது செவ்வாய் கிரகத்திலோ செலவிடப்படவில்லை என்றும் அமெரிக்காவிலேயேதான் செலவாகியுள்ளது என்றும் வாதாடினாள். அதனால் அமெரிக்க நாடும் அமெரிக்க விஞ்ஞானமும் வளர்ந்திருப்பதாகக் கூறினாள். அமெரிக்க மக்களின் அன்றாட வாழ்க்கைக்குக்கூட விண்வெளி விஞ்ஞானம் புதிய கண்டுபிடிப்புக்கள் மூலம் உதவியிருப்பதைப் பட்டியல் போட்டுக் காட்டினாள். இதெல்லாவற்றையும்விட

★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ **ஆச்சரியம்!**

பதினெட்டாம் நூற்றாண்டின் துவக்கத்தில், கிரிக்கெட் பந்தயங்கள் நடைபெறுங்கால் பணம் கட்டி விளையாடுவது (இன்று குதிரைப் பந்தயத்தில் நடைபெறுவது போன்று) சகஜமாக இருந்தது. 1719ல் லண்டனுக்கும் கென்டுக்குமிடையே நிகழ்ந்த ஒரு பந்தயத்தின் முடிவு குறித்து எழுந்த சர்ச்சை கில்ட் ஹால் நீதிமன்றத்தில் விசாரணைக்கு வந்தது. கென்ட் கோஷ்டி, குறிப்பிட்ட பந்தயத்தில் தாங்களே வெற்றி பெற்றதாகவும் லண்டன் அணியினர் தங்களுக்கு நூறு பவுன் தர வேண்டும் என்றும் வழக்குத் தொடுத்தது. வழக்கை விசாரித்த நீதிபதிக்குக் கிரிக்கெட் என்றால் என்னவென்றே தெரியாது! அவர் வழங்கிய தீர்ப்பு என்ன தெரியுமா? 'இரு அணியினரும் மீண்டும் அதே ஆட்டத்தை விளையாடிவிட வேண்டும்' என்பதே!



இப்போதெல்லாம் ஆட்டம் நடைபெறும் மூன்று அல்லது ஐந்து நாட்களுமே எதிர்பாராத காரணங்களால் ஒரு பந்துகூட 'போல்' செய்யப்படாவிடினும் திரும்பவும் அந்த ஆட்டத்தை வேறு தினங்களில் விளையாடுவது என்ற வழக்கமே இல்லை! ஒன்று, பூவா - தலையா அடிப்படையில் வெற்றி-தோல்வி நிர்ணயிக்கப்படும்; அல்லது பந்தயம் கைவிடப்பட்டதாகக் கருதப்படும்.

கிரிக்கெட் விளையாட்டுக்காரர்களின் வேதம் எனக் கருதப்படுவது 'விஸ்டென்' ('Wisden Cricketer's Amlanac') ஆண்டுக்கு ஒருமுறை வெளியிடப்

முக்கியமானதாக மக்களின் மனங்களில் ஏற்பட்டுள்ள ஆரோக்கியமான மாறுதல்களைச் சுட்டிக் காட்டினுள்.

தனஞ்செயன் அவர்களுடைய தர்க்கத்தின் இடையில் புகுந்து தான் கிளம்ப வேண்டும் என்றுன். ''ஒரு டாக்ஸிக்கு ஃபோன் செய்கிறீர்களா ?'' என்று கேட்டான்.

'' அனுபமா உன்னை அழைத்துப் போவாள். . மணி எட்டுதானே ஆகிறது ?'' என்றுர் பானர்ஜி.

தனஞ்செயன் விரும்பியதும் இதைத் தானுதலால் அவன் மறுப்புத் தெரிவிக்கவில்லை.

சற்று நேரம் மௌனமாகவே கார் ஓட்டிச் சென்ற அனுபமா, கடைசியில் பொறுமை இழந்தவளாக, ''நேற்றே கேட்டேன். இன்று வரை பதில் இல்லை'' என்றுள். ''காரணமும் எனக்குப் புரிகிறது. உங்கள் மனத்தில் உள்ளதை வெளியிடும் முன்னர் என்னை மேலும் சோதித்துப் பார்க்க விரும்பினீர்கள் ! என் குடும்பத்தினரையும் ஆழம் காண நினைத்தீர்கள், இல்லையா? பரீட்சையில் தேறிவிட்டேனு நான் ?''

தனஞ்செயன் பதில் கூருது காரின் உள்புற விளக்கைப் போட்டு இண்டு இடுக்குகளிலெல்லாம் கரத்தை நுழைத்துத் தடவி எதையோ தேடினுன். அவன் முன்எச்சரிக்கையுடன் இருந்தது பலன் தராமல் போகவில்லை. கட்டை விரலில் பாதி அளவே உள்ள ஒரு 'மைக்ரோஃபோன்' அவர்கள் பேசுவதையெல்லாம் கிரகித்துக் கொண்டதுடன் டிரான்ஸ்மிட்டராகவும் இயங்கி, எங்கோ தொலைதூரத்தில் உள்ள ரிஸீவர் ஸெட்டுக்கு அந்தப் பேச்சை ஒலிபரப்பிக் கொண்டிருந்தது ! விண்வெளி விஞ்ஞான முன்னேற்றத்தின் ஒரு பயனை அதன் உதவியுடன் யாரோ அவர்கள் காரில் பேசுவதையெல்லாம் வார்த்தைக்கு வார்த்தை கேட்டுக் கொண்டிருக்கிறுர்கள்! தமிழில்தான் இவர்கள் பேசுகிறுர்கள் என்றுலும் மறுபுறத்தில் தமிழ் அறிந்தவர் இல்லை என்று என்ன நிச்சயம்? அல்லது குரல்களை டேப் ரிகார்டரில் பதிவு செய்து பின்னர் தக்கவர்களைக் கொண்டு மொழிபெயர்த்துக் கொள்ளலாம் அல்லவா ?

தனஞ்செயன் அதைச் சுட்டிக்காட்டி, கண் சிமிட்டிவிட்டுக்கூறினுன்: ''ஆமாம், அனுபமா! இப்போது நான் என் தயக்கத்தை யெல்லாம் ஒதுக்கி வைத்துவிட்டு உன்னையும் உன் குடும்பத்தையும் நன்கு புரிந்துகொண்டுவிட்ட தைரியத்துடன் கேட்கிறேன். உன்னை நான் மனப்பூர்வமாகக் காதலிக்கிறேன். என்னை ஏற்பாயா ? ஏற்றுக் கொண்டு என்னுடன் இந்தியாவுக்கு வருவாயா?''

திகைப்பு ஒரு சில விநாடிகளில் நீங்கப் பெற்றதும் அனுபமாவும் அந்த மோசடியில் உற்சாகமாகக் கலந்து கொண்டாள். ஹார்லெம் பகுதியை அவர்கள் சென்றடையும் வரையில் இனிக்க இனிக்க உல்லாசமாகக் காதல் மொழி பேசினுர்கள் !

யாரையோ ஏய்ப்பதற்காக விளையாட்டாகத் தங்கள் கற்பனைத் திறனைப் பயன்படுத்தித்தான் அவர்கள் பேசத் தொடங்கினுர்கள் என்றுலும் தனஞ்செயன் மட்டும் சீக்கிரமே தன்வசமிழந்து தான் மனப்பூர்வமாகவே பேசுவதை உணர்ந்தான். (தொடரும்)

அதி ஆச்சரியம்!! ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★ ★

பெறும் நூல் இது. அந்த அந்த ஆண்டின் சிறந்த கிரிக்கெட் ஆட்டக்காரர்களின் பெயர்கள் விஸ்டெனில் இடம் பெறும். தங்கள் பெயர் இவ்விதம் விஸ்டனில் இடம் பெறுவதை ஒரு கௌரவமாகக் கருதுவர் கிரிக்கெட் வீரர்கள். யார் இந்த விஸ்டென்?

இவரும் கிரிக்கெட் வீரர்தாம். 1864ல் 'விஸ்டென்' முதல் தொகுப்பை இவர் பிரசுரித்தார். தம்முடைய கிரிக்கெட் வாழ்க்கையில் விஸ்டென் மொத்தம் 649 விக்கெட்டுகள் எடுத்தார். 1850ல் லார்ட்ஸ் மைதானத்தில் விம்பிடன் அணியில் இவர் தென் பிராந்திய அணிக்கு எதிராக ஆடிய பந்தயத்தில் தெற்கு அணியின் பத்து விக்கெட்டுகளையும் வீழ்த்தினுர் - அனைவருமே 'க்ளீன் போல்ட்!'

ஒரு 'டெஸ்ட்' பந்தயத்தில் பத்து (ஆஸ்திரேலிய) விக்கெட்டுக்களையும் வீழ்த்திப் புகழ் பெற்றவர் ஜிம் லேக்கர் - இது அண்மைக் கால நிகழ்ச்சி.

1853ம் ஆண்டு ஆக்ஸ்போர்ட்ஷயருக்கு எதிராக ஆக்ஸ்போர்ட் பல்கலைக் கழகம் ஆடிய கிரிக்கெட் பந்தயத்தில், ஏ. காஸெனேவ் என்ற பௌலர் ஆக்ஸ்போர்ட் ஷயரின் முதல் இன்னிங்ஸில் பத்து விக்கெட்டுக்களையும் வீழ்த்தினுர். இதில் மேலும் அதிசயம் என்னவென்றுல் காஸெனேவ் எடுத்த பத்து விக்கெட்டுகளில், ஐந்து விக்கெட்டுகள் ஒரே ஓவரில் விழுந்தன! இதில் மற்றேர் ஆச்சரியம் என்னவென்றுல் 1889ம் ஆண்டு வரை ஓர் ஓவருக்கு நான்கு பந்துகள் வீசுவதுதான் வழக்கிலிருந்தது. ஓர் ஓவரில் நாலு தடவை பந்து வீசி காஸெனேவ் எப்படி ஐந்து விக்கெட்டுகள் எடுத்தார் ? அம்பயர் செய்த சிறு தவறுதான் காரணம்! தவறு அம்பயருடையதானுலும் என்ன? காஸெனேவின் சாதனை வரலாற்றில் இடம் பெற்றுவிட்டதே ? -- பாணன்



அக்காவுக்குத்தான் அதிகாரமா



குளியலறையை அவசரமாகத் தட்டினான் ஆனந்த்.

"உள்ளே அக்கா இருக்கிறாள்" என்றாள் அம்மா.

ஆனந்தின் முகம் தணலாய்ச் சிவந்தது: "அவசரம்.... ஆனந்தனுக்கு இந்த வீட்டில் வழியே கிடையாது. சை! எப்போது பார்த்தாலும் அக்கா... அக்கா... அக்கா..."

"ஏண்டா, இப்படி அலறுகிறாய்? அவள் ஆபீசுக்குப் போக வேண்டியவள். உனக்கு என்ன இப்போது கொள்ளை போகிறது?"

"ஒன்று செய் அம்மா. இந்த வீட்டில், 'ஆபீஸ் போகிறவளுக்குத்தான் அவசரம் வர வேண்டும். மற்றவர்களுக்கு அது வரக் கூடாது' என்று வாசலில் ஒரு போர்டு போட்டு வை!"

"ஏதோ ஒருநாளைக்கு.."

"ஒரு நாளா?" அம்மாவைப் பேச விடாமல் குறுக்கிட்டான் ஆனந்த். "உம்.. நான் வரும் நேரம் எல்லாம் அக்காதானே இருக்கிறாள். அம்மா! எனக்கு எல்லாம் தெரியும். அவள் சம்பாதிக்கிறவள். அவளுக்குத்தான் இந்த வீட்டில் அதிகாரம், உரிமை, பாத்தியதை எல்லாம்! நான்.... வெறும் தண்டச் சோறுதானே? எனக்குக் குளியலறை எதற்கு? குளியல் எதற்கு?"

"ஐயோ, ஐயோ!" என்று அம்மா தன் தலையில் அடித்துக் கொண்டாள். "படித்து முடித்திருக்கிறாய். நாளைக்கு நீயும் வேலைக்குப் போக வேண்டும். இப்படிப் பொறுமை இல்லாது இருக்கிறாயேடா?"

அதற்குள் குளியலறையை விட்டு வெளியில் வந்தாள் மாலதி. தம்பியின் ஆர்ப்பாட்டம் உள்ளே இருந்த அவளுக்கும் கேட்டிருக்க வேண்டும். அதை உறுதிப்படுத்துவதைப் போல் விஷமப் புன்னகை ஒன்று அவள் இதழ்களில் நெளிந்தது. "உம்... போடா!" என்றாள் ஆனந்திடம்.

ரேடியோ வைத்தான் ஆனந்த்.

அம்மா பறந்தோடி வந்தாள். "ஏ... ஆனந்த்! அக்கா பூஜை செய்கிறாள். உனக்குத் தெரியவில்லை?"

"அதற்கு நான் என்ன பண்ண?"

"ரேடியோவை நிறுத்துடா."

"அடுத்த அறையில் பூஜை செய்கிறவளுக்கு இங்கே ரேடியோ பாடுவது காதில் விழாது. கவலைப்படாதே!"

"என்னடா இது, குதர்க்கம்? அக்காவுக்காக வேண்டாமடா. ஒரு தெய்வ மரியாதைக்காவது ரேடியோவை ஐந்து நிமிடங்கள் நிறுத்தி வைக்கக் கூடாதா?"

"அம்மா! நீயுமா ஜாலக் பேசுகிறாய்? அக்கா கோபிப்பாள். அதனால் நிறுத்து என்று சொல்லிவிட்டுப் போயேன். அதை விட்டுக் கடவுள், அது இது என்று ஏன் என்னை அநாவசியமாய்ப் பயமுறுத்துகிறாய்?" என்றவன் விருட்டென்று எழுந்தான்.

அடுத்த விநாடி ஸ்விட்ச் போர்டிலிருந்த பிளக் படீரெனக் கீழே விழுந்தது.

அன்று காலையில் கம்யூனிட்டி சென்டர் மைதானத்தில் கிரிக்கெட் பந்தயம் நடப்பதாக இருந்தது. ஆனந்த் ஒரு கிரிக்கெட் ரசிகன். சீக்கிரம் அங்கு போகும் எண்ணத்துடன், டிபனுக்கு உட்கார்ந்தான்.

அதைக் கவனித்தாள் அம்மா. "இன்னிக்கு இட்லி கிடையாது. தோசைதான். மாலதிக்கு வார்த்துப் போட்டுவிட்டுத்தான் உனக்கு."



தமிழினியன்

வந்ததே கோபம், ஆனந்துக்கு.

''எதற்காக அம்மா என்னையும் ஒரு பிள்ளையாகப் பெற்றாய். மாலதியோடு நிறுத்தி இருக்கக் கூடாது?'' என்றவனாய்ச் சீறிக் கொண்டு எழுந்தான். '' எனக்குத் தோசையும் வேண்டாம். ஒன்றும் வேண்டாம்.''

சட்டையை மாட்டிக் கொண்டு வெளியில் புறப்பட்டான் அவன்.

''ஆனந்த் ! நான் வேண்டுமானால் இருந்து பிறகு சாப்பிடுகிறேன். வெளியே போவதாக இருந்தால் நீ முதலில் சாப்பிட்டுவிட்டுப் போ!'' என்றாள் மாலதி.

''வேண்டாம். வேலைக்குத்தான் சீக்கிரம் தேவை என்பார்கள். இங்கு என்னடாவென்றால்..... சொந்த வீட்டில் தோசை சாப்பிடுவதற்கே சீக்கிரம் வேண்டியிருக்கிறது'' என்று உதட்டைப் பிதுக்கி அலட்சியமாய்ச் சிரித்த ஆனந்த், மறு விநாடி யார் பதிலுக்கும் காத்திராமல் வெளியில் பறந்தான்.

பதினொரு மணிக்குத்தான் அவன் வீடு திரும்பினான். அவன் கையில் ஏதோ ஒரு கடித உறை இருந்தது.

''அம்மா!''

''என்னடா!''

'' வேலைக்குப் போகிறவர்கள்தான் எஜமானர்கள். மற்றவர்கள் அடிமைகள் என்பது தானே இந்த வீட்டின் சித்தாந்தம்? இதோ, பார் ! எனக்கும் வேலைக்கான உத்தரவு வந்துவிட்டது. நாளையிலிருந்து நானும் வேலைக்குப் போகப் போகிறேன். அப்போது அக்காவுக்குரிய அவசரம், உரிமை, முன் பாத்தியதை எல்லாம் எனக்கும் கொடுத்தாக வேண்டும். மறுக்க முடியாது.''

கர்வமும், கம்பீரமுமாய்ப் பேசிய மகனிடமிருந்து அவ்வுத்தரவுக் கடிதத்தை வாங்கிக் கண்களில் ஒற்றிக் கொண்டாள் அபிராமி அம்மாள்.

''மாலதி...! ஆனந்தனுக்கு வேலை கிடைத்துவிட்டது.''

''அப்படியா?'' என்று குதித்து வந்தாள்.

''ஆமாம், அக்கா! உன்னைப் போலவே நானும் இந்த வீட்டுக் கௌரவ பிரஜையாகி விட்டேன்'' என்றான் ஆனந்த் – மிதமிஞ்சிய மிடுக்கோடு.

''ரொம்ப சந்தோஷம்.''

''நீ வேலைக்குப் போகிறாய் என்ற காரணத்தைக் காட்டி என் சுதந்திரத்துக்கு யாரும் இனி தடை போட முடியாது.'' ஆனந்த் வெற்றி மதர்ப்புடன் சிரித்தான். ஆனால், அவன் துரதிர்ஷ்டம்! அவ்வெற்றிக் களிப்பு கொஞ்சமும் நீடிக்கவில்லை.

இரண்டாம் நாள்.

மாலதி, அவசரமாய்க் குளியலறைக்குள் நுழையப் போன போது, ''நான் போக



உருகும் பிரதமர் !

மின்சார வெட்டு காரணமாக இங்கிலாந்தில் மெழுகு வர்த்திகள் நிறைய வியாபாரம் ஆகின்றன. அதிலும் பிரதமர் எட்வர்ட் ஹீத்தின் உருவம் போலச் செய்யப்பட்ட மெழுகுவர்த்திகளுக்கு நல்ல கிராக்கி. பிரதமர்மீது உள்ள கோபத்தை அந்த வர்த்திகளைக் கொளுத்தி மக்கள் தீர்த்துக் கொள்ளுகிறார்கள்.

டைம் - பாலி

வேண்டும் முதலில்'' என்றவளைப் ஆனந்த் அவளை வழிமறித்தான்.

''எனக்கு நாழியாகிறது, ஆனந்த்! ஆபீசுக்குப் போக வேண்டும்'' என்றாள் மாலதி.

'' அடி சக்கை! உன் பழைய பல்லவி இனி செல்லுபடியாகாது அக்கா. நானும்தான் ஆபீஸ் போக வேண்டும்.''

அப்போது அம்மா வந்தாள்.

''ஏ.... ஆனந்த். மாலதிக்கு எட்டு மணி ஆபீஸ். உன்னுடைய ஆபீஸ் பத்தரை மணிக்குத்தானே ஆரம்பம்?'' என்றாள் அவள், கண்டிப்பு நிறைந்த தொனியில்.

சரியான பாயிண்டில் அம்மா, அவனை உடனே மடக்கி விட்டாள்.

ஆத்திரம் ஒரு பக்கம். ஏமாற்றம் மறு பக்கம். செய்வதறியாது விழித்தான் ஆனந்த். மாலதி சிரித்துக் கொண்டே உள்ளே நுழைந்தாள். விவகாரம் அத்துடன் முடியவில்லை.

அடுத்தடுத்து நடந்த பூஜை, புனஸ்காரம் சாப்பாடு எல்லாவற்றிலும் முன்னைப் போலவே இப்போதும் இரண்டாவது இடம் தான் கிடைத்தது, ஆனந்துக்கு. கேட்டால், 'எட்டு மணி ஆபீஸ்' என்ற சாக்கு !

' அச்சோ ! உத்தியோகம் கிடைத்தும் மாலதியை மட்டம் தட்ட முடியவில்லையே !' என்று மனம் குமைந்தான் ஆனந்த்.

மாலதிக்குத் திருமண ஏற்பாடுகள் வெகு வேகமாக நடந்தன.

இரும்புத் திரை அகன்றதைப் போல் இருந்தது, ஆனந்துக்கு. 'அப்பாடா ! இன்னும் கொஞ்ச நாட்களில் மாலதி, இந்த வீட்டை விட்டுப் போய்விடுவாள், பிறகு... நாம்தான் இந்த வீட்டுக்கு ராஜா' என்று நிம்மதிப் பெருமூச்சு விட்டான் அவன்.

சீக்கிரமே ஒரு நல்ல முகூர்த்தத்தில் மாலதிக்கு மணமாகியது. கணவன் வீட்டுக்குப் புறப்பட்டாள் அவள். பெரியவர்களிடம் விடைபெற்றுக் கொண்டு தம்பியிடம் வந்தாள் மாலதி.

அக்காவின் பிரிவு நினைத்து ஒரு புறம் வருத்தமாய் இருந்தாலும், அவள் இல்லாத வீட்டில் தனது முழு அதிகாரத்தைப் பிரயோகப்படுத்தும் துடிப்பில் ஆனந்த் மகிழ்ச்சியடையவே செய்தான். ஆகவே குதூகலம் பொங்க, ''போய் வா'' என்று விடை கொடுத்தான் மாலதிக்கு.

கொஞ்ச நாட்கள் கழிந்தன.

அலுவலகத்திலிருந்த மாலதியை யாரோ போனில் அழைத்தார்கள்.

''யார் ?''

''நான்தான் அக்கா.....! தம்பி ஆனந்த் பேசுகிறேன்.''

''ஓ..... ஆனந்த்......! அம்மா சௌக்கியமா ?''

''சௌக்கியம்தான், அக்கா..... உன்னிடம் ஒரு விஷயம் சொல்ல வேண்டும் என்று தோன்றியது. அதற்குத்தான் உனக்குப் போன் பண்ணினேன்.''

'' என்ன?''

''நீ புக்ககம் போன பிறகு நம் வீட்டில் எந்நேரமும் குளியலறை திறந்தே கிடக்கிறது. நான் ரேடியோ வைத்தாலும் பூஜை செய்தாலும் அதைக் கண்டு கொள்ள ஒரு நாதியும் இல்லை. அம்மா பட்சணம் பண்ணுவதெல்லாம் எனக்கே பந்தி வைக்கிறாள்'' என்று அடுக்கிக்கொண்டே போனான் ஆனந்த்.

'' பலே.....! இப்போது நீ ரொம்பவும் ஃப்ரீயாய் இருக்கிறாய்: இல்லையா?''

''போ.... அக்கா !'' சட்டென்று மறுத்தான் ஆனந்த். அவன் குரலில் விரக்தி தொனித்தது.

''ஏண்டா ?''

''நீ, வீட்டை விட்டுப் போய்விடுவாய், அப்புறம் எல்லாவற்றிலும் எனக்குத்தான் முதலிடம்..... அப்படின்னு நான் சந்தோஷக் கனவு கண்டது உண்மைதான் அக்கா! ஆனால்.....

''நீ வீட்டில் இருந்த போது உன்னோடு சண்டையும் போட்டியும் போட்டுக் கொண்டு ஒவ்வொன்றையும் அனுபவித்தேன். அதில் கிடைத்த திருப்தியும், மகிழ்ச்சியும் ஆயிரம் பங்கென்றால்..... அதில் ஒரு பங்குகூட இப்போது எனக்குக் கிடைக்கவில்லை, அக்கா. சகோதர பாசம் என்பது சமாதானம் மட்டுமில்லை. சண்டையும் சேர்ந்ததுதான். இது எனக்கு இப்பத்தான் புரிந்தது, அக்கா....''

திடுக்கிட்டாள் மாலதி. ''ஏ, ஆனந்த் ! அதென்ன விசும்பல் சத்தம் ? அழுகிறாயா என்ன ?''

'ஆம்' என்று சொல்ல முடியாத ஆனந்த், மறுமுனையில் போனைக் கீழே வைத்தான்.

அருள்திரு தேவி கருமாரியம்மன் திருக்கோயில்

திருவேற்காடு, சென்னை-77

★

இலட்ச தீபம் - இலட்சார்ச்சனை
தைப்பூசப் பெருவிழா

2-2-74 சனிக்கிழமை காலை 10 மணிக்கு — 108 குடம் பால் அபிடேகம்
காலை 11 மணிக்கு — 1008 சங்காபிடேகம்
மாலை 6 மணிக்கு — இலட்ச தீபம்
இரவு 9 மணியிலிருந்து விடிய விடிய திவ்விய நாமாவளி பஜனை நடைபெறும்

3-2-74 ஞாயிறு காலை 11 மணிக்கு — புற்றுக்கு ஆராதனை செய்து நவகலசம் அபிடேகம்

4-2-74 திங்கட்கிழமை காலை 6 மணிக்கு — பந்தக்கால் முகூர்த்தம்

5-2-74 செவ்வாய் காலை 7 மணிக்கு — கலச பூசை, யாக பூசை
காலை 8 மணிக்கு — இலட்சார்ச்சனை ஆரம்பம்

6-2-74 புதன்கிழமை பகல் 1-30 மணிக்கு — 108 பால் குடம் திருவீதி உலா வருதல்
பிற்பகல் 3 மணிக்கு — இலட்சார்ச்சனை பூர்த்தி
108 குடம் பால் அபிடேகம்
1008 சங்காபிடேகம்
இரவு 7 மணிக்கு — 1008 திருநாம அர்ச்சனை
இரவு 10 மணிக்கு — அருள்திரு தேவி கருமாரியம்மனுடன் ஐந்து மூர்த்திகளும், அருள்மிகு — சீனுவாச பெருமாளுடன் பவனி வருதல்

8-2-74 வெள்ளிக்கிழமை காலை 8 மணி முதல் மாலை 3 மணி முடிய குருபெயர்ச்சி இலட்சார்ச்சனை நடைபெறும்

ஒவ்வொரு நாளும் இரவு சுவாமி திருவீதி உலா உண்டு.

தைப்பூசம் — இலட்சார்ச்சனை டிக்கட் 1க்கு ரூ. 10-00
குருபெயர்ச்சி — இலட்சார்ச்சனை டிக்கட் 1க்கு ரூ. 5-00

திருக்கோயிலில் டிக்கட்டுகள் கிடைக்கும்.

தைத்திங்கள் விழா - செவ்வாய், வெள்ளி, ஞாயிறு தோறும் உண்டு.

திருக்கோயில் நிர்வாகிகள்

ஆரோக்கியம் அழைக்கிறது



உடலுக்கு இயற்கை வழங்கிய 'பிறந்த நாள் உடை'யே சருமம்! நன்கு வளர்ச்சி யடைந்த ஒருவரின் சருமப் பரப்பு பதினெட்டு சதுர அடி இருக்குமாம். உடலின் மிகப் பெரிய உறுப்பான சருமம், உடலின் பாதுகாப்புக் கவசம். நகங்களும் உரோமமும் சில நுண் கிரந்திகளும் சருமத்தோடு ஒட்டியவை.

சருமத்தின் மெல்லிய மேல் தோல் 'எபி டெர்மிஸ்'; தடித்த அடித் தோல் 'டெர்மிஸ்'. மெல்லிய மேல் தோலிலே கூட நுண்ணிய ஐந்து அடுக்குக் காண்கிறார்கள் வைத்தியர்கள்; இங்கே சருமத்தின் மீது நுட்பமான உயிரணுக்கள் ஓயாமல் புதுப்பிக்கப்படுகின்றன. உன் தோலின் பரப்பைப் பூதக் கண்ணாடி கொண்டு பார்த்தால், நன்கு உழுது சாகுபடிக்குத் தயாரான நிலம் போலக் காணும்! உள்ளங்கையிலும் விரலிலும் இவை ரேகைகளாகத் தெரிகின்றன.

ஆளுக்கு ஆள் சருமத்தின் வண்ணம் வித்தியாசம் ஏன்? இந்த வண்ண வித்தியாசத்துக்குப் பொறுப்பான 'மெலனின்' உள் தோலில் தயாராகிறது. பொதுவாக, சூரிய வெப்பத்தின் அளவுக்கு ஏற்ப அந்த அந்த நாட்டு மக்களின் நிறம் அமைகிறது. மத்திய ஆப்பிரிக்க நாட்டினர் உடல் கறுத்திருப்பதற்கும் ஐரோப்பியர் உடல் வெளுத்திருப்பதற்கும் சூரியனே காரணம்.

ரத்த நாளங்களும் நுண் நரம்பு இழைகளும் வியர்வைக் கிரந்திகளும் ரோம வேர்களும் நிறைந்தது அடித் தோல். இதற்கும் அடியில் கொழுப்பும் அதற்கும் கீழ் தசைநார்களும் உள்ளன. சருமத்தில் நிறைய இருப்பது நீர். அது தவிர எண்ணெய்ப் பசை. இவையே மேனி பளபளப்பாயும் மென்மையாயும் இருக்கக் காரணம்.

உள்ளத்தின் உணர்ச்சிகளைச் சில நேரம் சருமம் பிரதிபலிக்கிறது. வெட்கம் வரும்போது முகம் சிவப்பதும், அச்சத்தில் வெளிறுவதும், வியப்பில் மயிர்க்கால் சிலிர்ப்பதும் அதனால்தான். உணர்ச்சி நுண் இழை நரம்புகளில் (receptors) ஸ்பரிச உணர்ச்சியைத் தெரிவிப்பவை, அழுத்த உணர்ச்சியை அறிவிப்பவை, உஷ்ணத்தை உணர்பவை, குளிர்ச்சியைக் குறிப்பவை, நோவை நுகர்பவை என்று தனித் தனி வகைகள் உள்ளன. சில இடங்களில் சில நரம்புகள் அதிகம். உடலினுள்ள பல லட்சம் உணர்ச்சி நரம்பு இழைகளில் பெரும்பாலானவை சருமத்திலேயே இருக்கின்றன. இந்தப் பணியாளர் உடலுக்குடன் மூளைக்குச் செய்தி அனுப்பியவண்ணம் இருக்கின்றனர்.

உடலை நன்கு மூடிய போர்வையான சருமம் அதற்கு ஒரு பாதுகாப்புக் கவசமும் ஆகிறது. உடலின் வெப்பம் அதிகரித்தால் வியர்வையை வரவழைத்து வெப்பத்தை மிதப்படுத்துவது சருமமே. உடலுள் நோய்க் கிருமிகள் நுழையாமல் பார்த்துக் கொள்ளும் கோட்டை அது. மேல் தோலில் உள்ள ஓர் 'என்ஸைம்' (ஒரு வகை இரசாயனப் பொருள்) நோய்க் கிருமிகளை அழித்து, சருமத்தின் ஆரோக்கியத்தைப் பார்த்துக் கொள்கிறது. இந்தப் பணிக்கு வியர்வையின் துணை உண்டு.

இதை மீறி, உடலில் வெட்டுக் காயம், விபத்து ஏதாவது நேரும்போது நோய்க் கிருமிகள் உள்ளே விரையப் பார்க்கின்றன. சாதாரணக் காயமோ, சிராய்ப்போ என்றால் சருமம் தன்னைத் தானே விரைவில் குணப்படுத்திக் கொண்டு விடுகிறது. வெட்டுக் காயம் குணமாவது ஓர் இயற்கை அற்புதம். அப்போது உயிர் அணுக்கள் இயங்கும் வேகத்தை மைக்ராஸ்கோப்பில் பார்த்தால் வியப்பாக இருக்கும். சிறு காயங்களின் வடுகூடத் தெரியாமல் புதுப்பிக்கின்றன, மேல் தோல் அணுக்கள்.

தீ விபத்தால் உயிருக்கு ஆபத்து நேர்வதற்கு முக்கிய காரணம், உடலின் பாதுகாப்புக் கவசமான தோல் எரிந்துபோவதே யாகும்.

மச்சமும் மருவும் இல்லாத மனிதனோ, மிருகமோ கிடையாது. அதனால்தான் ராஜசூய யாகத்துக்கு 'மரு இல்லாத குதிரை

வேண்டும்' என்ற கஷ்டமான நிபந்தனை விதித்தார்கள் போலும்! பிறவியிலேயே இருப்பவை மச்சமும் மருவும். ஆனால் மிக நுட்பமாக, வெறும் கண்ணுக்குப் புலனாகாது இருந்து வந்த சில மச்சங்கள் இருபது முப்பது வயதில் தெரிவதுண்டு. மரு, மச்சங்களுக்கும் அதிர்ஷ்டத்துக்கும் தொடர்பு இருப்பதாக நம்பிக்கை எல்லா நாடுகளிலும் எல்லாக் காலத்திலும் இருந்து வந்திருக்கிறது.

பாலுண்ணியும், நீட்டிய மருவும் தொந்தரவு தராதவரை சரிதான். அவற்றில் நமைச்சல், எரிச்சல் உண்டானால் உடனே சிகிச்சைக்குப் போக வேண்டும். 'ஆணி' தானே குணமாகி விடலாம். ஆனால் 'வார்ட்' என்னும் தோல் வளர்ச்சி வைரஸ் கிருமிகளால் பரவுவது. பிறருக்கும் தொற்றக் கூடியது. தகுந்த சிகிச்சை செய்து கொள்ள வேண்டும்.

சருமத்தைப் பாதுகாக்கச் சிறந்த வழி, ஒழுங்காகக் குளிப்பதே! ஆல்கலி அதிகமான சோப்பைப் பயன்படுத்தினால் சருமத்தின் இயற்கைப் பசை நீங்கி விடுகிறது. எண்ணெய் தேய்த்துக் குளிப்பது சரி. ஆனால் குளிக்கும்போது உடலின் இயல்பான எண்ணெய்ப்பசையும் போய்விடும்படி ஒட்ட அழுந்தத் தேய்த்து விடுவது நல்லதல்ல; அதனால் பசையற்ற சருமத்தின் உள்நீர் சீக்கிரம் வெளியேறும். சருமத்தில் சுருக்கம் தெரியும். 'தக்காளிப் பளபளப்பு' நீடிக்காது. அதனால்தான் பெரியவர்கள் குளித்து விட்டு வந்த உடனே கொஞ்சம் தேங்காய் எண்ணெயை உடலெங்கும் அழுந்தத் தடவிவிட்டுக்கொள்வது ஒரு சிகிச்சையாகக் கருதப்படுகிறது.

சிலருக்கு உடலெங்கும் அதிகம் ரோமம் வளர்கிறது. சிலருக்கு இல்லை. ஏன்? காரணம் ஹார்மோன்கள்தான். ஆண் ஹார்மோன்களும் பெண் ஹார்மோன்களும் இருபாலாருக்கும் உண்டு. ஆண்கள் சிலருக்கு ஆண் ஹார்மோன்கள் அதிக அளவில் இருந்தால் உடல் ரோமம் அடர்த்தியாக இருக்கும். அவ்வளவுதான். இது மாதிரி விஷயங்களில் நூற்றுக்கு இருபத்தைந்து பேர்கூட 'நார்மல்' என்று சொல்ல முடியாது. கவலைப்பட ஒன்றுமில்லை.

வியர்வை ஒரு முக்கியமான அழுக்கு நீக்கி. வியர்வை அதிகம் வெளிப்பட்டால் தவறில்லை. வெளிப்படா விட்டால் மிக ஆபத்து. வியர்வை வரும் வழியை அடைத்து விடும் அளவு அழுந்த ஆடை உடுத்திக்கொள்வதோ, வண்ணப் பூச்சு பூசிக் கொள்வதோ தவறு. வியர்வை இயல்பாக வெளியேறாமல் வேறு கோளாறுகள் நேரும். உடலெங்கும் எண்ணெய் வண்ணம் பூசிய புலி வேஷக்காரர்கள் சில மணி நேரத்தில் ஆடிச் சாய்வது இதனால்தான்.

வியர்வையைத் தடுப்பதாக நினைத்துக் கட்கத்தில் 'வாசனை' மெழுகுப் பொருட்களைப் பூசுவதும் தவறுதான். அங்கே வெளியேற வேண்டிய வியர்வை வேறு இடங்களில் வெளிப்பட முயன்று கோளாறுகள் நேரும்.

வியர்வைக்கு வண்ணம் இல்லை, மணம் இல்லை, மேல் தோலில் உள்ள நுட்பமான உயிர் அணுக்களாலும் கிருமிகளாலும் நேர்பவை இவை. சிலரது வியர்வைபட்ட துணிகள் மஞ்சளாகவோ, சிவந்தோ, பழுப்பேறியோ போகும். வியர்வைக்கு நல்ல மாற்று, அடிக்கடி உடலைக் கழுவிக் கொள்வதே.

பெரியவர்களைப் போன்ற வியர்வை பச்சைக் குழந்தைகளுக்கு இல்லை. அதனால்தான் அது இனிமையாக இருக்கிறது — நீராடா விட்டாலும்.

உடலில் வாசனைப் பவுடரைப் பூசிக்கொள்வது அதன்மேல் ஈரப் பசையை நீக்கித் துப்புரவாகக் காட்டப் பயன்படுகிறது. நறுமணத்துடன் கமழ யார்தான் விரும்பவில்லை — கிளியோபாட்ரா காலம் முதல் இன்று வரை?

முகப் பரு ஏன் வருகிறது? உடலுக்குள் எண்ணெய் மிகைதான் காரணம். எண்

அம்மா! நான் குளிச்சிண்டிருக்கிறேன்!




மம்மி! ஐம் பேத்திங்!





ஆயுள் இன்ஷ்யூரன்ஸ் கார்ப்பொரேஷன் (எல். ஐ. ஸி.) தனது (Emblem) சின்னத்தை இப்படி மாற்றிக் கொள்ளலாமே?

நன்றி: டெக்கான் ஹெரால்ட் நகவல்: பாபு



ணெய்ச் சுரப்பிகள் அதிகம் தயாரிப்பதன் அறிகுறியே பருக்கள். டீன்ஏஜில் சிலருக்கு அதிகம் வரும். பரு காயமாகாமல் பார்த்துக் கொண்டால் தொல்லை இல்லை. சில நாட்களில் நின்றுவிடும். முகத்தை எண்ணெய் வழியாமல் அடிக்கடி சுத்தமான நீரில் கழுவி வருவது பரு வராமல் தடுக்கும்.

தனக்கு ஏதோ பிடிக்கவில்லை என்பதை உடல் காட்டுவதே அலர்ஜி. இதன் அடையாளம் சருமத்தில்தான் முதலில் தெரிகிறது. உணவிலும் உடைப் பழக்கத்திலும் இயற்கைக்கு முரணான எத்தனையோ செய்கிறோம். அது சிலரது உடலில் எதிர்ப்பாக — அலர்ஜியாக வெளிப்படுகிறது. டெரிலின் போன்ற செயற்கை உடை சிலருக்கு ஒத்துக்கொள்ளாவிட்டாலும் 'அலர்ஜி' தெரியும். அவற்றைச் சீராக, சலவைச் சோப்பு போகத் துவைக்காததும் அலர்ஜிக்கு ஒரு காரணம்.

உடை மிக அழுத்தமாக இருந்தால் சருமம் விரும்பாது. மணிக்கணக்கில் காலுறை அணிந்தவர்கள் கால் விரலில் ஏதாவது தொல்லை வருகிறது.

நகத்தின் வேர் சருமத்தின் உள்ளே ஆழ இருக்கிறது. நகக் கணு தோலைப் போல் உணர்ச்சி மிக்கது. நீண்டு வரும் வெளி நகம் உணர்ச்சியற்றது. நகத்தை வெட்டும்போது நேராக வெட்ட வேண்டும். நகக் கணுவில் அழுக்குச் சேர்ந்தால் பாக்டீரியாக்களால் நகச் சுத்து வருகிறது. சொத்தை நகம் பாசி படர்ந்து (ஃபங்கஸ்) அழுகுவதால் நேர்கிறது. விரல்களை ஈரமின்றித் துடைத்து வைத்துக் கொள்வது இதற்குப் பாதுகாப்பு நடவடிக்கை. ஃபங்கஸ் வந்துவிட்டால் இலேசில் போகாது.

விரலை அடிக்கடி கழுவ வேண்டிய தொழில் செய்பவர்கள் — வைத்தியர்கள் உட்பட — ஒட்ட ஒட்ட சோப்பால் கழுவி வந்தால் சருமத்தின் பசை குன்றிவிடுகிறது. இதற்கு மாற்று ஏதாவது கிரீம் தடவிக் கொள்வதே. குளிர்ப் பிரதேசங்களில் தோல் வெடிப்புக்கும் இதுவே சிகிச்சை.

விரலால் சருமத்தைச் சொறிந்து கீறுவது வினையாகும். நமைச்சல் வந்தால் அந்த இடத்தைக் கழுவித் துடைப்பதே நல்லது. சொறிந்து ரணமாக்கினால் அழுக்கும் பாக்டீரியாக்களும் உள்ளே போக உதவும்.

வழுக்கை ஒரு நோயல்ல. சிலருக்குப் பரம்பரையாக வருவது. இதனால் பாதிக்கப்படுவது ஆண். ஆனால் அவனுக்குப் பரவுவதோ தாயின் வழியேதான்! நரைத்தல் வயதாவதின் ஓர் அடையாளமே தவிர வேறல்ல. சிலருக்கு இளமையிலேயே நரைப்பதற்குக் காரணம் பரம்பரை இயல்பாக இருக்கலாம். தலைமுடியை நன்கு போஷிக்க, அதை நன்கு அலசினாலே போதும். மயிர் அதிகம் உதிருப் 'கிளிவெட்டு' பெரும்பாலும் தாற்காலிகமாகத்தான் இருக்கும். மன அமைதி அற்ற போதும் நேர்கிறதாம். 'சுண்டு' (dandruff) மேல் தோலின் ஒரு மாற்றமே. நோயல்ல. இதை ஓரளவு கட்டுப்படுத்தலாம். இதனால் தலை முடி கொட்டிப் போய்விடாது. பார்க்கப் போனால் தலையின் முடி ஒவ்வொன்றும் ஐந்து ஆண்டுகளுக்கு ஒருமுறை தன்னைப் புதுப்பித்துக் கொண்டே யிருக்கிறது. ஐந்து ஆண்டுகளுக்கு முன் இருந்த முடியில் ஒன்றும் இப்பொழுது உங்களிடம் இல்லை!

லூகோடெர்மா என்ற நிலையில் திடீரென்று மேல் தோல் சில இடங்களில் வெளுத்துப் போகிறது. குஷ்டமோ என்று பலரும் தேவையற்று அஞ்சுகிறார்கள். என்ன காரணத்தாலோ சருமத்தில் வண்ணம் எழுப்பும் அணுக்கள் (Pigment Cells) அந்த இடங்களில் இயங்காமல் இருந்து விடுகின்றன. இது தொத்து வியாதியே அல்ல. இதற்குப் பூரண சிகிச்சை காண ஆராய்ச்சிகள் நடக்கின்றன. 'மங்கு' கர்ப்பிணிகளுக்குச் சில நாட்கள் இருந்துவிட்டுப் போய்விடும் ஒரு தொந்தரவு.

நீண்ட நாள் நோயாளிகளுக்கும் படுத்தபடி இருக்கும் வயோதிகர்களுக்கும் வரும் கொடிய படுக்கைப் புண் முதலில் சருமத்தில் தொடங்குகிறது. காரணம், மென்மையான சருமம் ரத்த ஓட்டம் இன்றி ஓயாமல் அழுந்தியபடி இருப்பதுதான்.

சருமம் பற்றிய பல தொந்தரவுகளுக்குக் காரணம் மனநிலையே. 'டிராங்குலைசர்' சாப்பிடும்படி கூறுபவர்கள் மனோவியாதி நிபுணர்களுக்கு அடுத்தபடி, சருமத்தைக் கவனிக்கும் டாக்டர்கள்தான்!

இன்று சரும கவனிப்பின் முக்கியத்துவம் உணரப்படுகிறது. பிறவியினாலோ விபத்துக்களாலோ நேரும் கோளாறுகளைச் சரிப்படுத்தும் சரும மருத்துவத்தில் அபார முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பரு அடையாளம் மறையும்படி மேல்தோலை இழைத்துப் புதுப்பிப்பது, காய வடுக்களையும், வேண்டாத மச்சம் மருக்களையும் அகற்றுவது, கண் இமை வடிவத்தைச் சரிப்படுத்திக் கொள்வது என்று அழகுக்காகவும் அவசியத்துக்காகவும் சிகிச்சைகள் நடைபெறுகின்றன.

இதற்கெல்லாம் ஆதாரமான சருமத்தின் ஆரோக்கியம், உடலின் பொது ஆரோக்கியத்தைப் பொறுத்ததுதான்.

கட்டுரை: **தம்பி சீனிவாசன்**

ஆலோசனை: **டாக்டர் ஏ. கிருஷ்ணு**


ஆசைகள் மடிவதில்லை
4
கதை: கௌசிகன்
சித்திரம்: சூர்யா..
சிறைச் சாலையை விட்டு சதீஷ் வெளி வந்த போது இருட்டி விட்டது. அவன் மனத்திலும் இருள் கவிந்திருந்தது.
முரளி புகழ் பெற்ற நிருபர் தான். அவன் யோசனை சரியானது தான். ஊரிலிருந்து வந்ததும் முதல் நந்த கோபாலைப் பார்க்க வேண்டும். போவோம்...
ஐயா, ஊரிலேருந்து எப்போ வந்தீங்க? இந்தப் பார்ட்டிக்கு நீங்க எப்படியும் வந்துடுவீங்கன்னு எனக்குத் தெரியும்.
பார்ட்டியா? என்ன விசேஷம்?
உங்களுக்குத் தெரியாதா? எஜமானுக்குப் பதவி உயர்வு வரப்போகுது போலே. நம்ம காளிமுத்து சார், நல்லபெருமாள் எல்லாரும் வந்திருக்காங்க. நீங்க மாடிக்குப் போங்களேன், விவரம் புரியுது.
ஹல்...லோ, சதீஷ்! எப்போ வந்தே நீ?
இன்று காலையில் தான். ஏதாவது பார்ட்டியா?
ஒரு ஸ்மால் கெட்-டு-கெதர் — கம் ஆன் இன்...
கனவான்களே! இதோ நமது வருங்கால பப்ளிக் பிராசிகியூடர் சதீஷ்குமார்!
வருங்கால நீதிபதி அவர்கள் வருங்கால பப்ளிக் பிராசிக்யூடரை அறிமுகப் படுத்துவது நல்ல பொருத்தம் தான்!
நீதிபதி...? முடிவாகி விட்டதா?
முடிவானது போலத் தான். மக்கள் நம்மைத் தேர்ந்தெடுக்கும் போது நாம் அதற்குத் தலை வணங்கத் தானே வேண்டும்.
மக்கள் என்பது..
என்னப்பா நீ சுத்த அசடா இருக்கே? மக்களை ஆட்டிப் படைக்கும் சக்திகளைக் கௌரவிக்கத்தான் இந்தப் பார்ட்டி, புரிஞ்சுதா?


வழக்கு விசாரணைக் குறிப்புகளடங்கிய கட்டுக்களைப் படித்தேன். சோமசுந்தரம் ஏன் இப்படிக் குழப்பி இருக்கிறான்?
குழப்பி இருக்கிறான் என்றால்...?
அப்பட்டமாகச் சொல்லுவதானால் அவன் தன் கட்சிக்காரருக்காக உண்மையாக உழைக்கவில்லை.
அதுவா..? சில சமயங்களில் அப்படித்தான். அதுசரி, முடிந்துபோன விஷயம் பற்றி ஏன் இப்போது? நமக்காக நண்பர்கள் காத்திருக்கிறார்கள் வா...
ஆனால் சதீஷுக்கு அந்த விஷயம் முடியவில்லை. அப்போதுதான் ஆரம்பமாகி இருந்தது. அவன் அவர்களோடு கலந்து கொள்ளவில்லை.
நந்தகோபாலுக்கு நீதிபதி பதவி, எனக்கு பப்ளிக் பிராசிகியூடர். சதுரங்கத்தில் காய்களை நகர்த்துவது போல இங்கு மனிதர்களால் மனிதர்கள் நகர்த்தப்படுகிறார்கள். அரசியல் ஒரு சக்திவாய்ந்த ஆயுதம்தான்.
மணி ஒன்றாகப் போகிறது. முரளியின் அறையில் விளக்கு எரிகிறதே. பரபரப்பான செய்தி ஏதாவது தயாரிக்கிறானோ ரிப்போர்ட்டர்? போய்ப் பார்ப்போம்.
என்ன...? கதவு தாளிடப் படவே இல்லையே. கை வைத்ததும் தானாகத் திறந்து கொள்ளுகிறதே...
மு..மு...ரளி! ஐயோ!.. இதென்ன கோரம்...?
தொடரும்

நீலத் திரை முழுதும் வான் மங்கை நித்திலப் புள்ளியிட்டு நிலாக் கோலம் வரைகிறாள்!

ஒளி பிரிந்து பூமிக்கு இழை இழையாக இறங்குகிறது. மண்ணில் சிலிர்த்தெழுந்த செடி கொடிகள் மணித் தளிர் விரல் கொண்டு இரவை வருடுகின்றன.

பூமிக்கே வீரம் சொன்ன நகரங்களுள் ஒன்றான பூனா நகரம் புதுத் தெம்புடன் நிலவில் குளிக்கிறது. சத்ரபதி புகழ் மணக்கும் அரண்மனை, சிவாஜியின் கம்பீரத்தை எடுத்துக் காட்டுவது போல் விளங்குகிறது.

முகட்டில் —

செருக்கலைய பறக்கும் சிவந்த கொடி!

முற்றத்தில் —

சிறுமை வந்துவிடுமோவெனச் சிந்தனையைக் கண்ணீரில் நிறைபடிக்கும் சாயாபாய்—மாவீர சிவாஜியின் மூத்த மனைவி.

என்ன வந்துவிட்டது? பெருமைக்குரிய அரசி இப்படிப் பேதலிப்பானேன்?

இன்றிரவு சத்ரபதி சிவாஜியின் காவியத்தில் ஒரு பக்கம் களங்கம் காணப் போகிறதே என்கிற கவலை இருக்கத்தானே செய்யும்?

அனலாய்ப் பெருமூச்சு பறிகிறது!

அவரைத் தடுத்து நிறுத்தவே முடியாது. எவ்வளவோ சொல்லிப் பார்த்தாள். அவள் வாய் மலர்ந்த வார்த்தைகள் ஆயிரம்! ஒன்றேனும் — ஒரு செவியிலேனும் நுழைய வேண்டுமே!

''தயவுசெய்து இது விஷயத்தில் தலையிடாதே!''—சிவாஜியின் முடிவான கர்ஜனை!

இருவரிடையே எழுத்துக்கள் எரிமலையாய் வெடிக்கத்தான் செய்தன.

''பிரபோ! இது வரை நீங்கள் இந்து தருமத்தைக் காத்தீர்கள். இன்றிரவு புதைக்கப் போகிறீர்கள்!''

மீண்டும் கர்ஜனை: ''கற்பழிப்பு என்ற பெயரால் நான் தருமத்தைப் புதைக்கவில்லை; பழி வாங்கல் என்கிற வெறிகொண்டு எனக்குள் ஒரு தருமத்தை நேமித்துக் கொள்ளப் போகிறேன்!''

பற்கள் நறநறக்கச் சத்ரபதி சிவாஜியின் நகைப்பொலி, அரண்மனையுள் ஊடுருவி அலை அலையாக எழுந்து அடங்கியது!

சாயாபாயின் கண்களில் கனல்!

'' விரோதிகளை மன்னித்து விடுதலை செய்கிற வீரம், விவேகம் கெட்டலைய வேண்டுமானால், சலீமாவை உங்கள் சல்லாபப் பொருளாக்கிக் கொள்ளுங்கள்!''

சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக் கொண்டு உள்ளே சென்று விட்டாள்.

நினைவலைகள் கண்களில் நீராய்ச் சுழியிட முற்றத்தில் நின்றவண்ணம் கவனித்தாள் சாயாபாய். நெஞ்சு குமுறிக் கொண்டிருந்தது.

காலை அந்தப் பேதைப் பெண் சலீமாவைப் போய்ப் பார்த்தபோது எப்படியெல்லாம்

அன்னை பவானி



கதறியழுதாள்! பெண்மை என்பது பலி வாங்குகிற அல்லது பழி வாங்குகிற பொருளானால் சேலை உடுத்திச் செல்ல வேண்டியதில்லையே என்று அவள் குமுறிய போது....

இன்னும் சாயாபாயின் காதுகளில் ஒலிக்கிறது: ''தந்தை செய்த பாவத்துக்கு அவரைப் பலியாக்குவதைவிட்டு என் கற்புடன் விளையாடுவதா?''

குதிரைக் குளம்படிகளின் சத்தம் கேட்டுச் சாயாபாய் அரண்மனை முகப்பை உற்றுக் கவனித்தாள்.

சத்ரபதி சிவாஜி அலங்காரப் புரவியில் ஆரோகணித்த வண்ணம் கிழக்கு முகம் நோக்கி விரைந்து செல்வது தெரிந்தது!

''சலீமா!'' என்று முணுமுணுத்துக்கொண்டாள் சாயாபாய்.

காலக் கண்ணாடியில் சத்ரபதி சிவாஜியின் முகம் பார்த்தவள் சாலினி. காதல் நீரூற்றில் களிகொண்டு குளித்து இளைப்பாறியவள். வீரத்தை மணக்கப் போகிறோம் என்று விடி வெள்ளியை எதிர்பார்த்தாள். எண்ணியது நடந்து விட்டால் மண்ணுக்கு மதிப்பேது?

மணந்தால் சாலினி; மறுத்தால் சாவு இனி என்றுதான் சிவாஜியும் பிடிவாதமாக இருந்தார். ஆனால் அன்னையின் கட்டளைக்கு மீறி நடவாத — நடக்கத் தெரியாத சிவாஜி, முதல் மனைவியாக முறைப்படி சாயாபாயை மணக்க நேரிட்டது.

'அடுத்தாவது தன்னை மணப்பாரா ?' என்று எதிர்பார்த்தாள் சாலினி; ஏமாற்றமே மிஞ்சியது !

தாய் சொற்படி சாயாபாயை மணந்தது போல், தந்தை சொற்படி சூரியாபாயைத் திருமணம் செய்துகொள்கிற கட்டாயம் நிகழ்ந்து விட்டது.

அதன் பிறகு —

சாலினி தனித்துவத்துக்கு ஆளாகிவிட்டாள். தன்னுள் தானே குடும்பம் நடத்தத் தயாராகிவிட்டாள். நெஞ்சில் கணவன் நிறைந்துவிட்டான் ! 'காதலே, நீ கடைசி வரையில் என்னுள் வாழ்வாயாக !' என்று வாழ்த்தி மனத் தியாகம் புரிந்து காமத்தை எரிதழலில் தூக்கி எறிந்து விட்டாள் ! சாலினியின் இந்த முடிவு — தியாகம் சிவாஜியை மட்டும் என்ன, சிந்தித்த பலரை வியக்க வைத்து விட்டது.

மக்களின் அவலக் குரலும், மண்ணின் அவமானத் துடிப்பும் சிவாஜியை மாவீரக் கோலம் பூண அழைத்து விட்டபோது —

கோட்டைகள் பலவற்றைப் பிடித்தார்; எடுத்த செயல்களில் கோட்டை விடாமல் நிமிர்ந்து ஓங்கி வளர்ந்து கொண்டு வருகிற போது —

சேனைகளைக் கட்டிக் காக்கப் பணமில்லை; செயல் மறந்து செய்வதென்னவென்று துடித்தார் — துவண்டார் — பலரிடம் பொருள் கேட்டுத் தூது அனுப்பினார். பயந்து கொடுத்து உதவியவர்கள் சிலர்; பண்பாகக் கொடுத்து மகிழ்ந்தனர் பலர். மறுத்தவர்கள் பட்டியலைப் பற்றி மனக் கவலைப்படவில்லை.

ஆனால் —

கல்யாணபுரத்தான் நெஞ்சில் கனலை மூட்டிவிட்டான். மறுத்தவர்களில் அவனும் ஒருவனானாலும் மாபாவியான அவன் — ஆமத் முல்லாணு, சாலினியை அல்லவா சிறை எடுத்துச் சென்று கற்பைச் சித்திரவதைப் படுத்திக் களங்கமாக்கி விட்டான் !

மராட்டியப் பத்தினியான அவள் தற்கொலை செய்து கொண்டாள். அப்போது அவள் எழுதி வைத்த ஓலை —

'' என் காதற் கணவர், இக்களங்கத்துக்குக் காரணம் கேட்கிற போது, முல்லாணு ! நீ பதில் சொல்லியே தீர வேண்டும்!''

கொதித்தெழுந்து கொக்கரித்தார் சத்ரபதி சிவாஜி ! எரிமலை வெடிக்கத் தொடங்கியது. சிம்மக் குரல் கேட்டுச் சினந்தெழுந்தனர் வீரர்கள் !

கல்யாணபுரத்துச் சிற்றரசனை ஆமத் முல்லாணு, அப்போது பார்த்து விஜயபுரி வேந்தருக்குக் கப்பம் அனுப்பி வைத்திருந்தான். கேள்விப்பட்ட சிவாஜி சும்மாவிருப்பாரா? அக்கிரமம்தான்; ஆனாலும் துணிந்து ஆணை பிறப்பித்தார்.

''வழிமறித்துக் கொள்ளையிடுங்கள்.''

கொதித்த நெஞ்சுகள் நீதி நூல் எரிந்தது. தருமம் தலை நீட்ட மறுத்துவிட்டது. பழிக்குப் பழி! களங்கத்துக்குக் களங்கம் !

கப்பத்தை ஏந்திச் சென்ற வீரர்கள் நடுக் காட்டில் பயணமாகிக் கொண்டிருந்தனர். சிவாஜி சேனைகள் வழிமறித்தன ; கொள்ளையடித்தன. இதன் எதிரொலி !

எழுந்தது போர் இருமருங்கிலும்!

வீர காவியத்தில் இன்னொரு பக்கம் புரண்டது ! கல்யாணபுரக் கோட்டை வீழ்ந்தது.

சிற்றரசன் ஆமத் முல்லாணு சிறைப் பிடிக்கப்பட்டான். அப்போது —

அவனுடைய அழகே உருவான மருமகள் சலீமாவும் சிறைப் பிடிக்கப்பட்டாள்.

சலீமாவின் பேரழகு அந்நாளில் பிரசித்தம்! 'அந்த அழகை அனுபவித்தவன்தான் நிஜமான சொர்க்கத்தைக் கண்டவன்!' என்றெல்லாம் பேசிக் கொள்வது வழக்கம். அப்பேர்ப்பட்ட சுந்தரச் செல்வி இப்போது சிவாஜியின் யந்திரப் பதுமையானாள் !

சத்ரபதி மகிழ்ச்சிக்கு எல்லை ஏது ?

கெக்கலி கொட்டிக் கர்ஜித்தார்: ''இன்று முதல் என் கூண்டுக் கிளி நீ! சாலினியைப் போல் நீ தற்கொலை செய்து கொள்ள முடியாது ! இரவு நேரங்களில் என்னிடம் கொஞ்சு மொழி பேசு! உன் அழகுக்கு மீறிய ஒரு வீரனுடன் சரித்திரம் காண்கிறாய்!''

''தந்தை செய்த பாவத்துக்கு நான் என்ன செய்வேன்?'' என்று கதறினாள் சலீமா.

''இப்படித்தானே சாலினியும் கேட்டிருப்பாள்? என் காதலர் விரோதியாக இருப்ப



கோவி.மணிசேகரன்

தால், என்னை ஏன் விணுக்குநிர்கள் என்று வேண்டியிருப்பான்? வேதனைக் கண்ணீர் வடித்திருப்பாள்? உன் தந்தை முல்லாணனின் காதுகள் திறந்தனவா? நானோ இரவு, என் வரை உனக்கு முதல் இரவு. அதற்குள் உன்னை நீ புத்திசாலித்தனமாகத் தேற்றிக்கொள்!''

சினந்து பொரிந்து தள்ளிய சிவாஜி சீற்றமுடன் வெளியேறினார்.

காலைப்போது கலகலப்பாக விடிந்தது.

சலீமாவுக்கு அது மரணப் போதாகத் தெரிந்தது. தப்பவே முடியாது என்கிற நிலைக்கு அவள் வந்துவிட்டபோதுதான், தோழிகள் மூலம் கேள்விப்பட்ட அரசி சாயாபாய் அங்கு வருகை தந்தாள். ஆனாலும் பூட்டிய கதவுகளின் சாவி சிவாஜியின் இடுப்பிலல்லவோ சிறைப்பட்டிருக்கிறது.

இடைப்பட்ட சன்னலின் இருபுறத்திலும் நான்கு நயனங்கள் கலந்தன; கண்ணீர் விட்டன; கருத்துக்களைப் பரிமாறிக் கொண்டன.

தீபங்கள் கண் விழிக்கும்போது அடியெடுத்து நடக்கத் தொடங்கி சூறு நாழிகைகள் இடைப்பட்டு மறைந்தன.

சலீமா சிறைப்பட்டிருக்கும் சின்னஞ் சிறிய அந்த மாளிகை சிங்கார ரசனைக்கு வா என்று அழைப்பது போல இருந்தது சிவாஜிக்கு!

புரவியை விட்டிறங்கியதும் வெறிகண்ட வேங்கையைப் போல உள்ளே நுழைந்தார். அலங்கார விளக்குகள் வெளிச்சம் போட்டு எதையோ காட்டி நிற்பன போலத் தெரிந்தன. அந்தக் கூடத்தில் வந்து நின்ற சிவாஜி சுற்றுமுற்றும் கவனித்தார். கண்கள் நெருப்புத் துண்டங்களாகக் காட்சி தந்தன. முதன்முறையாக வாழ்க்கையில் தவறு செய்கிறோம் என்று உள் மனத்தின் எங்கோ ஒரு மூலையிலிருந்து ஈனமான குரல் கேட்டது. வெறிச் சுழிப்பின் அலைச்சலில் அந்தக் குரல் காதுகளைத் தொட வேண்டுமே!

அடுத்து உடைகளைச் சரிபார்த்துக்கொண்டு படிகளைத் தாவி ஏறி மாடத்தை யடைந்தார் சிவாஜி. இடுப்பிலிருந்த சாவியை எடுத்தார். வழக்கத்துக்கு மீறி அது கனமாகத் தெரிந்தது.

பூட்டுத் திறந்தது: கதவு திறந்தது: மனப் பூட்டும் கதவும் மூடிக் கொண்டன!

அந்த ஒற்றை மாடத்துப் பெரிய அறையில் அத்தனை தீபங்களும் ஒளியை முத்தமிட்டுக் கொண்டிருக்கும் என்று சிவாஜி எதிர்பார்க்கவில்லை. ஓகோ! சலீமாவின் மனம் நிலைக்கு வந்திருக்கவேண்டும். சம்மதம் வெளிச்சத்துக்கு அறிகுறியோ?

பெரிய அறையைச் சார்ந்து கிழக்குப் பார்த்தாற்போல் ஒரு சிறிய அறை. அதனுள் சலீமா ஏன் செல்ல வேண்டும்? இந்தப் பெரிய அறையில் இலவங்கட்டிலிருக்க அந்த அறையினுள் என்ன செய்கிறாள்?

'' சலீமா ?'' — சிவாஜியின் கனத்த தொண்டை அறையில் எதிரொலித்தது.

பதிலைக் காணோம். மீண்டும் ''சலீமா?'' என்று அதட்டலுடன் குரல் கொடுத்தார்.

''..............''

ஏன் இந்த அமைதி?

சற்றே சமாதானத்துடன் அமைதி காண முயன்ற மனம் மீண்டும் சூடேறிக் கண்களின் மூலம் ஜ்வாலையாக எட்டிப் பார்த்தது. காமப் பசி அதிகரித்தது. காலை ஓர் உதை தரையில் உதைத்தவாறு அறையினுள் புயலைப் போல நுழைந்தபோது....

இதயம் ஒரு கணம் துடிக்க மறந்து... கண்கள் பலகணம் இமைக்க மறந்து... செவிகள் ஒலியிழந்து ஓங்காரச் சுழிப்பில் அடங்கி...மூச்சு நின்று மறுகணம் பெருமூச்சாய் வெளிப்பட... திமிர்த் தெழுந்த உடல், நாளங்கள் தளர... கொதித்த மேனி குளிரக் குளிர..

வெளிச்சம், வெளிச்சம், வெளிச்சம்...

''சலீமா...'' ஓங்கிக் கூச்சலிட மனம் எண்ணி வாய் திறந்த போது...

''அன்னையே, பவானி!'' என்ற சொற்கள் தான் வெளிப்பட்டன.

கண்களில் நீர் கலகலத்தது!

உடல் நடுக்கம்; உள்ளம் நடுக்கம்; உலகமே நடுங்குவது போன்ற மயக்கம்! இரு கரங்களும் பக்தி ரெத்தையுடன் கூப்புகின்றன...

''தாயே! தாயே....!''

சத்ரபதி சிவாஜியின் உயிருள் உறையும் அன்னை பவானி — பராசக்தி கோலத்தில் அமர்ந்து காணப்பட்டாள் சலீமா. உதடுகளில் ஆனந்தப்புன்னகை; விழிகளில் வென்று விட்டோம் என்ற நிறைவு!

இரு சொட்டு நீர் வழிகிறது. இந்தக் கருத்தைத் தெரிவித்துக் கற்பைக் காக்கும் வழி சொன்ன அரசி சாயாபாயை மனம் வாழ்த்திக்கொண்டது.

சக்தி இல்லை, சலீமா பேசினாள்: ''மாவீரப் புருஷரே! என் தந்தையை வெட்டி உங்கள் எல்லையில் தொங்க விடுங்கள்; தர்மம் வென்றதாக மகிழ்ந்திருப்பேன். ஆனால் என் தந்தையைவிடக் கேவலமானவராகி யிருப்பீர்கள். இதுவரை கட்டிக் காத்த உங்கள் தருமம் தற்கொலை செய்து கொண்டிருக்கும்! அன்னை பவானி காத்து விட்டாள்!''

''சலீமா...''

—பெயர் ஞாபகத்துக்கு வருகிறது.

''ஆமாம்; சலீமாதான்! சத்ரபதி! இந்துக்கள் மனைவிக்குக் கட்டுகிற தாலி எதற்காகத் தெரியுமா? உலகப் பெண்களில் அவள் ஒருத்திதான் உனக்குரியவள்; தாய் என்கிற தன்மை அந்தத் தாலியால் நீங்கித் தாரமாகிறாள்! ஏனைய அத்தனை பெண்களும் தாய்க்குச் சமானமானவர்களே!''

''எழுந்திரு சலீமா!'' —

சலீமா அம்பாள் கோலத்திலிருந்து விடுபட்டு அவள் கோலத்தில் எழுந்தாள்.

''வேஷத்தைக் கலைக்கலாமே!''

தயங்கினாள் சலீமா: ''பயமாக இருக்கிறது.''

''சத்தியமாக நம்பலாம்; நீ என் தாய்! நீமட்டுமல்ல; என் மனைவிமார்களை நீக்கி ஏனைய அனைவருமேஎன்தாய்மார்கள். சலீமா! உன்னால் உன் தந்தையும் மன்னிக்கப்பட்டார். நாளைய உதயத்தின்போது நீங்கள் மகிழ்ச்சியோடு கல்யாணபுரம் நோக்கிப் பயணமாகலாம்!''

பழி வாங்குகிற இருளான மனநிலையுடன் நுழைந்த சத்ரபதி சிவாஜி, வெளிச்சம் கண்டு வெளியேறிக் கொண்டிருந்தார்.

கிழக்கு வானம் காவியமாய் விரிகிறது.

புதிய

7-ஆண்டு தபால் நிலைய தேசிய சேமிப்புப் பத்திரங்கள் V-வது வெளியீடுகள் மூலம் ஆண்டொன்றுக்கு



9·43%

சாதாரண வட்டி *ஈட்டுங்கள்*

மாதமொன்றுக்கு 100 ரூபாய் வீதம் நீங்கள் இப்போது சேமிக்கத் துவங்கினால், 14 ஆண்டுகளுக்குப் பிறகு ஒவ்வொரு மாதமும் நீங்கள் 332 ரூபாய் பென்ஷன் பெறலாம்.

அனைவருக்கும் உகந்த சிறந்த பென்ஷன் திட்டம் 3,000 ரூபாய் வரையான வட்டித் தொகைக்கு *வரி விலக்கு* உண்டு.

விவரங்களுக்கு, உங்களுடைய தபால் நிலையத்தில் விசாரியுங்கள். அல்லது தேசிய சேமிப்புக் கமிஷனர், த.பெ. எண் 96, நாக்பூர் என்ற முகவரிக்கு எழுதுங்கள்.



ஆசிரியர்
'ஜிலேபி' அவர்களுக்கு,

நான்தான் மாஜி எழுத்தாளன் எழுதிக்கொள்வது. பத்து வருஷங்கள் முன்பு நான் 'அல்பம்' என்ற புனைபெயரில் பத்துக் கதைகள் எழுதியிருக்கிறேன். அதற்கப்புறம் பல கதைகள் எழுதியும் ஒன்றும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படவில்லை. இதனால் மனம் வெடித்துக் கொண்டிருக்கிறது. நான் சாவதற்குள் இன்னும் ஒரு கதையாவது வெளிவந்தால் நன்றாக இருக்கும். இதற்குத் தங்கள் உதவி வேண்டும்.

தங்கள்
'அல்பம்' ராமசாமி

O

திரு 'அல்பம்' அவர்களுக்கு,

தங்கள் கடிதம் கண்டேன். நீங்கள் சமீபத்தில் எழுதிய 'கோணல் வாய் கோபு' கதையைத் திருப்பி அனுப்பியதால் கோபம் கொண்டுள்ளீர்கள் என்று நினைக்கிறேன். உங்களுக்கு ஹாஸ்யம் இயற்கையாக வருகிறது. ஆனால் பெயர்களை மாற்றி அனுப்பிப் பாருங்கள். உதாரணமாகக் கதையில் வரும் பாத்திரங்களின் பெயர்கள் 'அச்சப் பிச்ச' அய்யங்கார், 'கன்னா பின்னா' கந்தசாமி, 'மடி சஞ்சி' மன்னார் என்று இருக்கின்றன. இந்தக் காலத்தில் 'அடுக்குமொழி அல்பம்' என்றால் வாசகர்கள் விரும்பிப் படிக்க மாட்டார்கள். அடைமொழிகளைத் தவிர்த்து எழுதிப் பாருங்கள்.

தங்கள்
'ஜிலேபி' கிருஷ்ணசாமி

O

'ஜிலேபி' ஆசிரியருக்கு,

தங்கள் அறிவுரையை ஏற்றுக்கொண்டேன். கதையைத் திருத்தி 'கோணல்வாய்' என்றாக்கி அனுப்பியிருக்கிறேன். அச்சப் பிச்ச அய்யங்காரை அ. பி. அய்யங்கார் என்றும், மற்றவரை முறையே க. பி. கந்தசாமி, ம. ச. மன்னார் என்றும் போட்டிருக்கிறேன். இப்பொழுதாவது கதையைப் பிரசுரிப்பீர்கள் என்று நம்புகிறேன்.

தங்கள்
அ. ராமசாமி

O

திரு 'அல்ப'த்துக்கு,

பெயர்களைச் சற்றே மாற்றி அமைத்ததற்கு மகிழ்ச்சி. இனிஷியல் வேண்டவே வேண்டாம். மற்றும் கதைக்கும் கோணல் வாய்க்கும் சம்பந்தமில்லை. அதனால் தலைப்பையும் மாற்ற வேண்டும்.

தங்கள்
ஜிலேபி

O

திரு ஜிலேபியே,

தலைப்பைத் தங்கள் இஷ்டத்துக்கே விட்டு விடுகிறேன். மற்றபடி எவ்வளவு யோசனை செய்தாலும் அய்யங்கார், கந்தசாமி, மன்னார் என்ற பெயர்களே திருப்பித் திருப்பி மூளைக்கு வருகின்றன. அதிலும் உங்களுக்குத் தோன்றும் பெயர்களையே போட்டுக் கொள்ளுங்கள். எப்படியாவது கதையை மட்டும் பிரசுரித்து விடுங்கள், ஐயா!

தங்கள்
அல்பம்

O

அல்பம் அவர்களே,

உங்கள் யோசனையை ஏற்றுக்கொள்கிறேன். ஆனால் யோசித்துப் பார்த்ததில் கதையின் ஆரம்பத்திலும் முடிவிலும் சில மாற்றங்கள் செய்ய வேண்டும் என்று எண்ணுகிறேன். அய்யங்கார் வீட்டில் வெள்ளி டம்ளர் காணாமற் போகிறதாகச் சொன்னீர்கள். கடன் எக்கச்சக்கமாக இருக்கும்போது வெள்ளி டம்ளரை விட்டு வைத்திருப்பாரா அய்யங்கார்? கதை முடிவில் மன்னார் தான் எடுத்தான் என்று எழுதியிருக்கிறீர்கள். மன்னார் தூய விஷ்ணு பக்தனாகவும் அய்யங்காருடைய சீடனாகவும் இருப்பதாகக் காட்டிவிட்டு, அவனது 'காரெக்டரை'க் கறைப் படுத்துவது தப்பு. கந்தசாமி எடுத்ததாகச் சொல்லலாம். தங்களது அபிப்பிராயத்தைத் தெரிவிக்கவும்.

ஜிலேபி

O

திரு ஜிலேபிக்கு,

கதையை மாற்றிவிட்டீர். பரவாயில்லை. அதுவும் ஒரு விதத்தில் நல்லதுதான். எப்படியோ போகட்டும். நான் செத்துப் போகு முன் கதையைத் தங்கள் பத்திரிகையில் போட்டுவிடும், ஐயா.

ஆவலுடன்
அல்பம்

O

ஏய் ஜிலேபி,

என்னய்யா இது ஏமாற்று வித்தை! போன வாரம் வந்த 'ஐயங்கார் வீட்டுத் திருட்டு' என்ற கதையின் கீழ் எழுதியவரின் பெயர் 'ஜிலேபி' என்று போட்டுக் கொண்டு விட்டீரே! எத்தனை நாட்களாக ஐயா இந்தப் பழக்கம்?

அல்பம்

O

அட அல்பமே!

உன் கதையின் பெயர்களும் மாறி, கதையும் மாறின பிறகு அந்தக் கதைக்கு ஆசிரியர் என்று சொல்லிக்கொள்ள உனக்கு வெட்கமாயில்லை?

ஜிலேபி



எனக்காகக் காத்திருக்கும் ஒருவர்....!

விஜய் ஸ்கூட்டரை வைத்துக் கொண்டு காத்து நிற்பதைக் கண்டதும் மஞ்சுளாவின் முகம் சட்டென்று மலர்ந்தது. ஆபீஸ் படிகளில் இரண்டு மூன்றாய்த் தாண்டி இறங்கி வந்தாள் மஞ்சு. வாசலில் அவள் எதிர்பார்த்து வந்தது ஏமாற்றமாக முடியவில்லை. அவன் புன்சிரிப்பு, பல்வேறு வர்ணங்களுடன் அவளுடைய நெஞ்சில் சிந்தியது. அவளுக்குள் அவை விழுந்த இடங்கள் மின்னல் பூக்களாய் ஜ்வலித்தன.

அதேபோல் அவளைச் சந்திக்க வஸந்த் வந்த நாட்கள் உண்டு. இரண்டு ஆண்டுகளுக்கு முந்தைய நிகழ்ச்சி அது. இடமும் நேரமும், நிகழ்ச்சியும் பாவனைகளும் ஒருமித்த அவற்றுக்கிடையே ஒரே ஏமாற்றம். வஸந்த் ராஜ் இங்கிலாந்துக்குப் போய்விட்டான். அவனுக்குப் பதில் விஜய்.

''நான் கொஞ்சம் லேட்!'' என்று கூறிய மஞ்சு சுவாதீனமாக அவன் கிளப்பிய ஸ்கூட்டரின் பின்புறம் ஏறி உட்கார்ந்து கொண்டாள்.

மஞ்சுளா கைக்குட்டையால் நெற்றியை ஒற்றிக் கொள்வதைப் போல் கண்களின் நாணத்தை மறைத்துக் கொண்டாள். கூடவே உள்ளூற அந்த நினைவு உறுத்திற்று. அவளுடைய செய்கைகளிலும் நினைவுகளிலும் நேர்மை இருந்ததா? கல்லூரி நாட்களிலேயே விஜய் அவளுக்குப் பழக்கமானவன் தான். அவளுக்கு இரண்டு வருடம் ஸீனியர். டென்னிஸ் சாம்பியன். அந்த நாளில் அவனிடம் அவளுக்கு ஒரு பிரமை தட்டியதுண்டு. அப்புறம் மங்கி விட்டது. இப்போது சாம்பல் ஊதிய தணலாக மறுபடியும் கனியத் தொடங்கும் ஆவல்.

கடந்த ஆறு மாதங்களாக இந்த வழக்கம் கொஞ்சம் நெருக்கமாகிவிட்டது. அவளிடம் அவன் 'போனி'ல் பேசுவதும், அலுவலக வேலை முடிந்ததும், இப்படிப் போய்விட்டு வீடு திரும்புவதும் சகஜமாகி விட்டன. முதலில் வாரத்துக்கு ஒரு தடவை: கொஞ்ச நாட்களாக இரண்டு தடவைகள். ஆனால் விஜய் வற்புறுத்துவதில்லை. அவளும் அநேகமாக மறுப்பதில்லை. அவன் முன்னாலேயே 'போன்' செய்து விட்டுத்தான் வருவான். அவளும் சௌகரியம் இல்லை என்றால் 'போனி'லேயே பதில் சொல்லி விடுவான்.

விஜய் எதிரே உட்கார்ந்திருக்கும் இந்த வேளையிலேயே அவள் மனம் வஸந்தை நினைந்துப்பார்த்துக்கொண்டிருந்தது.

இது என்ன நியாயம்? அவள் மனத்தை அவன் படித்துவிட்டானோ என்னவோ, கால்களை மாற்றிக் கொண்டே கேட்டான், குரலும் பேச்சும் கூடவே மாறியதைப் போல்.

''கடிதம் வருகிறதா, மஞ்சு?''

''யாரிடமிருந்து?''

''வஸந்த் ராஜிடமிருந்துதான். ஏதோ புத்தகம் எழுதிக் கொண்டிருக்கிறான் என்று சொன்னாயே? ஏதாவது ஆராய்ச்சியா?''

''ஆமாம்'' என்று சொல்லிவிட்டு யோசனையில் ஆழ்ந்தாள் மஞ்சு. என்ன ஆராய்ச்சி செய்து என்ன? அவள் மனத்தில் இருப்பவைகளைக் கண்டுபிடித்துப் புரிந்து கொள்ள முடியவில்லையே அவனால்?

''கடைசியாகக் கடிதம் எப்போது வந்தது?''

''இரண்டு வாரங்கள் இருக்கும்.''

அது பொய். கடைசிக் கடிதம் வந்து ஒருமாதத்துக்குமேல் இருக்கும். அதுவும் கார்டுதான். விஷயங்களும் அவர்கள்





ஜ். லட்சுமி சுப்பிரமணியம்

இருவரையும் பற்றி இல்லாமல், ஊர், காட்சி, பழக்கங்கள் இவற்றைப் பற்றி இருந்தன. வர்ணப்படம் போட்ட கார்டைத் தம்பி சுந்தரிடம் கொடுத்துவிட்டாள். அவனுக்குத்தான் அதுமாதிரிப் படங்களைச் சேர்ப்பதில் ஆவல்.

அந்த நேர மகிழ்ச்சியிலும் மனத்தில் இலேசாக ஒரு வேதனை. இருவரும் எழுந்து சிறிது நடந்தார்கள்.

''உனக்காக நான் காத்திருப்பேன் மஞ்சு. நீ வஸந்த் வருவான் என்று காத்திருப்பது முடியும் வரையில். நான் உதவியாக இருந்தேன் என்று நீ நினைத்தால் போதும்.''

''விஜய்! நீ சொல்வது நியாயம் இல்லை.''

''நியாயம்தான் மஞ்சு. தனக்குச் சரியான வாலிபனைக் கண்டுபிடிப்பது ஒரு பெண்ணுக்கு எவ்வளவு கஷ்டமோ, அத்தனை சிரமம் தான் தனக்குரிய பெண்ணை ஒரு வாலிபன் தேர்ந்தெடுப்பதும். எனக்குப் பொறுமையில் நம்பிக்கை இருக்கிறது.''

வீட்டுக்குத் திரும்பும்போது இருட்டிவிட்டது. அம்மா தனியாக உட்கார்ந்து கவலைப்பட்டுக் கொண்டிருந்தாள். ஹாலில் முன் நேரத்திலேயே கவிந்துவிட்ட இருளைப் போக்கத் தட்டிவிட்ட மெர்க்குரி வெளிச்சத்தில் தம்பி அந்தப் பெரிய படப் புத்தகம் ஒன்றின் மேல் கவிழ்ந்து கொண்டிருந்தான். அவளைக் கண்டதும் எழுந்து அரை நிஜாரை இழுத்து விட்டுக் கொண்டு, ''அக்கா! அக்கா! எனக்கு இன்றைக்கு ஓர் இங்கிலாந்து ஸ்டாம்பு கிடைத்திருக்கிறது'' என்று ஒரு சிறு நடனம் ஆடினுன்.

''என்னடாது? ஏது ஸ்டாம்பு?'' என்று கேட்கும் போதே அவள் கண்கள் ஆவலில் மின்னின. பார்வை மேஜை மீது கிடந்த அந்தக் கார்டைக் கல்விளுற்போல் நிலைத்தது.

அது தாம்பரம் விலாசத்துக்குப் போய் வந்திருந்தது. அங்கே இருந்த வஸந்தின் அத்தை அதை விலாசம் திருத்தி அவளுக்கு அனுப்பி இருந்தாள். சில சமயம் அங்கே அவன் எழுதுவதுண்டு. அதை ஒட்டி அவளும் தாம்பரத்துக்குப் போய் அத்தையைப் பார்த்துவிட்டு வருவாள். கடிதமே வராமல் தேங்கி விட்டாலும், விசாரிக்க அத்தைதான் தகவல் தரக் கூடியவள்.

கார்டை எடுத்துக் கொண்டு உள்ளே போனுள் மஞ்சுளா. உடையை மாற்றிக் கொள்ளும்போது அந்த வரிகளை மீண்டும் மீண்டும் படித்தாள். ''என்னுடைய புத்தகம் முடிந்துவிட்டது. என்னுடைய டிகிரியும் சீக்கிரத்தில் வந்துவிடும். உன்னை விரைவில் சந்திப்பேன் என்று நினைக்கிறேன்.'' அவன் இன்னும் இரண்டு வரிகள் எழுதியிருக்கலாம். அவளுடைய நெஞ்சைத் தொடுவதுபோல் ஏதேனும், அந்தரங்கமான வாக்கியங்கள் இரண்டொன்று, அவளுக்கென்று அவன் மனம் நெருங்கி எழுதியவையாக — எப்படி முடியும்? அவன் கவர்கூட எழுதுவதில்லை. போன நாளாய் இதுவரை அவன் மனம் திறந்து எழுதிய கடிதம் ஒன்றும் இல்லை. அவள்தான் தேக்கி வைத்த ஆசைகளைக் கடிதத்தில் கொட்டி எழுதுவது வழக்கம்.

அம்மாவும் சுந்தரும் தூங்கியாயிற்று.

அவள் ஜன்னலோரக் கட்டிலில் படுத்துக் கொண்டிருந்தாள். நெஞ்சில் நெய்து கூடிய பழைய நினைவுகள்.

தாம்பரத்தில் அத்தை வீட்டில்தான் அவர்கள் முதலில் சந்தித்தது. அவருடைய பெண் நிர்மலா மஞ்சுவின் பள்ளித் தோழி. விமான நிலையத்தில் யாரையோ அனுப்பி வைக்க வந்திருந்த வஸந்த் அப்படியே அங்கேயும் வந்திருந்தான்.

''வாசலில் புதிதாக ஒரு பூப்போட்ட செருப்பு இருக்கிறதே என்று பார்த்தேன்...'' என்று அத்தையின் அருகில் நின்று கொண்டிருந்த மஞ்சுவைக் கவனித்தான். உதட்டோரம் குழிந்த ஒரு புன்னகையுடன் அவள் கைகளைக் குவித்துக் கொண்டாள்.

''நான் மஞ்சுளா. நிர்மலாவின் தோழி. இங்கே அவ்வப்போது வருவதுண்டு.''

''நான் வஸந்த்ராஜ். இந்த அத்தை எனக்கு ஒரே ஒரு அத்தை. அவளுக்கு நான் ஒரே ஒரு மருமகன். நானும் இங்கே அவ்வப்போது வருவதுண்டு.''

அத்தை உள்பட மூவரும் சிரித்தார்கள். அப்படி நயமாகப் பேசுவது அவனுக்குக் கைவந்த கலை. பேச்சைப் போலவே நயமாக எழுதுவான். அவன் கதையும் கட்டுரையும் பத்திரிகைகளில் வரும். அவள் அவற்றைப் படித்ததுண்டு. ஆசிரியரின் அறிமுகம் என்னவோ அப்போதுதான்.

அதன் பிறகு அவன் போன் செய்தால், அவள் கடைசியாகப் படித்த அவனுடைய கதையைப் பற்றி விமரிசனம் செய்வாள்.

கொஞ்சம் கொடுத்து — கொஞ்சம் வாங்கி, என்று இலேசாக ஆரம்பித்த நட்புதான் அது. அப்புறம் அடிக்கடி நேர்ந்த சந்திப்புக்களில் நெருங்கிவிட்டது.



கடற்கரை மணலில் உட்கார்ந்து, விரல்களால் ஈர மண்ணை நீவி அவன் பெயரை எழுதியபடி ஒரு நாள் சொன்னான்:

''எனக்குப் பிடித்த எல்லாம் உன்னிடம் இருக்கிறது.''

''என்னவெல்லாம் ?''

அவள் கையை அவன் எடுத்துக் கொண்டான். ஒவ்வொன்றுக்கும் ஒவ்வொரு விரலாக மடக்கியபடி சொன்னான். ''அழகு, புத்திசாலித்தனம், குறும்புத்தனம், வாயாடித்தனம் — ''

அவள் கையைப் பிடுங்கிக் கொண்டாள். ''உங்களுக்கு என்ன குறைச்சலாம்?''

''ஆமாம். ஒப்புக்கொள்கிறேன். என்னால் ஈடுகொடுக்கமுடியும். நாம் நல்ல 'ப்ரண்ட்ஸ்' ஆக இருக்க முடியும். ஒரே மாதிரி, ஒருவருக்கொருவராக.......''

நட்பு மட்டும்தானா? இன்னொரு வார்த்தையையும் சொல்லியிருக்கலாம். இதற்கு இன்னும் பழக்கம் தேவையோ என்னவோ ? அவள் மனத்தில் ஏக்கம் படர ஆரம்பித்துவிட்டது. அவன் போனில் பேசிய, நேரில் சந்தித்த நாட்களில் மனம் மகிழ்ச்சியில் நனைந்து திளைத்தது. இல்லையென்றால் ஒரே மாதிரிதான்.

ஒரு நாள் அவன் சொன்னான். அந்தி இருளில் முகங்கள் கரையும் நேரம்.

''மிஸ் ! உன்னை நான் நிச்சயம் 'மிஸ்' பண்ணப் போகிறேன், இங்கிலாந்துக்குப் போன பிறகு!''

சிலந்தி நூல் போல் குரல் அந்த இருளினின்று இழை பிரிந்து வந்தது: எங்கே அவள் அந்தச் செய்தியைக் கேட்டதும் திடுக்கிட்டுப் போய்விடுவாளோ என்று யோசிப்பதைப் போல.

அவள் முகத்தில் கட்டியிருந்த புன்னகை சட்டென்று மறைந்து போயிற்று. ''எங்கே போகப் போகிறீர்கள்? இத்தனை நாட்களாகச் சொல்லவே இல்லையே ? எப்போது?''

''மேல்படிப்பு ஒன்றுக்கு 'ஸ்காலர்ஷிப்' கிடைத்திருக்கிறது. அங்கே அப்படியே என்னுடைய படிப்பைத் தொடர்ந்து ஒரு புத்தகமும் எழுதி முடிக்கலாம் என்று ஒரு பிளான்.''

''உங்களுக்குப் பிடித்ததுதான். எனக்குத் தெரியும். ஆனால் —''

''எனக்குப் புரிகிறது மஞ்சு. நான் அங்கிருந்து அடிக்கடி எழுதுவேன். நீயும் எழுதுவாயோ இல்லையோ ?''

''எழுதுவேன். நீங்கள் எழுதுவதையும் படிக்கக் காத்துக் கொண்டிருப்பேன்.''

இரண்டு வாரங்களில் அவன் கிளம்பிப் போய்விட்டான். சொன்னவைகளை நினைக்கும் போது நேற்றுப் போல் இருக்கிறது. இரண்டு ஆண்டுகள் கழிந்ததை நம்பத்தான் முடியவில்லை. அவர்களிடையே நேரும் இணைப்புச் சங்கிலி இந்தக் கடிதங்கள்தாம். அதுவும் அவனுடைய கார்டுகள்தாம். அந்த இடைவெளியும்கூட அதிகமாகிவிட்டது.

இந்தத் தனிமையைச் சமாளிக்க விஜய் அவளுடன் பழக ஆரம்பித்தபோது அவள் நட்பென்றுதான் அதை ஆரம்பித்துக் கொண்டாள். போகப் போக, வஸந்த் அவளை மறந்துவிட்டானோ என்று நினைக்கும்போது, அதற்கே இப்போது இன்னோர் உருவம் கிடைத்துக் கொண்டிருந்தது. அன்று விஜய் அவளிடம் மனத்தைத் திறந்துகாட்டியவிதம்..

அந்த ஞாயிற்றுக்கிழமை தாம்பரத்துக்குப் போனாள். வழக்கம்போல் சுந்தர் தான் துணை.

''உனக்குத் தெரிந்திருக்க வேண்டும் மஞ்சு. இந்த மாதம் வஸந்த் திரும்பி வரப் போகிறான்.'' தன்னை மீறிய ஒரு களிப்பில் அவளுக்கு மூச்சு அடைத்தது. பேச்சு வரவில்லை. உண்மைதான். அவள் நெஞ்சம் இன்னும் அவனை மறக்கப் பழகிக் கொள்ளவில்லை.

''என்ன அப்படிப் பார்க்கிறாய்? உனக்கு எழுதவில்லையோ ? ஹாலில் கண்ணாடி அலமாரியில் மேல் தட்டில் அவனுடைய கடிதம் ஒன்று இருக்கிறது. படித்துப் பார். அப்புறம் உன்னிடம் ஒன்று சொல்ல வேண்டும். நான் ஒரு தப்பு பண்ணிவிட்டேன்.''

'' என்ன அத்தை ?''


''இங்கிலாந்துக்குப் போன புதிதில் இந்த வீட்டு விலாசத்துக்கு உன் பெயரில் ஒரு கவர், வஸந்திடமிருந்து வந்திருந்தது. ஞாபக மறதியாக நான் அதை ஒரு புத்தகத்தில் வைத்து மூடிவிட்டேன். புத்தகம் எங்கேயோ மேலே மச்சில் புகுந்து கொண்டுவிட்டது. நேற்று சாமான்களை ஒழித்தபோது அந்தப் புத்தகம் கிடைத்தது. படிப்பதற்காக எடுத்துப் பிரித்தேன். உள்ளே பார்த்தால் உனக்கு வந்த கடிதம் ! அதையும் அங்கேயே தான் வைத்திருக்கிறேன்.''

அவள் முன்புறம் போய் அவசரமாகத் தேடினாள். புதிதாக வந்த கடிதத்தை அல்ல; அந்தப் பழைய கடிதத்தைத்தான். அங்கே போன புதிதில் அவன் எழுதியது அது. அவளுக்கென்று வந்த ஒரே கவர். நிச்சயமாக அதில் அவன் தன் மனத்தைத் திறந்து காட்டி இருப்பான். அவளுக்கு அது ஏன் கிடைக்காமல் இப்படிச் சந்தர்ப்பம் நழுவிப் போயிற்று?

அவள் மனம் தத்தளித்தது. விளிம்பில் ததும்பும் பாலைப் போல் பொங்கும் உணர்ச்சிகள். அந்தக் கவரை எடுத்துப் பிரித்தாள். கண்கள் அந்த வரிகளைப் படித்தன. முதலில் வேகமாக, அப்புறம் மெதுவாக, கடைசியில் நின்றுவிடுவதைப் போல.



கால்கேட் பற்பொடி உபயோகித்து உங்கள் பற்களையும், ஈறுகளையும் பாதுகாத்துக் கொள்ளுங்கள்! வாய் நாற்றத்தையும் அகற்றுங்கள்!



பழமையான கரகரப்பான பற்பொடிகள் உங்கள் ஈறுகளைச் சேதப்படுத்தி, பல் எனாமலைச் சிதைக்கக் கூடும். கால்கேட் பற்பொடி மிகவும் மென்மையானது. அது உங்கள் ஈறுகளுக்கு இதமளிக்கும்போதே, அதில் கலந்துள்ள மெருகேற்றும் பொருள் பற்களின் மீது படிந்துள்ள கறைகளைப் போக்கி, பற்களைச் சுத்தமாக வெண்மை பளிச்சிடச் செய்கிறது. கால்கேட்டின் வளமான நுரை பல் இடுக்குகளில் ஊடுருவி வாய் நாற்றம் மற்றும் பற்சிதைவுக்குக் காரணமான கிருமிகளை அகற்றுகிறது. அதனால்தான் கால்கேட் பற்பொடி நவீன பராமரிப்பு முறையில், உங்கள் பற்களையும் ஈறுகளையும் பாதுகாக்கிறது; மற்றும் வாய் நாற்றத்தையும் உடனே நிறுத்துகிறது. அதன் குளுமையான இன்மணத்தையும் நீங்கள் பெரிதும் விரும்புவீர்கள்!

உங்கள் குடும்பத்திற்கு எகானமி சைஸ் கால்கேட் பற்பொடியை இன்றே வாங்குங்கள்! ஒரு டப்பா மாதக் கணக்கில் வரும்!



...பூரணமான பல் பராமரிப்-
பிற்கு விஞ்ஞான முறையில்
உருவாக்கப்பட்ட கால்கேட்
டூத் ப்ரஷ் உபயோகியுங்கள்.

TP.G.21 TM

''நாம் நமக்குள்ளே கழித்துக் கொண்ட பொன்னான நேரங்கள் எத்தனையோ. அவை என் மனத்தில் பசுமையாக இருக்கின்றன. அந்த நயம் மிகுந்த நட்பு என்றைக்கும் அப்படியே இருக்க வேண்டும் என்று நினைக்கிறேன். இந்த வயதில் சிலர் சட்டென்று சில முடிவுகளுக்கு வந்துவிடுவதுண்டு. அப்படி நீ நினைத்து விடவில்லை. என்னை ஏதும் வற்புறுத்தவில்லை. அதுதான் உன்னுடைய 'ஸ்வீட்'டான குணம். எனக்கு ரொம்பப் பிடித்ததும்கூட.

''எனக்காக நீ காத்திருக்க வேண்டாம். உனக்குப் பிடித்த, மனத்துக்கினிய, 'மிஸ்டர் ரைட்' உன் வாழ்க்கையில் வரும்போது—கோ அஹெட்! என் ஆசிகள் என்றும் உனக்கு உண்டு.''

அவள் மனமும் சிந்தனை தேங்கி அப்படியே நின்றது. அந்தக் கடிதம் கிடைக்காமலே அவன் எழுதியவை? மீண்டும் மீண்டும் தன் மன எல்லையை வருத்துக் காட்டுவதைப்போல் அவன் எழுதிய பரிவின் இதம் காண முடியாத கார்டுகள்? அதில் தப்பு இல்லை. அவள் தான் அவனைச் சரியாகப் புரிந்து கொள்ளவில்லை. இப்போது எண்ணிப் பார்க்கும்போது வெட்கம் மிக, காதோரம் இரத்தம் குறுகுறுத்தது.

ஆச்சரியந்தான். அவள் காதல் என்று நினைத்தது நட்பாக உருமாறி மெல்ல மெல்ல மறைந்து விட்டது. அவன் நட்பென்று தொடங்கியது காதலாக மலர்ந்து மணம் பரப்பத் தொடங்கியுள்ளது....

''என்ன மஞ்சு? கடிதத்தைப் பார்த்தாயா? எப்போது வருகிறேன் என்று அவன் எழுதியிருக்கிறான்?''

அவள் அந்தக் கடிதத்தைத் தொடக்கூட இல்லை.

காப்பி ஃபோட்டுக் கொண்டு வர அத்தை உள்ளே போனாள். வாசலில் சுந்தர் குதித்துக் கொண்டு ஓடி வருவது தெரிந்தது. ஸ்கூட்டரை இழுத்து நிறுத்திவிட்டு அவன் பின்னாலேயே வந்தான் விஜய்.

''அக்கா! எனக்கு விஜய் மாமா என்ன வாங்கிக் கொடுத்திருக்கார்னு பாரு!''

அவன் கையில் ஏரோப்ளேன் பட்டம் அலைந்தது. விமானத்தில் பறந்து போய்விட்ட, மறைந்து போன உறவு. இந்தப் பட்டத்தைப் போல அதுவும், அந்தப் பழக்கமும், சும்மா ஒரு விளையாட்டுக்குத்தான்.

ஆனால் விஜய் கண் முன் நின்றபோது நெஞ்சில் அத்தனை வருத்தம் இல்லை.

''உன் வீட்டுக்குப் போனேன் மஞ்சு. நீ இங்கே வந்திருப்பதாகச் சொன்னார்கள்'' என்று சிரிப்பை வரவழைத்துக் கொண்டான் விஜய். அதன் நிழல்போல் அவள் முகத்திலும் ஒரு மலர்ச்சி.

அவன் பார்வை குனிந்தது. அவள் கையில் இன்னும் அந்தக் கடிதம் இருந்தது. கவரின் மீது தெரிந்த வஸந்தின் கையெழுத்தைப் பார்த்ததும் அவன் முகம் சுருங்கிற்று.

''வஸந்த்ராஜ் திரும்பி வருகிறானா மஞ்சு? எப்போது?''

''எனக்குத் தெரியாது. இது ஒரு பழைய கடிதம். அதற்கப்புறம் எவ்வளவோ நடந்து விட்டது. நான் இப்போது அவர் வரப் போவதற்காகக் காத்திருக்கவில்லை.''

சட்டென்று அவள் குரல் இறுகிற்று. விரல்கள் அந்தக் கடிதத்தைக் கசக்கிக் கீழே போட்டன. அவள் முன்னால் நின்ற விஜய், அவளுக்காகக் காத்து நிற்கும் ஒருவர், அவள் மனத்தைப் புரிந்து கொண்டிருக்கும் நினைவுகள் —

இதற்கு அர்த்தம் இருந்தது. அவள் எதிர்பார்க்கும் பொருள் இருந்தது. சட்டென்று அவள் இதழ்களில் ஒரு புன்னகை மலர்ந்தது.

''என்ன மஞ்சு? உன் மனத்துக்குள்ளே ஏதோ மகிழ்ச்சி......''

'ஆம்' என்று சொல்லாமல் தலையை அசைத்தாள்.

''எனக்கும் சொல்லலாமா?''

''அதற்குக் காரணமே நீங்கள்தாம்'' என்று சொல்லியவள், நாணம் பொங்கிய முகத்தை மறைக்க உள்ளே திரும்பி நடந்தபடி ''அத்தை! அந்தக் காப்பியை இரண்டு தம்ளரில் போட்டுக் கொடுங்கள்'' என்றாள் மணிகள் அசையும் மென்குரலில்!

ராகவேந்திரருக்கு ரதம்

துங்கபத்திரா நதிக் கரையில் மந்திராலயத்தின்கண் ஸ்ரீ ஸ்ரீராகவேந்திர மடம் அமைந்துள்ளது அன்பர்களுக்குத் தெரியும். ஸ்ரீ ராகவேந்திர ஸ்வாமியின் பிருந்தாவனம் தமிழ் நாட்டிலும் ஸ்ரீரங்கத்தில், எழில்மிகு திருமஞ்சன காவேரியின் கரையில், உருவாகியிருக்கிறது.

ஸ்ரீரங்கத்திலுள்ள ஆஸ்திகப் பெருமக்கள், மந்திராலயத்தில் உள்ளது போன்ற வெள்ளி ரதத்தில், ஸ்ரீராகவேந்திர ஸ்வாமிகளின் பூர்வ அவதாரமாகிய ஸ்ரீ பிரஹலாத ஸ்வாமிகளின் திருஉருவம் திரு உலா வரவேண்டும் என அவாவுறுகின்றனர். இப்பணியை ஸ்ரீ ராகவேந்திர பக்த ஜன ஸமிதி மேற்கொண்டு தற்போது ஸ்ரீரங்கத்தில் ஸ்ரீ ராகவேந்திர மடத்திலுள்ள மரத் தேரைப் புதுப்பித்து, அதற்கு வெள்ளிக் கவசம் அணிவிக்கத் தீர்மானித்துள்ளனர்.

இம்மாபெரும் பணி இனிதே முடிவடையப் பக்தர்கள் இயன்ற நிதியையும், வெள்ளியையும் அளித்து, ஸ்ரீராகவேந்திரரின் பரிபூரண அனுக்கிரகத்துக்குப் பாத்திரராகுமாறு கோரப்படுகிறார்கள். நன்கொடை அனுப்ப வேண்டிய முகவரி: டாக்டர் கே. எஸ். கோபிநாதன், தலைவர், ஸ்ரீ ராகவேந்திர பக்த ஜன ஸமிதி, 17, ரங்கநாதபுரம், திருச்சி 620006.





உயிர்நூல் பாடம் சலிப்பூட்டுகிறது

அதற்குப் பதிலாக, நாள் முழுதும் உழைத்த பின்னரும், இவர் முகம் எப்படி இத்தனை புதுமையோடு எழிலோடு விளங்குகிறது என்பதை கற்பித்தால் நலம்!



காலை முதல் இரவு வரை புதுமையுடன் தோற்றமளிப்பது எப்படி?
பகல் தொடங்கியதும், லக்மே முகப் பவுடர் தடவுங்கள். நாள் முழுவதும் உங்கள் முகம் எழிலோங்கி விளங்க, லக்மே காம்பாக்ட் மேக்-அப் செய்து கொள்ளுங்கள். இது உங்கள் கைப்பையில் அடங்கக் கூடியது.

பவுடர் பூசியதுபோன்ற தோற்றத்தைத் தவிர்ப்பது எப்படி?
மிகவும் மென்மையான, ஒளி ஊடுருவிப் பாயும் முகப்பவுடரைத் தேர்ந்தெடுங்கள். லக்மே அல்ட்ரா-சில்க் பேஸ் பவுடர் விசேஷமாகப் பட்டில் சலிக்கப்பட்டுள்ளது. இதனால் அது மேனி வண்ணத்துடன் இணைந்து, புதுமைப்பொலிவைக் கூட்டுகிறது.


இதர பெண்மணியைப் போல அதே வண்ணச் சாயலே உபயோகிப்பது சாமர்த்தியமல்ல. ஏன்?
உங்கள் மேனி வண்ணத்தைவிட இலேசான அல்லது கருமையான சாயலில் பவுடர் தடவினால், திட்டு திட்டாக இருக்கும். எனவே இந்தியப் பெண்மணிகளின் பல்வேறு மேனி வண்ணங்களுக்குப் பொருந்தும்படியாக 8 சாயல்களில் கிடைக்கிறது லக்மே முகப் பவுடர். உங்களுக்கு எது பொருத்தமோ அதைத் தேர்ந்தெடுங்கள் — லக்மே காம்பாக்ட் மேக்-அப் பொருத்தமான 8 சாயல்களில் கிடைக்கிறது.

சரியாக மேக்-அப் செய்து கொள்ளும் கலையைக் கற்போருக்குப் பாராட்டுகள்!
முதலில் ஒரு நல்ல வேனிஷிங் க்ரீம் அல்லது லிக்விட் மேக்அப் உபயோகியுங்கள். பிறகு சுத்தமான பஞ்சால் உங்கள் முகம் மற்றும் கழுத்துப் பகுதியில் பவுடரை மெதுவாக அழுத்துங்கள். மூக்கு, நெற்றி, முகவாய்க்கட்டை போன்ற எண்ணெய்ப்பசையுள்ள பகுதிகளிலும் அவ்வாறே செய்யவும். அங்கெல்லாம் லக்மே முகப் பவுடர் மணிக்கணக்கில் நன்கு ஒட்டிக்கொள்ளும். நீங்கள் இயற்கைப் பொலிவுடன் இணையற்ற தோற்றமளிப்பீர்கள்.

லக்மே
அல்ட்ரா-சில்க்

பேஸ் பவுடர் மற்றும் காம்பாக்ட் மேக்-அப்

எழிலோங்கும் 8 சாயல்களில்—மணிக்கணக்கில் மேனியழகு மிளிர.



உடலில் ஊனம் ; உள்ளத்தில் ஊக்கம்

சிதம்பரம் மேல வீதியில் 'தென்னூர்க் காடு சர்வோதய சங்கம்' நிலையத்தில் நுழைகிறேன். பளபளவென்று துலங்கும் கண்ணாடி ஷோ கேஸ்களின் முன்னால் கவுண்டரில் ஐம்பது வயது தாண்டிய மனிதர், சுறுசுறுப்புடன் கதர் ஆடைகள் வாங்க வருபவர்களை எதிர் நோக்கி நிற்கிறார். கண்களே அழைத்து என்ன வேண்டும் எனக் கேட்கின்றன.

''ஐம்பது கால் நைஸ் வேட்டி இருக்கிறதா?'' கவுண்டர் விற்பனை ஊழியர் தலையை மட்டும் அசைத்து, வேஷ்டிகளை எடுத்துக் கொடுக்கிறார்.

வேஷ்டிகளைப் பிரித்துக் காட்டி, மெல்லிய வாயசைப்புடன் வேட்டி விளிம்பின் கரையைக் கட்டிக் காட்டுகிறார். கண்டு விரலை உயர்த்துகிறார். பிறகு இரட்டை விரலைக் குறுக்காக உயர்த்திக் காட்டுகிறார்! அதாவது மெல்லிய கரை, அகலக் கரை இரண்டும் உண்டு என்று விநாடிப் போதில் புரிய வைக்கிறார். அவர் ஒரு பிறவி ஊமை!

ஊமையானாலும் கடந்த கால் நூற்றாண்டாக, பெரும் விற்பனையாளராக இருக்கிறார் ஏ. சதாசிவம்! வெற்றிகரமாய் இயங்குகிறார்.

வாடிக்கையாளருக்குக் கதராடை விற்கிறார் திரு ஏ. சதாசிவம். (ராஜாஜி படத்தையொட்டி நிற்பவர்.)



வாய் பேசாத விற்பனையாளர்!

கடவுள் ஒன்றில் குறை வைத்தாலும் இன்னொன்றில் அதை ஈடுகட்டிவிடுகிறார் என்பதைத் திரு ஏ. சதாசிவத்திடம் காணலாம். காது மிகக் கூர்மை; மனிதர்களைக் கண்டதும் அவர்களை எடை போடும் புத்திசாலித்தனம் இரண்டும் அவரிடம் இருக்கின்றன!

பேசும் சக்தியற்ற அவரிடம் சில கேள்விகளைக் கேட்டேன். அதற்கான பதில்களை, அந்த ஊமை விற்பனையாளருக்காக, திரு பாலகிருஷ்ண பிள்ளை தெரிவிக்கிறார்.

சர்வோதய சங்கத்தின் பொருளாளராகவும், டிரஸ்டிகளில் ஒருவராகவும் இருந்து ஓய்வு பெற்றவர் திரு பாலகிருஷ்ண பிள்ளை.

கேள்வி: எங்குமே விற்பனையாளர் வேலைக்கு வாய் சாதுரியம் நிறைந்தவர்களையே அமர்த்திக் கொள்வார்கள். ஆனால் வாய் பேசாத இவருக்கு எப்படி வேலை கிடைத்தது?

பதில்: இந்தக் காதி வஸ்திராலயத்தின் வாசலில் ஒரு தையற்கடை முன்பு இருந்தது. அதில் தினமும் இரண்டணாக் கூலிக்கு 'காஜா' எடுக்கும் பையனாக இருந்தான் இந்த சதாசிவம். என்னைப் பார்க்கும்போது எனக்கு ஒரு வேலை தரமாட்டீர்களா? எனக் கைஜாடை காட்டினான். அப்போது நான் திருப்பூருக்கு எழுதி, செயலாளர் அனுமதி பெற்று, வேலையில் சேர்த்தேன். ஆரம்பத்தில் எடுபிடிப் பையனாக இருந்தான். சில்லறை வேலைகள் பார்த்தான். அப்புறம் படிப்படியாக 'சேல்ஸ் மேனாக' ஆக்கப்பட்டான்.

''இப்படி ஒருவரை வேலைக்கு வைத்ததை யாரும் ஆட்சேபிக்கவில்லையா?''

''கோவை அய்யாமுத்து இவனைப் பாராட்டி ஊக்குவித்தார். 1938ல் மந்திரியாக இருந்த காலஞ்சென்ற ராமநாதன் ஒரு முறை வந்தபோது 'ஊமைக்கு வேலையா?' என ஆட்சேபித்தார்.''

''அதனால் பாதிக்கப்பட்டாரா?''

''இல்லை! அவருடன் அய்யாமுத்துவும் உடனிருந்தார். அவரிடம் 'இந்தப் பையனை நீங்கள் ஏதேனும் சாடை காட்டி வாங்கி வரச் சொல்லுங்கள். அவன் வாங்கி வராவிடில் வேலையில் இவன் நீடிப்பது பற்றி யோசிப்போம்!' என்றேன்.

''உடனே ஐயாமுத்து 'தம்பி, இது வாங்கி வா' என்று கைஜாடை செய்தார். அடுத்த சில நிமிடங்களில் அந்தப் பொருள் வந்து சேர்ந்தது!''

தராசில் நிறுத்து ஒரு சேர் திராட்சைப் பழம் கொத்தாக வாங்கி வரவேண்டும் என்பதே கைஜாடை!

ஆட்சேபித்த ராமநாதன் வேலை கொடுத்ததை ஆமோதித்தார் இப்போது.

இருநூற்றைம்பது ரூபாய்க்கு மேல் ஊதியம் பெறுகிறார் இந்தக் குடும்பத் தலைவர்.

''உங்களுக்கு எத்தனை குழந்தைகள்?'' என்று கேட்டபோது, அதற்குப் பதிலை அபிநயம் பிடிப்பது போல், மீசையை முறுக்கி ஆள்காட்டி விரலைக் கண் முன் நிறுத்தினார். அடுத்துக் கழுத்தை வலது தோளில் சாய்த்து, இடது கரத்தை முகவாயில் வைத்து வெட்கப்பட்டபடி மறுபடியும் ஒன்று என ஆள்காட்டி விரலை உயர்த்தினார்.

'கடவுள் எனக்கு வாய் பேசாத குறையைத் தான் வைத்தார். மற்றபடி எனக்கு ஒரு குறையுமில்லை; ரொம்பவும் மகிழ்ச்சியாகவும் சக ஊழியர்களோடு சமமாகவும், சமூகத்தோடு ஒருங்கிணைந்தும் வாழ்கிறேன்' எனவும் கைஜாடை, கண்களில் நம்பிக்கை ஒளி, புன்சிரிப்பு, தலையசைப்பு ஆகியவற்றால் தெரிவித்துக் கொண்டார் திரு ஏ. சதாசிவம்.

பேட்டி: **ஏ. சுவாமிநாதன்**

ஆஜ் கீ தாஜா கபர்

"இன்றைய புதிய செய்தி" என்ற தலைப்பில் வெளியாகியிருக்கும் இந்தப் படத்தில் ஏதாவது புதிய செய்தி இருக்குமோ? - இப்படி ஓர் ஆவல் உந்த இந்தப் படத்தைப் பார்க்கப் போனால் 'தலைப்பே அபத்தம்' என்று தெரிய வரும். அதை ஒட்டித் தெரிய வரும் 'கதையே அபத்தம்' என்று!

அதற்குப் பின் 'நகைச் சுவை' என்றால் இப்படி ஒரு கேலிக் கூத்தா? இதென்ன அபத்தம்' என்று கேட்கத் தூண்டும்.

இப்படி ஓர் அபத்தக் களஞ்சியத்தின் கதை சுருக்கமாக இதுதான்:

ஓர் இரவு வெளியே தங்கிவிட்ட கணவன் மீது மனைவிக்குச் சந்தேகம். பின்னைப் பருவத்து நினைவில் உந்தப்பட்டு அவன் இயந்திரக் குதிரை ஓட்டினத்தில் சுற்றப் போகிறான். இயந்திரக் கோளாறு காரணமாக அது அந்தரத்தில் நின்று விடுகிறது. அவனுடன் ஓர் இளநங்கை. இவ்வுண்மையைச் சொல்லியும் அவள் நம்பாமல் போகவே ஒரு கற்பனை நண்பனுடன் இருந்ததாகக் கூறிச் சமாளிக்க முயல்கிறான். அந்தக் கற்பனை நண்பனுக்கு அவன் தந்தியடிக்க, தனது உண்மை நண்பனை அக்கற்பனை நண்பனாக நடிக்க வைக்கிறான். அப்புறம் வேடிக்கை என்னவென்றால் அவன் கூறிய கற்பனை நபரின் பெயரில் உண்மையாகவே ஒருவன் இருக்கிறான். அதுவும் அவன் கூறிய முகவரியிலேயே இருக்கிறான். இப்படியாகக் கதை வளர்ந்து மூன்று தம்பதிகளை உருவாக்கிக் கேலிக் கூத்தாடி விட்டு — சுலபமாக அவர்களை இணைத்துவிட்டு முடிகிறது.

"பூ! இவ்வளவுதானா?"

இப்படி ஏழெட்டு 'பூ இவ்வளவுதானா?' போட வேண்டியிருக்கும். இதில் பாத்திரமேற்றிருக்கும் ராதா சலுஜா, கிரண் குமார், ஐ. எஸ். ஜோஹர், அஸ்ரானி, மெஹ்மூத், ஜெலால் போன்றவர்களின் நடிப்பைப் பார்த்தபின்! பத்மா கன்னா மட்டும் இதற்கு விதிவிலக்கு. ஏற்ற பாத்திரத்தைக் கூடியவரையில் திறம்பட நிர்வகித்து விடுகிறார்.

இசையும் பாடலும் படு ஏமாற்றம். படமோ படுபடு ஏமாற்றம்.

-ரா.வி.



பூ! இவ்வளவுதானா?
— ஒன்றல்ல,
ஏழெட்டு தரம்
போடுங்கள்
அக் கேள்வியை!



கணவன் இருந்தும் கழுத்தில் தாலி இல்லாத ஒரு பெண்! கழுத்தில் தாலி இருந்தும் கணவனோடு வாழாத இன்னொரு பெண்! இத்தனையும் போதாத குறைக்கு, தனக்குப் பிறந்த மகளையே 'உன் தந்தை யார்?' என்று கேட்டாளும் ஒரு தகப்பன்! (என்ன ஒன்றும் புரியவில்லையே? என்கிறீர்களா? நல்லதாய்ப் போயிற்று! புரியாத வரையில் க்ஷேமம்! விட்டுத் தள்ளுங்கள். ஆனால் இதுதான் திரைக்கதை!)

நடிப்புக்கு இலக்கணம் வகுத்த சிறந்த பழம்பெரும் நடிகை பி. பானுமதி இப்படத்தில் அதற்கு இலக்கியமும் இயற்றித் தந்திருக்கிறார். அற்புதமான நடிப்பு. சொந்தக் குரலில் பாடி மகிழ்வித்திருப்பதோடு ஆங்கில நடனப் பாட்டையும் பாடி அரங்கையே அயர வைத்திருக்கிறார். சகலகலாவல்லவரான பானுமதியின் நடிப்பாற்றல் திரைக்கதையின் பல குறைகளையும் மறைத்துவிடுகிறது. சபாஷ், பானுமதி!

நீண்ட காலத்துக்குப் பிறகு சரோஜா தேவியைச் சந்திக்கிறோம். நீண்ட இடைவெளிக்குப் பிறகு கல்லூரி மாணவியாகவும், காதல் கன்னியாகவும், கண்ணீர் விடும் காரிகையாகவும் அவரால் ரசிகர்கள் மெச்சும் விதத்தில் நடிக்க முடிந்திருப்பதே அவரது திறமைக்குச் சான்று பகருகிறது.

முத்துராமன் தம் திறமைக்குச் சவால் விடும் பாத்திரத்தை ஏற்றுச் சவால் விடுகிறார். காதலித்து, ஏமாற்றமடைந்து, கடைசியில் பண்பின் உறைவிடமாக மாறி அருமையாக நடித்திருக்கிறார். ஏவி. எம். ராஜன் மிகவும் உருக்கமாக நடிக்கும் சந்தர்ப்பத்தை நழுவவிட்டு விடாமல் நிறைவு செய்திருக்கிறார்.

நிர்மலா கவர்ச்சிக் கன்னியாகத் தோன்றிக் கவர்ச்சி ஆட்டங்கள் ஆடிக் கண்ணீரும் விட்டு நம்மைக் கவர்ந்து விடுகிறார்.

கிருஷ்ணன் — பஞ்சு டைரக்ஷன் இந்த வண்ணப் படத்தின் தனிச் சிறப்பு. ஒலிப் பதிவு மிகவும் சிறப்பாயிருக்கிறது. வில்லனின் சதி, 'டிஷ்யூம் டிஷ்யூம்' அடிதடிச் சண்டைகள், எதிர்பார்த்தபடியே நடக்கும் சம்பவங்கள், சொல்லி வைத்த மாதிரி நாடக பாணியில் நடைபெறும் நிகழ்ச்சிகள் ஆகியவை படத்தைப் பாடாய்ப்படுத்தி வைத்திருக்கின்றன.

கண்ணதாசனின் ''பூமாலை ஒன்று.....'' ''இரண்டு தாய்க்கு ஒரு மகன்....'' என்ற பாடல்கள் மிகவும் இனிமையாயிருக்கின்றன.

'நவநீதா' பிலிம்ஸின் ''பத்து மாத பந்தம்'' நம் திரைக்கதைகளில் தொன்றுதொட்டுத் தொடர்ந்து வரும் தொந்தம்.

— காந்தன்

பத்துமாத பந்தம்

தர்மா

சம்பல் பள்ளத்தாக்கில் வாழ்ந்துவரும் கொள்ளைக் கூட்டத்தினரை விநோபா அடிகளும், ஜெயப் பிரகாஷ் நாராயண் அவர்களும் நற்பிரஜைகளாக மாற்ற எடுத்துக்கொண்ட முயற்சிகள் பத்திரிகைகளில் பிரபலமாக வந்தாலும் வந்தன, சினிமா உலகத்துக்கு நல்ல அதிர்ஷ்டமாகப் போய்விட்டது. கதைப் பஞ்சம் நீங்கிவிட்டது. கொள்ளைக்காரர்களை வைத்து வரிசையாகப் படங்கள் வரத் தொடங்கியிருக்கின்றன. அவ்வகையில் ஒன்றுதான் "தர்மா".

ஸேவக் சிங் என்ற ஏழை விவசாயிக்கு ஏற்பட்ட கஷ்டம், அவனைத் தர்ம சிங் என்னும் பயங்கரக் கொள்ளைக்காரனாக மாற்றுகிறது. கொள்ளைக்காரனையும் அவன் கூட்டத்தாரையும் பிடித்தே தீருவது என்ற போலீஸ் இன்ஸ்பெக்டர் அஜீத் சிங்கின் முயற்சியின் பயனாக, கொள்ளைக்கூட்டம் அழிகிறது. கொள்ளைக்கூட்டத்தினரின் தலைவன் தர்ம சிங் ஒரு புறமும், அவன் மனைவி ஒரு புறமும் மகன் ஒரு புறமும் பிரிக்கப்படுகின்றனர்.


போலீஸ் இன்ஸ்பெக்டர் அஜீத் சிங்குக்கும் நஷ்டம் ஏற்படாமல் போகவில்லை. மனைவி துர்மரணம் அடைகிறாள். பெண் குழந்தை அபகரிக்கப்பட்டு எங்கோ வாழ்கிறாள்.

பிறகு சந்தன் என்ற நவநாகரிகக் கொள்ளைக்காரனும், ராஜு என்ற இளம் சகாவும் தோன்றுகின்றனர். ராதா என்ற நாட்டிய இளம் கணிகையும் ராஜுவும் காதல் கொள்கின்றனர்.

கதை பலவித சிக்கல்களும், பின்னல்களும் போட்டுக்கொண்டு வேகமாக முன்னேறுகிறது. பாமர ரஞ்சகமான டப்பாங்குத்துச் சண்டைகள் வேண்டிய அளவு உள்ளன.

நவீன் நிச்சல், ரேகா, பிரான் ஆகியோர் முக்கிய பாத்திரங்களை ஏற்று நடிக்கின்றனர். பிரான், ஒரு முஸ்லிம் ஜமீன்தாராக நடிக்கும் பகுதி, அவர் ஒரு கைதேர்ந்த நடிகர் என்பதை நிரூபித்துக் காட்டுகிறது.

-எஸ்.வி.எஸ்.



★ ★ ★

சினிமாவே வேஷங் கட்டி நடிப்பது தான். அதிலும் எத்தனை எத்தனை வேஷங்களைப் பிரான் ஏற்று நடிக்கிறார்! அவருக்கு ஒரு "மாறுவேட மன்னன்" பட்டம் கொடுக்கத் தோன்றுகிறது.

★ ★ ★






உங்கள் நகங்களில்
முகம் பார்க்கும் பளபளப்பு ஏற்றுவீர்—
உயரிய முறையில் உருவான
ஸ்டெப் நெய்ல் பாலிஷ் மூலம்!
விரல் நுனிகளுக்கு வியனழகூட்டும் அணி—
Step®
நெய்ல் பாலிஷ்
Step
Pearl
Step
Step
FROSTED
APRICOT
ICE
அழகிய சாயல்களிலிருந்து உங்களுக்குப்
பிடித்தவற்றைத் தேர்ந்தெடுப்பீர்!

Printed & Published by R. Ananthanarayanan on behalf of Messrs. Bharathan Publications Private Limited at Kalki Press, Chetput, Madras-600031
Managing Editor: T. Sadasivam

எஃகு நகரம்
ஒரு பூஞ்சோலை நகரமாகவும் ஆக முடியுமா?



இந்தியாவின் எஃகு நகரமான ஜாம்ஷெட்பூர் ஒரு முன்மாதிரி நகரமாகத் திகழவேண்டும் என்றே திட்டமிடப்பட்டிருந்தது.

''நிழல் தரும் மரங்களைக் கொண்ட, அகன்ற தெருக்களாக அமைத்திட மறந்திட வேண்டாம். ஒன்று விட்டு ஒன்று, துரிதமாக வளர்ந்திடும் வகை மரங்களை நடவும். புல்வெளிகளுக்கும் பூங்காக்களுக்கும் போதிய வசதி செய்திடவும்.''—என்று ஜாம்ஷெட்ஜி டாடா தனது மகன் தோராப்புக்கு எழுதியிருந்தார்.

இன்று ஜாம்ஷெட்பூர் அவ்வண்ணமே உள்ளது—எஃகு நகரத்தோடு ஒரு பூஞ்சோலை நகரமாகவும் பரிமளிக்கிறது.

குடியிருப்பு வீடுகள் கூட, எழுபது ஆண்டுகளுக்கு முன்னர் ஜாம்ஷெட்ஜி வெளியிட்ட விருப்பங்களை நினைவில் நிறுத்தி, திட்டமிட்டு அமைக்கப் பட்டிருப்பதோடல்லாமல், இன்னும் விரிவுபடுத்தப்பட்டுக்கொண்டே இருக்கின்றன.



டாடா ஸ்டீல்

REGISTERED No. M. 4392
Registered as a Newspaper in Sri Lanka இலங்கையில் விலை 50 சதம் (தபால் செலவு தனி)

The first auto ancillary plant in MALAYSIA

A PROUD TESTIMONIAL TO A JOINT EFFORT BETWEEN TWO DEVELOPING NATIONS

India Pistons, a pioneer piston assembly manufacturer in India has joined hands with Malaysian interests to start a new manufacturing venture- MALAYSIA PISTONS SDN. BHD. The plant which is now under construction at the Senawang industrial estate in the State of Negri Sembilan will shortly commence manufacture of Pistons and Cylinder liners to meet the fast expanding needs of the automobile industry in Malaysia.

It is significant that two developing nations have joined hands in communicating know-how which will eventually make Malaysia self-sufficient for this vital range of auto ancillaries.

INDIA PISTONS LIMITED
Madras 600 011
INDIA

MALAYSIA PISTONS SDN.BHD.
Jalan Sulaiman Kuala Lumpur
MALAYSIA

has fresh Indian know-how



IP 187